www.tamilarangam.net

# சமர்

இதழ்-28




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கிய நாட்டுச்சபையின் உலகமயமாதலை விரைவாக்கும் ஆக்கிரமிப்புகள், மனித விரோத குற்றங்களாகும்

ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்புகள் அமெரிக்காவின் தலைமையில் மேற்கின் ஆதரவுடன் உலகை, உலகமயமாதலை நோக்கி வழிநடத்திச் செல்லும் மக்கள் விரோத சர்வதேச குற்றவாளியாக பரிணமித்துள்ளது. 1990 களில் ஈராக் மீதான அமெரிக்கா தலைமையிலான ஐக்கிய நாடுகளின் வரைமுறையற்று அழித்தொழிக்கும் ஆக்கிரமிப்பின் போதும், யூக்கோசிலாவியா மீதான ஆக்கிரமிப்பின் போதும் நடத்திய தாக்குதல்கள் மிலேச்சத்தனமானவை. அணுகுண்டுக்கு பாவித்த யூரேனியக் கழிவுகளை கொண்டு தயாரிக்கப்பட்ட யூரேனியக் குண்டுகள், இந்த நாட்டு மக்கள் மீது வரைமுறையற்ற வகையில் வரலாறு காணாத வகையில் வெடிக்க வைக்கப்பட்டது. உலக ஜனநாயக வாதிகள் மற்றும் கம்யூனிச எதிர்ப்பு அறிவுஜீவிகளின் போராட்டமற்ற மௌனம் சாதிக்கும் சர்வதேச முற்போக்கு ஆய்வுகளிலும், மறுவாசிப்பிலும், தேடுதலின் பின்பு தான், இவை ஐக்கிய நாடுகளின் ஜனநாயக சுதந்திர ஆயுதமாக நீடிக்கின்றது.

இக்குண்டுகளை மக்கள் மீது வீசக் காவிச் சென்ற விமானம் மற்றும் இதனுடன் தொடர்புபட்டு ஜனநாயகம் பாதுகாக்கச் சென்ற சுதந்திர ஜனநாயக வீரர்கள் பரிதாபகரமாக மேற்கில் இறந்தும், நோய்வாய்ப்பட்டும், அவர்களுக்கு பிறந்த குழந்தைகள் யூரேனிய கதிர் வீச்சில் அவலமாக வக்கரித்து பிறக்கின்ற நிலையிலும், சொந்த மனைவியே இதில் இருந்து தப்பித்துச் செல்லும் பரிதாபகரமான நிலையில், "சுதந்திரமான வீரனின்" நடைப்பிணமான அவலத்தின் மூலமே, இந்த மனித விரோதம் மீண்டும் ஒரு முறை ஜனநாயகத்துக்கு எதிராக அம்பலமாவது அதிகரித்துள்ளது. இதை ஆராய முனையும் விசாரணைக் கமிசன்கள் முதல் அனைத்தும், உலகமயமாதல் ஜனநாயகத்தை பாதுகாத்த வீரர்கள் சார்ந்து, விசாரணையின் பின்பு மூடிமைறைப்பு என்ற நாடகம் அரங்கேறுகின்றது. பாதிக்கப்பட்ட உலகமயமாதல் ஜனநாயக வீரர்களின் மருத்துவம், இதை தடுப்பதற்கான வழிவகைகள், இதற்கு எதிரான மருந்துகளின் உற்பத்தி என்று, இந்த யூரேனிய ஆயுதத்தை தொடர்ந்து பாதுகாப்பாக உலகமயமாதல் விரிவாக்கத்துக்கு எதிரான மக்கள் மீது எப்படி பயன்படுத்துவது என்றே விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாட்டுச் சபை இந்த யூரேனிய குண்டுகளை தடை செய்ய வேண்டும் என்ற வேண்டுகோள்களை மறுத்து, தனது சர்வதேச குற்றத்தை தொடர சபதம் ஏற்று நிற்கின்றது.

ஈராக்கில் ஜனநாயக சுதந்திர ஐக்கிய நாடுகளின் ஆக்கிரமிப்பின் கீழ், கடந்த பத்து வருடத்தில் 10 லட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். குழந்தைகளையும், பெண்களையும் ஈவு இரக்கமின்றி அதிகமாக காவு கொண்ட, இந்த யூரேனிய சுதந்திர யுத்தத்தின் விளைவுகளை, ஜனநாயக சுதந்திர செய்தி ஊடகங்கள் மூடி மறைத்து இருண்ட திரையிடுகின்றனர். சமூகத்தை ஆய்வு செய்து தேடிக் கொண்டிருப்போரின் மலட்டு விபச்சாரத்தில், இந்த சர்வதேச குற்றம் கள்ளக் குழந்தையாக மூடி மறைக்கப்படுகின்றது. மெதுவாக கசிந்து வரும் தகவல்கள் சர்வதேச தலையாய மக்கள் விரோத குற்றவாளிகளை, மீண்டும் ஒரு முறை உலகுக்கு பறைசாற்றுகின்றது. யூக்கோசிலாவியா மக்கள் மீது வீசப்பட்ட குண்டுகள் அயல்நாட்டு தூதரகங்களைக் கூட இலக்கு தவறாது அழித்த போது, அந்த மக்களின் மீதான யூரேனிய பாதிப்பு, இன்னமும் திட்டமிட்டே சுதந்திர செய்தி மற்றும் ஆய்வுகளால் இருட்டடிக்கப்படுகின்றது. ஜனநாயகம், உலகமயமாதல் மூலதனத்தை விரிவாக்குவதில் சுதந்திரமாக உள்ள போது, சர்வதேச குற்றவாளிகள் தான் அதன் நீதிபதிகளாக இருப்பது இயற்கையாகும். பத்து லட்சக்கணக்கில் ஐக்கிய நாட்டுச்சபையின் தலைமையில் மக்களை கொன்று போடும் சுதந்திர உலகமயமாதல் யுத்த வெறிக்கு எதிரான மக்களின் தீர்ப்பு, பாட்டாளி வர்க்க சர்வாதிகார நீதி மன்றங்களில் மட்டும் தான் தண்டனைக்குள்ளாகும். பாட்டாளி வர்க்க நீதிமன்றங்களில் இந்த சுதந்திரமான ஜனநாயக குற்றவாளிகளை நிறுத்தும் போராட்டத்தை நோக்கி போராடுவதன் ஊடாகவே, குற்றவாளிகளை தனிமைப்படுத்தி, சர்வதேசிய பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவுவது எம்முன்னுள்ள வரலாற்றுக் கடமையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மாவீரர் தின உரைகளும், *சமாதானப் பேச்சுகளும்*



தமிழ் மக்களின் சுயநிர்ணயப் போராட்டம் இன்று ஏகாதிபத்திய நாடுகளின் உலகமயமாதல் ஆக்கிரமிப்பு வலைக்குள் சிக்கி திணறுகின்றது. உலகம் என்பது மையப்படுத்தப்பட்ட அரசியல் பொருளாதார பண்பாட்டு கலாச்சார எல்லைக்குள் வேகமாக தனித்துவங்களை இழந்து வருகின்றது. சுதந்திரமான ஜனநாயகம் என்பது உலகமயமாதலால் எல்லைக்குள் விரிந்த வடிவில் கோரப்படும் போது, இதை மறுப்பது ஜனநாயக விரோதமாகவும், பயங்கரவாதமாகவும் சித்தரிக்கப்படுகின்றது. உலகெங்கும் சிதறி பரந்து வாழும் மக்களின் தனித்துவமான பண்பாடுகள், கலாச்சாரங்கள், பொருளாதாரம், அரசியல் என அனைத்தும் இன்று உலகமயமாதலால் அமைதியாகவும், பொருளாதார ஆதிக்கத்தாலும், இராணுவ மிரட்டல் மற்றும் ஆக்கிரமிப்பால் அழிக்கப்பட்டு சிதைக்கப்படுகின்றது. இதற்கு எதிரான உணர்வுகள் போராட்டமாக மக்களின் வாழ்வியல் பிரச்சனையாக எழுகின்ற வரலாற்றில், தேசியம் முதல் பாட்டாளி வர்க்கப் போராட்டம் வரை உயிர்ப்புள்ள மக்களின் சித்தமாக காணப்படுகின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டம் உலகமயமாதலுக்கு எதிரான தேசியமாகவும், வர்க்கப் போராட்டமாகவும் உள்ளடக்கத்தில் இருந்த போதும், இன்று இதை தலைமை தாங்கும் புலிகள் இதை கோட்பாட்டிலும், நடைமுறையிலும் மறுத்து நிற்கின்றனர். தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கைக்கும், புலிகளின் தமிழீழத் தாகத்துக்கும் இடையில் உள்ள அடிப்படை வேறுபாடு, தேசியக் கோரிக்கையின் நியாயமான கோரிக்கைகளை ஏகாதிபத்தியத்திடம் அடகு வைப்பதில் இட்டுச் செல்லுகின்றது.

சிங்கள இனவெறி அரசு தமிழ் மக்களின் பண்பாட்டு கலாச்சாரத்தைக் கூட இன அடையாளமாக கொண்டு தாக்கும் அளவுக்கு, தமிழ் மக்கள் மீதான இன வெறுப்பை ஒவ்வொரு தனித் தமிழன் மீதும் கட்டமைத்துள்ளது. தமிழன் என்றால் அவன் பயங்கர வாதி என்ற உணர்வுகளை விதைத்து ஆட்சி அமைக்கும் அதே நேரம், புலிகள் அப்பாவி சிங்கள மக்களுக்கு எதிராக நடத்தும் எந்த ஒரு தாக்குதலையும் ஏகாதிபத்தியங்கள் தமிழ் மக்களை பயங்கரவாதமாக சித்தரிப்பது நிகழ்கின்றது. இதன் மூலம் தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை பயங்கரவாதமாக்கி அழிப்பதில் பொதுமைப்படுத்தல் அவசியமாகின்றது. அதாவது தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை, புலிகளின் குறுந்தேசிய வெறிக்குள்ளான இராணுவ நடத்தைக்குள் ஏகாதிபத்தியங்கள் பொதுமைப்படுத்தி, தேசிய சிதைப்பை உலகமயமாக்கின்றது.

விடுதலைப் புலிகளை ஆதரிப்போரும், தமிழ் தேசியம் தொடர்பாக ஆய்வுகள், கட்டுரைகளை வரைபவர்கள் தமிழ் சிங்கள முரண்பாட்டை, சிங்கள இனவாத ஆய்வாளர்கள் போல் மன்னர் காலம் தொட்டு வரலாற்றை இனவாதமாக்கின்றனர். அவர்கள் தமது தமிழ் தேசிய குறுங்குழுவாதத்தைப் பலப்படுத்த, தமிழ் சிங்கள மன்னர்கள் மொழி அடிப்படையில் பிரிந்து போராடியதாக சோடித்துக் காட்டுவதில் அதிகமாக தமது தமிழ் இனவாதத்தை கட்டமைத்து, வரலாற்றை இருட்டடிக்கின்றனர். உலக வரலாற்றில் மன்னர் வரலாறுகளில் என்றுமே மொழி சார்ந்த யுத்தங்கள் நடந்ததில்லை. அதாவது மொழி சார்ந்த யுத்தம் என்பது மன்னர்கள் வரலாற்றில் உலகில் எங்குமே இருந்ததில்லை. மதம் சார்ந்த யுத்தங்களே பொதுவாகவும், பாரம்பரிய மன்னர்கள் சார்ந்து பரம்பரை அமைப்பு சார்ந்த யுத்தங்களே இங்கு அடிப்படையாக இருந்துள்ளது. இவ்யுத்தங்கள் பின்னணியில் வர்க்கத் தன்மையும், சில வர்க்கத்தின் நலன்களும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் அடிப்படையாக இருந்துள்ளது. இன்னொரு மொழியை பேசுகின்றான் என்ற ஒரே காரணத்தால் யுத்தம் நடக்கவில்லை. மொழி சார்ந்த யுத்தம் என்பது மதத்தின் அழிவையும், தேசங்களின் தேசிய பொருளாதார உருவாக்கத்திலும் இருந்தே உயிர்தெழுந்தது. தேசங்கள் விரிந்த பரப்பில் தேசிய பொருளாதாரத்தை கட்டமைத்த போதே, மொழி மீதான வன்முறை அடிப்படையாகியது. இன்று தேசிய விடுதலையை வெறும் மொழி சார்ந்து கட்டமைக்கின்ற போது, அது இனவாதமாக மாறிவிடுகின்றது. தேசியம், தேசிய பொருளாதாரம் சார்ந்தது என்பதை மறுக்கின்ற புலிகள், மொழி சார்ந்து குறுகிய இன தேசிய வெறியர்களாக மாறிவிடுகின்றனர்.

மாவீரர் தின உரைகள் பல குறுகிய இனவாத கண்ணோட்டத்தை அடிப்படையாக கொண்டு, ஆணாதிக்கத்துடன் கூடிய பிற்போக்கு யாழ் உயர் சாதி நிலப்பிரபுத்துவ பண்பாட்டை வெளிப்படுத்துவதை புலிகளால் தடுக்க முடியவில்லை. சர்வதேச ரீதியாக புலிகள் மேலான நிர்ப்பந்தம் மூலம் பேச்சவார்த்தைக்கு உடன்பட வைத்தது, அதையே புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரையில் முக்கியமான விடையமாக்கியது முதல், போர் நிறுத்தம் செய்ய வைத்தது வரை நடந்த ஏகாதிபத்திய ராஜதந்திர நகர்வுகள், அரசை நெருக்கடிக்கு நகர்த்தியுள்ளது. இது புலிகளின் வரலாற்றில் அரசியல் ராஜதந்திர நகர்வில் முதன் முதலாக தற்காலிகமான வெற்றிகரமான ஒரு அரசியல் நடத்தையாக இருந்த போதும், இதை முன்வைத்த முக்கிய உரைகளில் காணப்படும் மற்றைய கூறுகள் பிறபோக்காக காணப்படுகின்றது. இவை எல்லாம் ஒருங்கே பார்க்கின்ற போது, பேச்சுவார்த்தை மற்றும் யுத்த நிறுத்தம் புலிகளின் சொந்த முடிவல்ல (இது பற்றி புலிகளின் மாவீரர் தின உரைகள் உறுதி செய்கின்றன), ஏகாதிபத்திய நிர்ப்பந்தத்தை அடிப்படையாக கொண்ட முடிவைக் காட்டுகின்றது. இன்று வெற்றிகரமான அரசியல் நகர்வாக கருதப்படும் இந்த ராஜதந்திர நடத்தைகளின் பின்னணியில் ஏகாதிபத்தியங்கள் இருப்பதால், ஆபத்தான அடுத்த நெருக்கடியை புலிகளுக்கு எதிராக இதன் பின்னணியில் கொண்டிருப்பது தெளிவானதாகும்.



புலிகளின் மாவீரர் தின உரைகளுக்குள் காணப்படும் தேசிய விரோத கண்ணோட்டங்களை இதன் பின்னணியில் பார்ப்போம். புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரையில் "... எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் கழுத்தைத் திருகிய படி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து..." என்று தொடர்கின்றார். இது போல் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் யாழ்ப்பாணம் மீதான புலிகள் தாக்குதல் நடத்த முன்முயற்சி எடுத்ததை அடுத்து, உலக நாடுகளிடம் சிங்கள இனவெறி அரசு கையேந்திய நிகழ்ச்சி பற்றி "யாழ்ப்பாணத்தை பிடித்து தனியரசாக அமையப் போகின்றது" என்ற பேச்சுகள், எதை எமக்கு தேசியம் சார்ந்து சுட்டிக் காட்டுகின்றது. புலிகளின் போராட்டம் யாழ்ப்பாணப் போராட்டமாகவும், புலிகளின் தாகம் யாழ்ப்பாண கணணோட்டமாகவும் வெளிப்படுகின்றது. அதாவது "யாழ்ப்பாணத்தை பிடித்து தனியரசாக அமையப் போகின்றது" என்பது எப்படி அது மட்டும் தனியரசாக இருக்கும். தமிழீழம் யாழ்ப்பாணமா! தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான தேசிய விடுதலைப் போராட்டம் யாழ்ப்பாண மையவாதமாக இருப்பதையும், அதையே தாகமாக பிரகடனம் செய்வது குறுந்தேசிய வாதத்தின் அபாயத்தை மீண்டும் ஒரு முறை எமக்கு காட்டுகின்றது. பாலசிங்கத்தின் லண்டன் மாவீரர்தின உரையில் சிங்கள இனவெறி அரசுக்கு தலைமை தாங்கும் சிங்கள இனவெறி பிரதமர் உரைகள் பற்றி குறிப்பிடும் போது "கிராமப்புரத்தான்" என்றே கிண்டல் அடிக்கின்றார். இதன் மூலம் நகரவாசிகளின் பண்பாடு உயர்ந்தவை என்பதே, புலிகளின் அரசியல் ஆலோசகரின் சமூக கண்ணோட்டமாகும். இவை தான் யாழ்ப்பாணம் பற்றியும், யாழ் மைய வாதத்தையும் வெளிப்படுத்தும் உரைகளாகின்றன.

புலிகளுக்கு அவர்களின் நீண்ட பல போராட்டங்களில் ஏற்பட்ட நெருக்கடிகளின் போது, புலிகளை பாதுகாத்த கிராமங்கள் பற்றியும், புலிகளை ஆயிரமாயிரமாக ஆயுதபாணியாக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

''கிராமப்புரத்தான்'' பற்றிய ஒரு சமூக கண்ணோட்டம் இன்றி, ''எமது தேசத்தின் கலாச்சாரத் தலைநகரான யாழ்ப்பாணத்தின் வாசற்படியை அண்மித்து நிற்கின்றன'' என்று அவனுக்கு எதிரான யாழ்ப்பாண கலாச்சாரத்தையும், யாழ்ப்பாண தனிநாட்டையும் முன்வைப்பது, எமது தேசத்தின் சுயநிர்ணயத்தை கொச்சைப்படுத்துவதாகும். யாழ்ப்பாண பண்பாடு மற்றும் கலாச்சாரம் சார்ந்த பொருளாதார இலக்குகள் படுபிற்போக்கானவை. யாழ் பொருளாதாரம் பூர்சுவா கண்ணோட்டம் கொண்ட தப்பியோடும் சுயநலத்தை அடிப்படையாக கொண்டது. நிலப்பிரபுத்துவ வக்கிரத்துடன் ஆணாதிக்கத்தை அடிப்படையாக கொண்டதுடன், சாதி ஆதிக்க வக்கிரத்தையும் கொண்டது. கிழக்கு மற்றும் வன்னி மக்கள் பற்றி, யாழ் பண்பாடு கலாச்சார கண்ணோட்டம் இழிவாக மதிப்பிடுகின்றது. எவ்வளவுக்கு மற்றைய பண்பாட்டு கலாச்சாரத்தை இழிவாக வரையறுக்க முடியுமோ அந்தளவுக்கு, யாழ் பண்பாடு அம்மக்களையிட்டு கொச்சைப்படுத்துகின்றது. தமிழ் மக்களின் பண்பாடு என்பது, யாழ் சாதிய ஆணாதிக்க நிலப்பிரபுத்துவ பண்பாட்டுக்கு எதிரானதாக இருக்க வேண்டும். வன்னி மற்றும் கிழக்கின் பண்பாட்டை யாழ் பண்பாட்டுடன் ஒப்பிடும் போது, சாதி மற்றும் ஆணாதிக்கம் குறைந்தளவிலேயே கோலோச்சுகின்றது. தமிழ் மக்களின் பொதுப் பண்பாடு இந்த மக்கள் சார்ந்தே புரட்சிகரமாக வேண்டும். அதாவது இன்று புலிகளின் பாதுகாப்புக்கும், புலிகளின் இராணுவமயமாக்கலுக்கும் எந்த மக்கள் தியாகத்துடன் துணையாக நிற்கின்றனரோ, எந்த மக்கள் புலிகளின் வெற்றிக்கு துணையாக நிற்கின்றனரோ அவர்கள் சார்ந்து தேசியம் உயர்த்தப்பட வேண்டும் இன்றைய யாழ் மையவாத குறுந்தேசியத்துக்கு பதில், போராடும் மக்கள் சார்ந்து தேசியம் தனது சுயநிர்ணயத்தை போராடிப் பெற வேண்டிய வரலாற்றுக் கட்டத்தில் நாம் நிற்கின்றோம். அத்துடன் ''யாழ்ப்பணத்தின் கழுத்தைத் திருகியபடி குடாநாட்டை வன்னி மாநிலத்துடன் துண்டித்து..'' என்ற வாதம் இந்துமதத்தின் பார்ப்பணிய வருணச்சித சாதிய எல்லைக்குள் வெளிப்படுகின்றது. பார்ப்பான் தலையில் பிறந்ததாக கூறி, அவனின் பண்பாடும், கலாச்சாரமும், பொருளாதார ஆதிக்கமும் உயர்ந்ததாகவும், அனைத்தின் மூலமாகவும் பார்ப்பணியம் உருவாக்கியுள்ளது. இதையே புலிகள் யாழ் பண்பாடு கலாச்சாரத்தை தமிழீழத்தின் உயர் பண்பாடாகவும் காட்டி, யாழ்க்குடாவை தமிழீழத்தின் தலையாக சித்தரித்ததன் மூலம், தமிழ் தேசியம் குடாநாட்டு பொருளாதார பண்பாட்டு கலாச்சாரத்தினை அடிப்படையாக கொண்டு, மற்றையவற்றை அடக்கியாளுகின்றது என்பதற்கு இவ்விளக்கமே மறைமுகமாக போதுமானது. தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலை என்ற தேசிய கண்ணோட்டங்கள், எப்போது கைவிடப்பட்டன? மற்றைய கலாச்சாரங்கள் யாழ் கலாச்சாரத்துக்கு கீழ்ப்பட்டவையா? எப்படி? அல்லது யாழ் கலாச்சாரம் எப்படி மற்றையவற்றை விட மேலானவை? யாழ் ''கலாச்சார தலைநகரம்'' என்பது என்ன?



யாழ் குறுகிய தேசிய கண்ணோட்டத்தில் இருந்தபடி பாலசிங்கம் தனது மாவீரர் தின உரையில் ''மோட்டுச் சிங்களவன்'' என்று அழைத்த போது தமிழ் மோட்டுப் பெருமைக்கு கரகோசத்தை சபை வழங்கியது. சிங்கள மக்களை ''மோடன்'' என்று பொதுமைப்படுத்தி மோடனாக்கியது, அரசியலில் சூனியமானது தமிழனின் மோட்டுத்தனமல்லவா! இது ஒரு அரசியல் தலைவரின், ஏன் புலிகளின் முக்கிய அரசியல் ஆலோசகரின் உரைகளில் வெளிப்படும் போது, இது யாழ் குறுந்தேசிய குறுகிய அரசியல் வக்கிரத்தை காட்டுகின்றது. மேலும் அவரின் மாவீரர் தின உரையில் சந்திரிக்கா பற்றி, சென்ற மாவீரர் தின உரையில் பேசியது பற்றி, நோர்வே கேட்டதைப் பற்றி நக்கலடித்த போது ''சின்ன சின்ன ஆசைகள் எனக்கு உண்டு'' என்று கூறி தனது ஆணாதிக்க பாலியல் வேட்கையூடாக சந்திரிக்காவின் பெண் அடையாளம் ஊடாகவே தேசியத்தை கொச்சைப்படுத்தினார். இது போன்று பல்வேறு முரண்பட்ட இனவாதிகளை குறியீடாக்கி, அவர்களை குறித்து சந்திரிக்கா தனது மடியில் பல்வேறு தேள் மற்றும் கொடுக்கனை கட்டிவைத்துள்ளார் என்றார். அது ஒரு நாளைக்கு கடிக்கக் கூடாத இடத்தில் கடித்துவிடும் என்றார். சந்திரிக்கா பெண் என்ற அடையாளத்தை அடிப்படையாக கொண்டு அவரின் பெண் உறுப்பை குறியீடாக கொண்டு செந்தில் பாணியில் ஆணாதிக்க பகிடி விட்ட போது, கூடியிருந்த கூட்டம் விசிலடித்து கரகோசம் செய்வதை தொலைக் காட்சிப் பதிவுகள் பதிவு செய்து ஐரோப்பிய வான் அலைகளின் ஊடாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நேரடியாக உடனுக்குடன் ஒலிபரப்பத் தவறவில்லை. பெண்ணின் உறுப்புகள் மீது கிண்டல் அடித்தே பல்கலைக்கழக பகிடிவதை என்னும் "ராக்கிங்" என்ற வதையும் சரி, பெண்களை வீதி வதை செய்யும் இளைஞர்கள் சரி, செந்தில் சினிமா ஆணாதிக்க பகிடிகள் சரி எல்லாம் ஒரே வகையில் கட்டமைக்கப்படுகின்றது. இப்படி கிண்டல் செய்வது புலிகளின் யாழ்ப்பாண நிர்வாக முன்னைய சட்டக் கோவைகள் தெளிவாக தடைசெய்து, தண்டனைக்குரிய குற்றமாக தண்டித்தது. ஆனால் அதை சிங்களப் பெண்ணுக்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் செய்கின்ற போது விசிலடித்து கைதட்டுவது குற்றமற்றுப் போகின்றது. புலிகளின் பெண் விடுதலை பற்றியும், ஆணாதிக்க ஒழிப்பு பற்றிய நம்பிக்கையையும் கொண்டிருப்போர், புலிகளின் முக்கிய அரசியல் ஆலோசகரின் ஆணாதிக்க கிண்டல் மூலம், அரசியல் எதிரிகளை இழிவுபடுத்திய நிகழ்வுகள், தமிழ்ப் பெண்களின் மீதான ஆணாதிக்க விடுதலை என்பது கற்பனை என்பதையே மீளவும் ஒரு முறை பறைசாற்றுகின்றது. அரசியல் எதிரி எவ்வளவு இழிவானவனாக இருந்தாலும், அவனை அரசியல் ரீதியாக அம்பலம் செய்ய வேண்டும். அதைவிடுத்து "மோடன்", மற்றும் பெண் உறுப்புகளை சார்ந்து கிண்டல் அடித்து விசில் சத்தத்தில் அரசியல் வளர்க்கும் போது, தமிழ் மக்களின் தேசியமும், தியாகமும் கொச்சைப்படுத்தப்படுகின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை சந்திரிக்காவின் பெண்மை மீதான, ஆணாதிக்கம் கொண்டு கோரப்படவில்லை. அப்படி அரசியல் ஆலோசகர் பாலசிங்கம் கோருவது, கிண்டல் அடிப்பது, தமிழ் தேசியத்தை குறுகிய ஆணாதிக்க யாழ் மையவாத இனவாதத்துக்குள் மேலும் ஆழமாக சிதைப்பதை குறித்து நிற்கின்றது. முன்பு சிங்கள இனவெறி பாசிச அரசு புலிகளின் பெண் போராளிகளை கொன்று சடலங்களை கைப்பற்றிய போது, இறந்த பெண்களின் சடலங்களை நிர்வாணப்படுத்தி, அதை தொலைக் காட்சியில் படமாக்கி ஆணாதிக்க சிங்கள இனவாத யுத்தத்துக்கு ஆள்திரட்டிய போது, இழிந்து போன ஆணாதிக்க மனித நாகரிகத்தை மீண்டும் ஒரு முறை இனம் சார்ந்து நிறுவியது. பாலசிங்கத்தின் பெண்கள் பற்றிய பார்வை இது போன்று இழிவாக இருப்பதும், எமது தேசவிடுதலைப் போராட்டத்தின் பிற்போக்குத் தன்மையை வெளிப்படுத்துகின்றது.



மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலப்படுத்தும் வகையில், புலிகளின் தவறுகளை சுயவிமர்சனம் செய்யத் தவறியவற்றைப் பார்ப்பது மேலும் அவசியமாகும்.

1.தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றி புலிகளின் ஊடாக தியாகம் புரிந்த, அண்ணளவாக 18 ஆயிரம் போராளிகள் சரி, புலிகள் உள்ளிட்ட மாற்று இயக்கத்தில் துரோகம் அல்லாத வழியில் உட்கட்சிப் போராட்டம் மற்றும், மாற்று இயக்க படுகொலைகள் ஊடாக தியாகம் புரிந்த சில ஆயிரம் போராளிகள் சரி, அண்ணளவாக ஒரு லட்சம் மக்களின் இழப்புகள் சரி, பல பத்தாயிரம் விதவைகளை உருவாக்கியும், சில ஆயிரம் குழந்தை அனாதைகளையும், சில பத்தாயிரம் அங்கவீனர்களையும், சில லட்சம் அகதிகளையும், சில ஆயிரம் காணாமல் போயுள்ள நிலையிலும், சில பத்தாயிரம் குழந்தைகள் கல்வியை இழந்தும், சில பத்தாயிரம் மனநோயாளிகளை உற்பத்தி செய்தும், பல ஆயிரம் பேர் உறவுகளை இழந்து தனிமையில் செத்துக் கொண்டும், பல நூறு கோடி சொத்துகளை இழந்த எமது தேசிய விடுதலைப் போராட்டம், இறுதியாக எதை எமக்கு பெற்றுத் தரப் போகின்றது என்பது எமது அடிப்படையான கேள்வியாகும். இங்கு எமது தேசியம் பற்றி நாம் மீள ஒருமுறை சுயவிமர்சன நோக்கில் பார்ப்பது அவசியமானது. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் எவ்வளவுக்கு எவ்வளவு அவசியமானதும் நிபந்தனையானதுமாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு தேசியத்தின் அடிப்படைக் குறிக்கோள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு தேசத்தின் தேசியம், தனது பொருளாதாரத்தை கட்டவும் பாதுகாக்கவும், அதன் பண்பாட்டுக் கலாச்சாரத்தை உறுதி செய்து மொழியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்த்தெடுக்கவும், சொந்த நிலத் தொடர் மீது தனது தேசிய பொருளாதாரத்தை நிறுவுவதாகும்.

தமிழ் மக்களின் சயநிர்ணய உரிமையை அடிப்படையாக கொண்ட தேசியத்தின், தேசிய பொருளாதாரத்தை அரசியல் ரீதியாக முன்வைப்பதை திட்டமிட்டே புலிகள் புறக்கணிக்கின்றனர். இதற்கு மாறாக தமிழ் இன அரசு பற்றி மட்டும் பேசுகின்றனர். தமிழ் ஆளும் அரசு பற்றி மட்டும் முன்னிறுத்தி தமிழீழமாக சித்தரிப்பது, தேசியத்தின் அடிப்படைக் கூறை மறைமுகமாக கைவிடுவதாகும். தேசியம் என்பது தேசத்தின் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்டு, அதற்கு எதிரான அனைத்து சக்தியையும் எதிர்ப்பதாகும். புலிகளின் அரசியலில் அவைகளை வெறும் சிங்கள அரசு சார்ந்த மொழி சார்ந்ததாக மட்டும் காட்டியதன் மூலம், தேசத்தின் பொருளாதார பண்பாட்டுக் கலாச்சாரத்தை சிதைக்கும் வகையில், அன்னிய பொருளாதாரமும் பண்பாடும் கலாச்சாரமும் வேகமாக ஊடுருவி பாய்கின்றது. இது தேசத்தின் தேசியத்தை சிதைத்து அரித்து தின்கின்றது. இது தமிழ் மக்களின் தேசிய தியாகங்களை ஆழமாக தனக்கு உரமாக்கின்றது. தேசிய வரையறையை புலிகள் சரியாக முன்வைத்து, எதிரிகளை தனிமைப்படுத்தி போராடாத வரை, தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் அதன் தியாகங்களும் சிதைக்கப்பட்டு, வெறும் தமிழ் அரசை கோரும் அடிப்படையைக் கொண்டு, யாழ்குறுந்தேசியமாக மேலும் ஆழமாக சிதைந்து அழிவது தவிர்க்க முடியாது.

2.சர்வதேச ரீதியாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் மீது ஏகாதிபத்திய நேரடி தலையீட்டு அபாயம் நெருங்கியுள்ள நிலையில், முஸ்லிம் சிறுபான்மை மக்களின் உரிமையை அங்கீகரிக்கவும், அவர்களுக்கு தமிழ் குறுந்தேசியம் இழைத்த அநீதியை சுயவிமர்சனம் செய்து, அவர்களை தேசியவிடுதலைப் போராட்டத்தின் பால் அணிதிரட்ட தவறியது, தேசிய விடுதலைப் போராட்டத்தை யாழ் குறுந்தேசிய வெறிக்குள் தொடர்ந்தும் நிலைநிறுத்தி தனிமைப்பட்டு அழிவை கோருவதையே, மீண்டும் ஒருமுறை புலிகளின் அரசியலாக உள்ளது. சிங்கள பாசிச இனவெறி அரசால் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பறிக்கப்பட்ட வரலாற்றில், தமிழ் மக்களின் போராட்டம் எவ்வளவு நியாயமானதோ, அதேபோல் சகோதர இனமான முஸ்லிம் சிறுபான்மை மக்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழ் மக்கள் ஏற்று ஆதரித்து உதவுவதும் தமிழ் தேசியத்தின் வரலாற்றுக் கடமையாகும். இது அவர்களின் சொந்த விடுதலையை வென்று எடுக்க உதவுவதுடன், தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையை பலப்படுத்தி ஜனநாயகப்படுத்தும். தேசிய விடுதலைப் போராட்டம் மேலும் உயர்ந்த வகையில் வளர்ச்சி பெற, புதிதாக நேரடியாக மிரட்டுகின்ற அன்னிய ஏகாதிபத்திய தலையீட்டு ஆக்கிரமிப்புகளை கூட வெற்றிகரமாக முறியடிக்கும் அடிப்படையாக இவை அமையும்.

2.1. சிங்கள மக்களையும், சிங்கள அரசையும் வேறுபடுத்தி எதிரியை இரண்டு படுத்தப்பட வேண்டிய கடமையை புலிகள் செய்ய மீளவும் தவறினர். சிங்கள அப்பாவி மக்களின் ஆதரவை அனுதாபத்தை பெறும் வகையில், சிங்கள மக்களுக்கும் சிங்கள தேசியத்துக்கும் எதிரான சிங்கள இனவெறி ஏகாதிபத்திய கைக்கூலி அரசை அம்பலம் செய்து, சிங்கள மக்களின் பால், நேசமான உறவை கோரியிருக்க வேண்டும். சிங்கள மக்களை தேசியத்தின் எதிரியாக பிரகடனம் செய்யும் புலிகளின் அரசியலை மாற்றுவது, உடனடிக் கடமையாக இன்று உள்ளது. சிங்கள அப்பாவி மக்கள் தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்கள் என்பதும், அவர்களை தனது இனவாதத்துக்கு அணிதிரட்டும் சிங்கள அரசின் இனவெறித்தனத்தை அம்பலம் செய்து தனிமைப்படுத்தி, சிங்க மக்களை இனவெறி ஏகாதிபத்திய கைக்கூலி அரசில் இருந்து தனிமைப்படுத்தி நடுநிலைப்படுத்தி வென்றெடுப்பது, இன்றைய நெருகடியான உலகமயமாதல் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கட்டத்தில் உடனடிப் பணியாக புலிகள் முன் காணப்படுகின்றது.

3.தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் போராட்டத்தில், தமிழ் மக்களின் ஜனநாயகத்தை அங்கீகரிக்க தவறியது, வரலாற்று ரீதியாக தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிரானதாகும். இது தேசியத்தின் உட்கூறுகளை அழித்து நாசப்படுத்துகின்றது. உலக வரலாற்றில் எங்கும் காண முடியாத வகையில், அதுவும் விடுதலைப் போராட்டம் நடக்கின்ற நிலையில், அதிக எதிரிகளை கொண்ட விடுதலைப் போராட்டமாக புலிகளின் தேசியம் காணப்படுகின்றது. உலகில் எந்த விடுதலைப் போராட்டமும் சந்திக்காத வகையில், எதிரிகள் என்ற பெயரில் இவ்வளவு அழித் தொழிப்பை நடத்தியது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதுவே உலக வரலாற்றில் முதல் தடவையாகும். நண்பன், எதிரி பற்றி புலிகளின் குறுகிய கண்ணோட்டம் எதிரிகளை அதிகப்படுத்தியதுடன், அழித்தொழிப்பை தொடர்ச்சியாக அதிகரிக்க வைத்துள்ளது. தன்னையே தேசத்துக்கு தியாகத்துடன் அர்ப்பணிக்கும் சுயநலத்தை துறந்த தனி உயிர்களைக் கூட, தேசத்தின் தியாகத்தின் பெயரில், தனிமனிதர்களைக் கொல்ல தற்கொலை போராளியாக்கி, அர்த்தமற்ற வகையில் தியாகம் செய்யப்படுகின்றது. தனிமனிதர்களை எதிரியாக்கி கண்கணித்து அழிக்க பெரும் தொகை பெருள்வளமும், உயிரும், மனித வளமும் அர்த்தமற்ற வகையில் பயன்படுத்தப்படுகின்றது. உலக வரலாற்றில் எங்கும் காணமுடியாத வகையில் எதிரியின் பெயரில் புலிகள் நடத்தும் அழித் தொழிப்புகள், மேலும் எதிரியை தோற்றுவித்ததுடன், அது மேலும் மேலும் அகன்று செல்லுகின்றது. கண்மூடித்தனமாக எதிரிகளை வரையறுத்து அழித்தொழிப்பது, எதிரியை மேலும் தோற்றுவிப்பதுடன் அது அதிகரித்து செல்வதை புலிகளின் வரலாறு உலகுக்கு படிப்பினையாக்கியுள்ளது. தமிழ் மக்களின் ஜனநாயகத்தை அங்கீகரித்து பாதுகாக்கும் போராட்டம் எதிரியை சரியாக இனம் காணவும், அதை குறைக்கவும் வழிகோலும். ஏகாதிபத்திய உலகமயமாதல் தமிழ் தேசியத்தை சிங்கள இனவெறி அரசின் கைக்கூலித்தனத்துடன் இணைந்து ஒடுக்கும் நிலையில், அதை எதிர்த்து போராடும் அனைத்து சக்திகளின் ஆதரவைப் பெறும் வகையில், தேசிய விடுதலைப் போராட்டம் ஜனநாயகத் தன்மை வாய்ந்ததாக இல்லாத வரை, எமது தேசியம் என்பது அர்த்தமற்ற தியாகத்தையே விளைவாக்கி சிதைவதை யாரும் தடுக்க முடியாது.



இன்று ஏகாதிபத்தியம் உலகமயமாதலை விரைவாக்கி அதையே பண்பாடாக கலாச்சாரமாக பொருளாதார வடிவமாக்கி நில எல்லை கடந்து, அரசை கைக் கூலிகள் கொண்டு உருவாக்கி வரும் போக்கில் தேசிய அரசுகளின் தேசியம் பொருளாதாரம் சிதைப்பது மட்டுமே, உலகமயமாதலின் அடிப்படையான நிபந்தனையாகும். இந்த வகையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதில் சிங்கள இனவெறி கைக்கூலி அரசுக்கு ஏகாதிபத்தியங்கள் முண்டு கொடுக்கின்றன. இதன் ஒரு பகுதியாகவே சமாதானம் என்ற பெயரில் நோர்வே தலைமையில் நடக்கும் பேச்சுவார்த்தைகள், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை கோரும் அதன் தேசிய அடிப்படைக் கோரிக்கைகளை, யுத்தமல்லாத வழிகளில் சமாதானப் போர்வையில் அழிப்தொழிப்பதில் உலகமே அணிதிரண்டு நிற்கின்றது. புலிகளின் முதல் யுத்த நிறுத்தத்தை ஏகாதிபத்தியங்கள் தமது உலகமயமாதல் அடிப்படையில் ஏற்படுத்திய போது, அரசு யுத்தத்ததை தொடர்ந்தன் மூலம், சிங்கள மக்களின் அதிர்ப்திகளை இனவெறி சார்ந்து ஒழித்துக் கட்டி, புதியதொரு கட்டத்தை தயார் செய்தது. இந்த யுத்த தொடர்ச்சியில் உலகமயமாதலின் நிபந்தனையை அடிப்படையாக கொண்டு, இலங்கை நணயத்தை சுதந்திரமான டொலரின் கட்டுப்பாட்டுக்குள் விட்டதன் மூலம், இலங்கையை அமெரிக்காவின் நேரடி காலனியாக மற்றும் புதியதொரு நடவடிக்கையை எடுத்தது. இலங்கையின் பணம் படிப்படியாக ஒழித்துக்கட்டி, டொலரே இலங்கையின் நணயமாக விரைவில் மாற்ற இது வழிகாட்டியுள்ளது. இது ஒரு விரிவான ஆய்வுக்குரிய விடையமாக இருப்பதால் அடுத்த இதழில் பார்ப்போம். அத்துடன் பொருட்களின் விலையை தீடிரென அதிகரிக்க வைத்து, இந்த அதிகாரிப்பு யுத்தத்ததை வெற்றிகரமாக நடத்த என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. புலிகளின் ஒருதலைப்பட்சமான இரண்டாவது யுத்த நிறுத்தம் கூட, புலிகளின் முடிவுகளுக்கு உட்பட்டவையாக இருக்கவில்லை. அவை முன் கூட்டியே ஏகாதிபத்தியங்கள் தீர்மானித்த முடிவுகளையே, புலிகள் மீளவும் அமுல்படுத்தியதே இங்கு நிகழ்ந்துள்ளது. அடுத்து பேச்சு வார்த்தை, யுத்த நிறுத்தம் என அனைத்தும் இனி புலிகளோ, இலங்கை அரசோ தீர்மானிக்கும் விடையமாக இனியும் இல்லை. அது ஏகாதிபத்தியத்தின் முடிவுகளாகிவிட்டதை காண மறுப்பவர்கள்; ஆருடம் கூறுவதிலும், ஏகாதிபத்திய தலையீட்டின் முடிவுகளை காணத் தவறி ஆய்வுகள் செய்து வெளிப்படுத்துவது, அரசியல் சூனியத்தின் ஒரு வெளிப்பாடாகும். இது வரப்போகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அபாயங்களை காணமறுத்து, அதை எதிர் கொள்ள திரணியற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது. யுத்தநிறுத்தம், பேச்சுவார்த்தை, தாக்குதலை நிறுத்தல் என அனைத்தையும் ஏகாதிபத்தியங்களின் விருப்பத்துக்கு விடப்பட்டு, அவர்களே தீர்மானிக்கும் இன்றைய நிலையில், புலிகளின் அரசியல் இராணுவ சுயதன்மை கேள்விக்குள்ளாகியுள்ளது. எதிர்காலம் என்பது இன்றைய கடந்த புலிகளின் சுய நடத்தைக்கு நேர் எதிரானதாகவே இருக்கமுடியும். இனியொரு தேசிய யுத்தம் எனின் ஏகாதிபத்தியங்களின் விரிவான தலையீட்டினைப் பொறுத்து, ஏகாதிபத்திய எதிர்ப்பாக அல்லது புலிகளின் ஒருபகுதியின் துரோகத்தினுடன் தான் நிகழமுடியும் அல்லது முற்றான சரணகதி என்ற பாதையையே இன்றைய நிலைமை சுட்டிக்காட்டுகின்றது.

இந்நிலையில் ஏகாதிபத்தியம் பொருளாதார பண்பாட்டு கலாச்சாரம் சார்ந்து நடத்தும் தேசிய அழிப்பு பற்றி புலிகள் மௌனம் சாதித்து, அதையே தனது பொருளாதார பண்பாட்டு கலாச்சார கொள்கையாகக் கொண்டுள்ள நிலையில், ஏகாதிபத்திய தலையீடு தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோரிக்கையையும், அதன் தியாகத்தையும் அர்த்தமற்றதாக்கிவிடும் அபாயத்தை தனது அரசியல் ஆணையில், நடத்தையில் கொண்டே இருக்கின்றனர். நோர்வேயின் பின்னணியில் கூட்டாக இயங்கும் ஏகாதிபத்தியங்கள், தனது நேரடி மற்றும் மறைமுக ஆக்கிரமிப்பை உலகமயமாதல் சார்ந்து நடத்த தயார் செய்கின்றன. புலிகளின் கடந்த கால அரசியல் முன்னெடுப்புகள் ராஜதந்திர தன்மையை இழந்து இராணுவ வாதத்துக்குள் குறுகிவிடும் வரலாற்றில், ஏகாதிபத்திய நரித்தனங்களை அரசியல் ரீதியாக எதிர் கொள்ளும் ஆளுமையை புலிகள் அரசியலில் இழந்தே இருக்கின்றனர். பேச்சு வார்த்தையை குறுகிய இராணுவ நோக்கில் அணுகுவதை தவிர்த்து, அரசியல் ரீதியாக ஏகாதிபத்திய அமைப்பை அம்பலம் செய்து, சொந்த தேசிய பொருளாதார அமைப்பை உயர்த்தி பாதுகாக்கும் வகையில், சுயநிர்ணயத்தை உயர்த்தும் மக்களின் ஜனநாயகத்தை ஆதாரமாக கொண்டு பேச்சுவார்த்தையை எதிர் கொள்ளவேண்டும். திம்புக் கோரிக்கையை மட்டும் கோருவதை விட்டு, அதை விரிவாக அதன் உள்ளடகத்தை ஆராயவேண்டியது இன்றைய அரசியல் அடிப்படையாகின்றது. திம்புக் கோரிக்கையையும், சுயநிர்ணயமும் இன்று எல்லாத் தரப்பினதும் பொதுக் கோரிக்கையாக உள்ள நிலையில், அதன் அரசியல் உள்ளடகத்தை சரியாக உயர்த்தி போராட வேண்டியது, பாட்டாளி வர்க்கத்தின் குறிப்பான கடமையாக இன்று உள்ளது. இதைக் கைவிட்டு அனைத்து வர்க்கத்தினாலும் கோரப்படும் திம்புக் கோரிக்கைக்கு வால் பிடிப்பது, அரசியல் ரீதியாக வர்க்க சரணாகதியை ஆணையில் வைப்பதாகிவிடுகின்றது. சுயநிர்ணய அடிப்படையில் சுவீடன் நோர்வேயில் இருந்து பிரிந்து கடந்த கால அரசியல் முன்னெடுப்பை அடிப்படையாக கொண்டு, நோர்வே தலையீட்டை தேசியத்தின் பால் அரசியல்படுத்தி ஜனநாயகப்படுத்த வேண்டும். தேசிய சுயநிர்ணயக் கோரிக்கையை ஜனநாயகப்படுத்தி, போராடும் மக்களின் ஜனநாயகத்தை முரணற்ற ஜனநாயகத்தில் ஏற்று, உலக மயமாதலுக்கு எதிரான உலக மக்களின் ஆதரவைப் பெறுவது மட்டுமே, தேசிய பாதுகாப்புக்கும் அதன் வெற்றிக்கும் அடிப்படையாகும். இதை புலிகளும் சரி அல்லது தமிழ் மக்களும் சரி அடிப்படை அரசியலாக கொள்ளாத வரை, இப்போராட்டம் தேசியத் தன்மை இழந்து ஏகாதிபத்தியததுக்கு சேவை செய்யும், தமிழ்மொழி கைக்கூலிகளை கொண்ட தேசிய பொம்மைகளையே உருவாக்கவே எமது அளப்பெரிய தியாகம் வழிகாட்டும். இதை யாரும் எந்தத் தலைவரும் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மாற்ற முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவ மூல உபாயத்தில் ஐக்கியமும், அரசியலில் முரண்பாடும்.

தமிழீழ புதிய சனநாயக கட்சியின தேசபக்தன் இதழ் 17 இல் பல மார்க்சிய விலகலைக் கொண்டிருந்த போதும், முக்கியமானதும் அடிப்படையானவைகளை ஒட்டிய கோட்பாட்டு விவாதத்தை இக் கட்டுரை சுருக்கமாக ஆராய்கின்றது.




"புலிகளிடம் மீண்டும் புலிக்குணம்?" என்ற செய்தி மறுபிரசுரமாக இருந்த போதும், என்ற கேள்விக் ஊடாக முன்வைக்கும் அரசியல் உள்ளடக்கம் என்ன? "மீண்டும்" என்பதன் மூலம் புலிகளுக்கு இடையில் ஏதாவது மாற்றம் நிகழ்ந்ததா? சிவத்தம்பி ஏதோ மாறுதல் நிகழ்ந்தது என்கின்றார். சிவராம், ஜெயபாலன் போன்ற புலிகளின் பினாமிகள் பலரும், ஏதோ மாற்றம் நிகழ்ந்து விட்டதாக கூறுகின்றனர். "மீண்டும் புலிக்குணம்" என்று கேள்வியாக்குவதால், மேலும் மாற்றத்தில் தடுமாற்றம் நிகழ்கின்றது. இதன் அரசியல் உள்ளடக்கம் என்ன?

புலிக்கு எப்போதும் ஒரே குணம் தான் உள்ளது. இல்லை என்கிறீர்களா? புலிகள் தங்கள் மாற்றத்தை பிரகடனம் செய்துள்ளார்களா? அரசியல் பிழைப்புக்கு வழி தெரியாதவனும், அண்டிப் பிழைப்பவனும் மாற்றம் நிகழ்ந்ததாக சாதிப்பது புதிய அரசியல் சீரழிவாகும். புலிகளின் அரசியலில் மாற்றம் நிகழாமல், புலிகளின் குணத்தில் மாற்றம் நிகழமுடியாது. இதை தேசியவாதத்தின் பின் கைவிடப்படும் போது, குறுகிய நலன்கள் சார்ந்த அரசியலே புதிய அரசியலாகிவிடும். உண்மையில் புலிகளின் அரசியலில் மாற்றம் நிகழவில்லை. அதே போல் குணத்திலும் மாற்றம் நிகழவில்லை. ஆனால் தேசியவாதத்தில் சர்வதேசியத்துக்கும், தேசியத்துக்கும் இடையில் இடைவெளி அற்றுப் போகின்ற போது, புலிகளில் மாற்றம் நிகழ்ந்துள்ளது என்று கூறுபவர்கள் தான், "மீண்டும்" என்ற கேள்விக்குள் சந்தேகத்தை எழுப்பி உண்மையில் மாறிவிடுகின்றனர்.

அடுத்து "தமிழீழ புதிய சனநாயகக் கட்சியின் அரசியல் தீர்வுப் பொதி" என்ற கட்டுரையின் உள்ளடக்கம், திட்டவட்டமாக சர்வதேசியத்துக்கு எதிரானதாகும். சரியாக திம்புக் கோரிக்கையை முன்வைத்தவர்கள், ஏன் பின்னால் திம்புக் கோரிக்கைக்கு எதிரான கோரிக்கைகளை முன்மொழிகின்றனர். திம்புக் கோரிக்கையில் அரசியல் உள்ளடக்கம் சுயநிர்ணய கோரிக்கையால் அரசியல் உள்ளடக்கமாகின்ற போது, ஏன் அதற்கு வெளியில் கோரிக்கைகள் முன்மொழியப்படுகின்றது. சர்வதேசியம் சுயநிர்ணயத்தையே தேசிய இனங்கள் மீதான தீர்வாக வைத்துப் போராடும் போது, அதற்கு புறம்பான கோரிக்கைகள் சர்வதேசியத்துக்கு எதிரானது. இது முதலாளித்துவ தேசியத்தின் உள் தீர்வை முன்வைப்பதாகும். இதையே தொடர்ந்து வந்த தேசபக்தன் இதழ் 18 லும் மீளவும் புதிய வகையில் முன்மொழிகின்றனர். திம்புக் கோரிக்கையும், அதன் உள்ளடக்கமாக இருக்கும் சுயநிர்ணயமும் இன்று அனைத்து தமிழ் கட்சிகளினதும், சமூகத் தொடர்பாளர்களினதும் பொதுக் கோரிக்கையாகிவிட்ட நிலையில், அதையே மீளமீள ஒப்புவிப்பது அவர்களை வால்பிடித்துச் செல்வதை குறித்துநிற்கின்றது. இக்கோரிக்கை அரசியல் ரீதியாக முன்னெடுக்காத வரை இதை கோசமாக முன்வைப்பது சரியானது. திம்புக் கோரிக்கையும் அதன் உள்ளடக்கமான சுயநிர்ணயமும் விரிவான வகையில் அரசியல் அடிப்படையாக்கத் தவறுவது, பிற்போக்கு தேசியத்துக்கு வால்பிடித்து சமாரை வீசுவதாகிவிடுகின்றது. இந்தவகையில் இடைக்கால தீர்வுகளை முன்வைப்பது, அரசியல் ரீதியாக சரணடைவை முன்மொழிவதாகும். ஒரு அரசியல் சக்தியாக, தீர்மானகரமான சக்தியாக இல்லாத எல்லா நிலையில் இவை கேலி கூத்துமாகும். இங்கு மக்களின் உரிமைகளை அதன் உயர்ந்த அரசியல் உள்ளடக்க கோரிக்கையின் மூலம் விழிபடைய வைப்பதும், அதை நோக்கி அணிதிரளக் கோருவதுமே புரட்சிகர அரசியல் மார்க்கமாகும்.

சுயநிர்ணய உரிமையை விளக்கி அதிலுள்ள அம்சங்களை அரசியல் கோரிக்கையாக்குவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியானது. இது உண்மையில் சுயநிர்ணயத்தை மக்களின் கோரிக்கையாக்குவதன் மூலம், மக்களை அணிதிரட்டும் ஒரு அரசியல் மார்க்கமாகும். சுயநிர்ணயம் என்பது கோரிக்கையில் இருந்து அதன் உள்ளடக்கம் வரை, பாட்டாளி வர்க்க அரசு அல்லாத எந்த சமூகத்திலும் சாத்தியமில்லை. இந்தக் கோரிக்கையை பாட்டாளிவர்க்கம் முன்வைக்கும் போது, அரசியல் ரீதியாக சுயநிர்ணயத்தை வென்றெடுக்க, சொந்த பாட்டாளி வர்க்க அரசை நிறுவுவதை நோக்கமாக கொண்டுள்ளது. சுயநிர்ணயத்தின் உள்ளடக்கமான அரசியல் கோரிக்கையை முன்வைப்பதும் போராடுவதுமே, சர்வதேசிய மார்க்கமாகும். இல்லாது சர்வதேசியத்துக்கு எதிரான கோரிக்கையை முன்வைப்பது (இங்கு ஜனநாயகக் கோரிக்கையை குறித்தல்ல), சுயநிர்ணயத்தை சர்வதேசியமல்லாத வழியில் புரிந்து வைத்திருப்பதும், விளக்குவதுமாகும். த.ஈ.பு.ச.கட்சி வைத்துள்ள "தீர்வுப் பொதி"யின் அரசியல் உள்ளடக்க அம்சங்களில் மிக தெளிவாகவே இவை வெளிப்படுகின்றது.

அடுத்த கட்டுரை "தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தின் எதிர்காலம்? 'ஓயாத அலை' வெற்றி" என்ற நீண்ட கட்டுரையை சுருக்கமாக ஆராய்வது அவசியமாகிவிடுகின்றது. புலிகளின் யுத்தத்தை சிலர் "மக்கள் யுத்தமாக" கருதுவதாகவும், சிலர் "புலிகளின் முதலாளித்துவ தேசிய இயக்கத்தின் இராணுவ - அரசியல் பாதைக்கு பலியாகி" விடுகின்றனர் என்று குறிப்பிட்டு விமர்சிக்க முனைந்தவர்கள், புலிகளின் இராணுவ மூல உபாயத்தை விளக்கிய போது, அதில் முரண்பாடற்றுப் போன அவலம் நிகழ்ந்தது. தேசியத்தை புரிந்து கொள்வதில் வேறுபாடு அற்றுப் போகும் போது, முரண்பாடுகள் அருகிவிடுகின்றன. அரசியலில் தொழிலாளர், விவசாயிகள் என்பது கோசமாக உள்ள வரை, புலிகள் பெயருக்கு தன்னும் அதை அங்கீகரிக்காத வரை, அரசியலில் முரண்பாடு இருப்பது போல் தோன்றும்.

புலிகளின் தாக்குதல்களை அடிப்படையாக கொண்டு தொகுக்கப்பட்ட இக் கட்டுரையில், புலிகளின் இராணுவ மூல உபாயம் மீது விமர்சனம் எதுவும் அற்றுப் போனதுடன், சரியானதாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பரிதபாம் நிகழ்ந்துள்ளது. அதாவது புலிகளின் அரசியல் வழி இராணுவத்துக்கும், பாட்டாளி வர்க்க அரசியல் வழி இராணுவத்துக்கும் இடையில் யுத்த தந்திரத்தில் வேறுபாடு அற்றுப் போகின்றதா? அரசியில் தான் முரண்பாடு, இராணுவத்தில் அவை இல்லையா? இருக்கின்றது எனின் தமிழீழ புதிய சனநாயகக் கட்சியின் கட்டுரையில் எங்கே அவை காணப்படுகின்றது. புலிகளுக்குள் கூட இராணுவ யுத்த தந்திர வழியில் முரண்பாடு வெளிப்படுவது சர்வ சாதாரணமாக உள்ளது. அப்படியிருக்க தமிழீழ புதிய சனநாயகக் கட்சி எப்படி புலிகளின் யுத்த தந்திர மார்க்கத்தில் ஐக்கியப்பட்டு நிற்கின்றனர். புலிகளின் யுத்த தந்திரத்தில் தவறுகள் இருக்கவில்லையா? மாற்று யுத்த தந்திரத்தை எந்த இடத்தில் எப்படி கையாண்டு இருக்க வேண்டும் என்று, தமிழீழ புதிய சனநாயகக் கட்சி எந்த இடத்திலும் கொண்டிருக்கவில்லையா? எங்கே அவை? முன்வைக்கப்படுகின்றது. மாறாக புலிகளின் யுத்த தந்திரம் சரியானது என்று போற்றப்படுகின்றது. இதை போற்ற சம்பவங்களையும், போக்குகளையும் திரித்து முன்வைக்கின்றனர்.

"தங்களின் பலயீனங்களை புரிந்து கொண்ட புலிகளின் தலைமை வன்னி யுத்தத்தில் மக்களையும் பங்குவகிக்க வைக்கும் முறைகளில், மக்கள் மத்தியிலான தண்டனை முறைகளில் மாற்றம் செய்தது. கிராமியப்படை, துணைப்படை, எல்லைக் காவல் படை என்பவற்றில் மக்கள் நேரடியாக இணைந்தது உண்மை." என்கின்றனர். அப்படி பார்த்தால் ஆழமாக சர்வதேசிய வழியில் அல்லாத ஒரு கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வோர் முன் இவ் யுத்தம் "மக்கள் யுத்தம்" தானே. இங்கு விவாதம் சர்வதேசிய வழியில் அல்லவா தெளிவாக முன்வைக்க வேண்டும். இனி நாம் மக்களை அணிதிரட்டிய புலிகளின் படைப்பிரிவுகள் பற்றி பார்ப்போம். மக்கள் கடந்த காலத்தில் புலிகளின் பின் அணிதிரளாமைக்கு, உங்கள் விளக்கப்படி தண்டனை முறையா? காரணமாக இருந்தது. அல்லது அரசியலா? எது? அரசியல் எனின் புலிகளின் அரசியலில் மாற்றம் நிகழ்ந்துள்ளதா? நிகழ்ந்துள்ளது எனின் என்ன? விளக்குவீர்களா? மக்கள் புலிகளின் படைகளில் எப்படி இணைத்துக் கொள்ளப்பட்டனர்? தாமாக தேசிய விடுதலையில் சொந்த பொருளாதார வர்க்க நலன் மீது ஆர்வம் கொண்டு இணைந்தனரா? அல்லது வேறு காரணம் இருந்ததா? எப்படி? விளக்குவீர்களா? இது முன்பு தண்டனையால் தடுக்கப்பட்டு இருந்ததா? அடுத்து துணைப்படை, கிராமியப்படை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லைக் காவல் படை எப்படி என்ன அரசியல் கோசத்தில் அணிதிரட்டப்பட்டனர். இங்கு திடீரென எப்படி உருவாக்கப்பட்டது? இதற்கு எதை அந்த மக்கள் அடமானம் வைத்தனர். இது பற்றி ஏன் மூடிமறைத்து, புலிகளை மக்கள் மயப்படுத்திக் காட்ட, தேசிய வாதத்தின் பின் தமிழீழ புதிய சனநாயகக் கட்சி முனைகின்றது.

அடுத்து இங்கு இந்த தண்டனை பற்றி விளக்கம் அடுத்த அரசியல் விலகலைத் தருகின்றது. புலிகள் பொது மக்கள் மீது தண்டனையை கையாண்டார்களா? எதன் அடிப்படையில்? என்ன தண்டனையை, எதற்காக வழங்கினர். இதில் அவர்களின் லாபம், மற்றும் அரசியல் நோக்கம் என்ன? அதன் வர்க்க அடிப்படை என்ன? இன்று அதை எப்படி அதாவது தண்டனைக்கு பின்னால் இருந்த எந்த வர்க்க நோக்கத்தை கைவிட்டுள்ளனர்? விளக்குவீர்களா?

புலிகளின் தண்டனை அரசியல் சக்திகள் மீதே எப்போதும் இருந்துள்ளது. இதற்கு வெளியில் பணம் திரட்டுதல் முறையிலும், அவர்களின் வர்க்கக் கண்ணோட்டத்திலும் கருதும் சமூக விரோதத்திலுமே தண்டனை இருந்துள்ளது. இதில் எந்த மாற்றமும் நிகழவில்லை. உண்மையில் புலிகளின் நடைமுறை முன் மாற்று அரசியல் சக்திகள் இல்லாமையால், ஏதோ மாற்றம் நிகழ்ந்ததாக புரியப்படுகின்றது. அவர்களின் அரசியலை கேள்விக்குட்படுத்த அரசியல் சக்திகள் இல்லாத வரை, அவர்கள் மாறியதாக புரியப்படுவது, அரசியலை கைவிடும் போது இதை ஒப்புவிப்பது பொதுப் பண்பாகின்றது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியில் உள்ளவர்கள் மீது, புலிகளின் அரசியலுக்கு சவாலாக வராத வரை, அதை புலிகள் கண்டு கொள்வதில்லை. பொதுவான கட்டுப்பாட்டு பிரதேசத்துக்கு வெளியிலுள்ள மக்கள் மீதான தாக்குதல்களை, சர்வதேச நிர்ப்பந்தத்தால் மட்டுமே தவிர்க்கின்றனர். இங்கு மக்கள் நலன் எதையும் அரசியல் ரீதியாக புரிந்து கொண்டு புலிகள் தம்மை சுயவிமர்சனம் செய்து மாற்றிக் கொண்டு இதைக் கைவிடவில்லை.

தொடர்ந்து "வன்னி யுத்தத்தில் பெருமளவு விவசாயிகள், கூலி மக்கள் புலிகளுடன் தோழோடு தோழாக நிற்கின்றனர்." என்று கூறுவதன் அரசியல் உள்ளடக்கம் என்ன? ஏன் யாழ்குடா நாட்டை கைப்பற்ற பிரகடனம் செய்த போது, அன்னிய நாடுகள் தலையீடு நடத்துமளவுக்கு நிலைமை மாறிய போது, புலிகள் வன்னியில் அன்னிய தலையீட்டுக்கு எதிராக ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். அங்கு நீங்கள் தோழோடு தோழ் நிற்க்கும் அந்த விவசாய மற்றும் கூலிகள் எத்தனை பேர் பங்கு கொண்டனர். மிகச் சிறு எண்ணிக்கை அதாவது சில நூறு பேர் கலந்து கொண்டதாக புலிகளின் வன்னி வானொலியே அறிவிக்கின்றது. ஆனால் ஐரோப்பாவில் இதைவிட அதிகம் பேர் கலந்து கொண்டனர். இந்த யுத்தக் கட்டுரையை எழுதியவர்கள், புலிகள் அன்னிய தலையீட்டை உணர்ந்த அளவுக்கு, உணராமையை கட்டுரை சொந்த அரசியல் வரட்சியில் வெளிப்படுத்துகின்றது. விவசாயிகள், மற்றும் கூலிகளின் நலனை புலிகள் பிரதிபலிக்க தொடங்கிவிட்டனர் என்ற அர்த்தமல்லவா வருகின்றது. விவசாயிகள் மற்றும் கூலி விவசாயிகளின் நலனை புலிகளின் எந்தக் கோரிக்கையூடாக இனங்கண்டு தோழோடு தோழாக நிற்க்கின்றனர். இப்படி பார்த்தால் சிங்கள இனவெறி அரசுடன் சிங்கள மக்கள் தோழோடு தோழாக நிற்கின்றனர் என்று புரிந்து விளக்க முடியும். இப்படித் தான் புலிகள் கருதுகின்றனர். விளக்குகின்றனர். நீங்கள் புலிகளுடன் உழைக்கும் மக்கள் அப்படி இருப்பதாக விளக்குவது என்ன அரசியல்? எதுவும் அரசியல் வழிப்பட்டது அல்லவா? மறுக்கின்றீர்களா? பின்பு இப்படி ஏன் விளக்க முடிகின்றது.

இப்படி விளக்கிய பின்பு "புலிகளின் தமிழீழ முதலாளித்துவ அரசியல், தொழிலாளி வர்க்க அரசியல் மார்க்கமாக மாறிவிட்டது என்பதல்ல. புலிகளின் முன்னணிப் படை யுத்த முறை, மக்கள் யுத்த முறையாக மாறிவிட்டது என்பதல்ல. இவ்விரண்டு யுத்த முறைகளும் கொரிலா யுத்தத்தை, கிரமமான யுத்தத்தை ஏற்றக் கொள்கின்றன. அதன் வர்க்க அரசியல் - இராணுவப் பாதையே யுத்த முறையை வேறுபடுத்துகின்றது." என்று கூறும் இவர்கள், அது என்ன என்பதை ஏன் சொல்ல முடிவதில்லை. முஸ்லிம் மக்கள், தொழிலாளர் விவசாயிகளின் நலன்கள் பற்றி பொதுவாக பேச முடிகின்றதே ஒழிய, இராணுவ யுத்த தந்திரத்தில் ஏன் புலிகளை விமர்சிக்க முடிவதில்லை. இங்கு இவர்கள் கொரிலா யுத்தத்தை, கிரமமான யுத்தத்தை இரண்டு அரசியல் மார்க்கமும் ஏற்றுக் கொள்கின்றன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பதன் ஊடாக, இதில் ஒன்றுபட்டு தம்மை வெளிப்படுத்துகின்றனர். இதில் இருந்தே "வர்க்க அரசியல் - இராணுவப் பாதையே யுதத முறையை வேறுபடுத்துகின்றது" என்று கூறிய படி விளக்க முடிவதில்லை. கொரிலா யுத்தத்தை, கிரமமான யுத்தத்தை ஏற்றுக் கொள்ளும் போது, புலிகளின் யுத்தம் அதுவாக இருப்பதால் முரண்பாடு அற்றுப் போகின்றது. இந்த கட்டுரை எந்த முரண்பாட்டையும் இராணுவத் துறையிலும், அது சார்ந்த அரசியல் துறையிலும் வெளிப்படுத்த முடிவதில்லை. இது தேசியத்தை புரிந்து கொள்வதில், அதை வென்றெடுக்கும் அரசியல் மார்க்கத்தில் ஏற்படும் அரசியல் விலகலால் இது ஏற்படுகின்றது. அத்துடன் முதல் கூறிய "வன்னி யுத்தத்தில் பெருமளவு விவசாயிகள், கூலி மக்கள் புலிகளுடன் தோழோடு தோழாக நிற்கின்றனர்." என்பற்கு முரண்பாடாக "மக்கள் யுத்த முறையாக மாறிவிட்டது என்பதல்ல." என்று கூறுவது ஏன் என்பதை விளக்க தவறுகின்றனர். தேசியத்துக்கும், சர்வதேசியத்துக்கும் முடிச்சுப் போட்டு குழப்பும் போது, ஏற்படும் சர்வதேசிய விலகலாகவே இது வெளிப்படுகின்றது.

அடுத்து "புலிகள் கொரிலாப் படை வடிவத்தை தாண்டி, கிரமமான படை வடிவ வளர்ச்சிக்கு வந்திருக்கின்றார்கள்" என்று கூறுகின்றீர்கள். இதற்கு புலிகளின் பல தொடர்ச்சியான தாக்குதலை ஆதாரம் காட்டுகின்றனர். புலிகள் நீண்ட காலத்துக்கு முன்பு மாங்குளம் தனி முகாமை தாக்கி அழித்தது முதலே, கிரமமான படையாகி விட்டதாக எழுதி வருகின்றனர். இவர்களைப் போலவே இதை நிறுவ தொடர்ச்சியான தாக்குதலை உதாரணம் காட்ட தயங்கவில்லை.

புலிகளின் விளக்கத்தை ஏற்றுக் கொள்கின்றீர்களா இல்லையா? ஏன்? நீங்கள் கருதும் கிரமமான யுத்தம் எப்போது, புலிகளின் யுத்த தந்திரத்தில் ஏற்பட்டது. இங்கு கொரிலா யுத்தம் முடிவுக்கு வந்து விட்டதா? அல்லது தொடர்கின்றதா? இது சிறு கொரிலாத் தாக்குதலை குறித்து கோரவில்லை. அதாவது கிரமமான யுத்த வடிவம் புலிகளின் பிரதான யுத்த வடிவமாக மாறிவிட்டதாக கருதும் நீங்கள், இதை எப்போது கடந்து வந்தனர்? நீங்கள் எப்போது இதை வெளிப்படுத்தினீர்கள். அதாவது ஆனையிறவு சமரின் அலை வீச்சில் தலைகீழாகிப் போனதோ, யுத்த விளக்கங்ககளும் முடிவுகளும்.

அது சரி ஏன் வன்னியைச் சுற்றி நீங்கள் குறிப்பிடும் கிரமமான யுத்தம் காணப்படுகின்றது. கிழக்கில், மன்னாரில் இவை ஒரே வீச்சாக இல்லை? ஏன் புலிகள் வன்னிக்கு பதில் கிழக்கு சென்று இருந்தால், கிழக்கில் நிலைமை எப்படியிருக்கும்? ஒரு கிரமமான யுத்தம் எப்படி எந்த அடிப்படையில் மாறிச் செல்ல முடியும்? புலிகளின் பிரதான மையமாக உள்ள வன்னியில் அண்ணளவாக 10000 பேர் கொண்ட படைப் பிரிவு குவிந்துள்ள இடத்தில், முன்னேறிய தாக்குதல்கள் மூலம் கிடைக்கும் வெற்றி கிரமமான யுத்த வழியை அடைந்து விட்டதாக கருத விளக்க முடியுமா? இந்த கிரமமான யுத்தத்துக்கும் மக்களுக்கும் உள்ள உறவு, இராணுவ வழியில் அவசியமற்றதா? எப்படி?

அடுத்து புலிகள் திட்டமிட்ட பின்வாங்கலையும், தந்திர உபாய கையாளுகையையும் கொண்டு யுத்தத்தில் வெற்றி பெறுவதாக கூறுவதுடன், அதை மெச்சுவதும் பொது அரசியலாகின்றது. யாழ்குடா நாட்டை விட்டு புலிகள் எப்படி வெளியேறினார்கள். தமது முடிவை மக்களுக்கு அறிவித்து, மக்களை வெளியேற்றிய போது, ஒன்றுக்கு மேற்பட்ட தரம் முடிவை மாற்றி அறிவித்தது ஏன்? தந்திர உபாயம் சார்ந்து வெளியேறியவர்கள், ஏன் மக்களையும் வெளியேற்றினர்? தந்திர உபாயம் மக்களை தாங்க வைப்பதில் தங்கியுள்ளது. இது தான் யுத்த தந்திரத்தில் மக்கள் யுத்தமாகும். மக்கள் அற்ற பிரதேசத்தில் தந்திரமான யுத்தம் நடத்த முடியாது. சதி தான் செய்ய முடியும். புலிகளை மீறியும், புலிகளால் முழுமையாக வெளியேற்ற முடியாத எதிர்பாராத இராணுவ முன்னேற்றத்துடன் புலியின் ஊசலாட்டமுமே, மக்களை முழுமையாக வெளியேற்ற முடியவில்லை. இந்த எஞ்சிப் போன மக்களுக்குள் தான் புலிகள் மீண்டும் தம்மை நிலைநிறுத்த முடிந்ததும், போராட முடிந்த நிலையுமாகும். இங்கு புலிகள் தன்னிச்சை வழிப்பட்ட வழிகளில் தான், நெருக்கடிக்கு முகம் கொடுத்து பின்வாங்கினர். ஏன் வவுனியா மற்றும் யாழ் மீதான தாக்குதலை அறிவித்தவர்கள், ஏன் தாக்குதலை நிறுத்தினார்கள் என்பதற்கு எந்த விளக்கத்தையும் (நீண்ட காலத்தின் பின் மாவீரர் தின உரையில் யாழ் தாக்குதல் நிறுத்தியது பற்றி காரணம் கூறப்படுகின்றது)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்ததில்லை. இங்கு திட்டமிட்ட முன்னேற்றமல்ல வெற்றியில், வீச்சில் தன்னெழுச்சி வகைப்பட்ட யுத்த பிரகடனங்களும், பின்னால் மௌனமாக கைவிடுதலும் தன்னெழுச்சி வகைப்பட்டவை. புலிகளின் ஆயுத மோகம், இராணுவ வெற்றிகள் மீதான அரசியல் அடிப்படையில் எழும் தன்னெழுச்சி வாத அரசியல், நிலைமையை குறுட்டுத்தனமாக வழிபட்டு அள்ளுப்பட்டு செல்லும் யுத்த தந்திரமே, இதன் மூல ஊபாயமாக உள்ளது. இதனால் பிரமைகளை உருவாக்கி பின் தொப்பென திடிரென் கைவிடும் அளவுக்கு அடிக்கடி ஊசலாட்டத்துடன் அலைபாய்கின்றது. இது போல் பல உதாரணம் காட்ட முடியும்.

"யாழில் இருந்து பின்வாங்கிய புலிகள் வன்னியில் தமது இராணுவத் தவறுகளை பலவீனங்களை மீள் பரிசீலனை செய்தனர். தோல்வியின் காரணத்தை கொரில்லா படை வடிவில் இருந்து கிரமமான படை வடிவத்துக்கு வளர வேண்டிய தேவையை, ..." சுயவிமர்சனம் செய்து திருத்தியதாக தமிழீழ புதிய ஜனநாயக கட்சி கண்டுபிடிக்கின்றது. புலிகள் தமது தவறை எங்கே, எப்போது சுயவிமர்சனம் செய்துள்ளனர். புலிகளுக்காக வாக்காளத்து வாங்குபவர்கள் தாங்களாகவே இது நடந்துள்ளதாக பிரகடனம் செய்வது சர்வசாரணமாக நிகழ்கின்றது. சிவத்தம்பி புலிகள் பற்றி குறிப்பீடும் போது, முஸ்லிம் மற்றும் மக்கள் மீதான ஜனநாயக விரோத தன்மையை சுயவிமர்சனம் செய்துள்ளதாக பிதற்றுகின்றார். இது போல் த.பு.ச.க புலிகள் இராணுவ தவறுகளை சுயவிமர்சனம் செய்துள்ளதாக புலிகளின் தேசியத்துக்கு விளக்கம் தந்து முண்டு கொடுக்கின்றனர். புலிகள் வன்னிக்கு பின்வாங்கியது தற்செயலான தன்னிச்சை வகைப்பட்டவையே. குடா நாடு மீதான இராணுவ ஆக்கிரமிப்பு நடந்த போது, பின்வாங்குவது தொடர்பான முடிவுகள் அறிவித்த போது, முரண்பட்ட வடிவில் மிக குறுகிய நேர இடைவெளியில் மூன்று முடிவுகளை பகிரங்கமாக அறிவித்து மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியதுடன், சொந்த அணிகளைக் கூட குழப்பியது அறிந்ததே. வன்னிக்கு வந்த புலிகள் மிக பெரியளவில் குவிந்து கிடந்த அணிகளைக் கொண்டே முல்லை முகாம் அழிப்பு முதல் தொடர்ச்சியான பல தாக்குதலை நடத்திய போது, அவை கூட கொரிலா வடிவத் தாக்குதலை சார்ந்து நின்றதை அவர்களின் முரண்பட்ட விளக்கங்களும், அறிக்கைகளும், நடத்தைகளும் கூட தெளிவுபடவே வெளிப்படுத்தியது. பல தாக்குதலில் மையமான பீரங்கித் தளத்தை அழிப்பதையை அடிப்படையாக கொண்டு நடத்திய கொரிலாத் தாக்குதல்கள், எதிர்பாராத விதமாக முழுமுகாமே புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது. பீரங்கித் தளம் அழிக்கப்பட்டது வீணான நடத்தையாகவும், புலிகளின் ஆயுத இழப்பாகவும் கூட இது இருந்தது. இது முல்லை முதல் பல தொடர்ச்சியான தாக்குதல்களில் நிகழ்ந்தன. இராணுவ பலவீனங்கள் குவிந்து கிடந்த புலிகளின் அணிகளுக்கு சாதகமானதாக இருந்தது, தற்செயலான நிலைமையில் தன்னிச்சை வழியில் பல வெற்றிகள் சாதிக்கப்பட்டது.

இங்கு கிரமான படையாக மாற்றியதால் (இது எப்படி எங்கு புலிகள் சுயவிமர்சனம் செய்து எப்படி முந்திய நிலையில் இருந்து மாற்றி அமைத்தனர் என்பதற்கு தமிழீழ புதிய சனநாயக கட்சி ஆதாரத்தை தரவில்லை. தரப்போவதுமில்லை. ஏனெனின் இது ஆனையிறவு வெற்றிகளை விளக்க சர்வதேசிய அரசியலற்ற தேசியவாத அடிப்படைக்கு கற்பிக்கப்படும் நியாயவாதங்களேயாகும். தேசபக்தன் இதழ் 17 இல் இது போன்று பல சர்வதேசிய விலகல்களை அடிப்படையாக கொண்டு வெளிவந்துள்ளது. புலிகளின் தேசியத்துக்கும் மக்களின் தேசியத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை புரிந்து கொள்ள சர்வதேசியத்தை சரியாக பயன்படுத்தி அதை முன்னெடுக்காதவரை, புலிகளின் தேசியவாத அடிப்படைகளை நியாயப்படுத்தவும் அதற்கு விளக்கம் சொல்வதுமே நிகழ்வது தவிர்க்க முடியாது என்பதையே தேசபக்தனின் பல கட்டுரைகளில் வெளிப்படுகின்றது. சர்வதேசியம் தேசியத்தை புரிந்து கொண்டு போராடும் மார்க்கத்தை பிரச்சாரம் செய்யாத வரை, புலிகளின் தேசியத்துக்கு வால் பிடித்து விளக்குவதே சர்வதேசியம் என்றளவுக்கு சீரழிவது, இன்று மார்க்சியம் சந்திக்கும் பொது நெருக்கடிக்கு எதிரான குறிப்பான பண்புகளில் ஒன்றாக இது உள்ளது.

தேசபக்தன் 18 இல் "50 ஆண்டு கால நவகொலனிய இலங்கை வரலாற்றில்..." என்று குறிப்பிடும் அரசியல் பதம் ஆச்சரியமானது. இலங்கையின் போலிச் சுதந்திரம் நவகொலனியாகவே தொடங்கியதா? கடந்த 50 வருடத்துக்கு முந்திய அரைக் காலனி அரை நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளை, எப்படி உங்கள் நவகாலனியக் கோட்பாட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறுக்கின்றீர்கள்? அதன் அரசியல் உள்ளடக்கத்தை எதை அடிப்படையாக கொண்டு விளக்குகின்றீர்கள். அதே இதழில் "இந்தியரசின் நெருக்குதல், சூழ்ச்சிகள் நேரடியாக வெளிப்பட்டது.... விடுதலை இயக்கங்களை அரசியல் ரீதியாக பிளவுபடுத்தி சமரசப்படுத்தின" என்ற விளக்கம், இந்திய அரசுதான் இயக்க பிளவை உருவாக்கியதாக காட்டுவது அபத்தமாகும். இது தேசிய இயங்களின் பிற்போக்கு மக்கள் விரோத அரசியல் மூடிமறைப்தாகும். இயங்கங்களின் பிற்போக்கு அரசியல் அடிப்படையின் ஜனநாயக விரோத தன்மையே, பிளவின் பிரதான மையமான காரணமாகும் அல்லவா? மேலும் அடுத்த நிலைக்கு விளக்கும் போது "புலிகளின் சுத்த இராணுவக் கண்ணோட்டமும், தனி இயக்க சர்வாதிகார அணுகுமுறையும், ஆக்கிரமிப்பாளர்களின் சூழ்ச்சிகளுக்கு கடந்த காலத்தில் வழி சமைத்துக்கொடுத்தது.." என்கின்றனர். இவைதான் காரணமா? அல்லது புலிகளின் அரசியல் காரணமா? அடுத்து அதே இதழில் "போர் நிறுத்தத்தை தாங்களே முன்வந்த செய்துள்ளனர்" என்று புலிகளின் யுத்த நிறுத்தை குறிப்பிடும் போது, இது புலிகளை பாதுகாக்க முனைகின்றது. இது இன்றைய சர்வதேச இலங்கை நிலைமைக்கு முற்றாக முரணாது. யுத்தநிறுத்தம் அவர்கள் அல்ல, ஏகாதிபத்தியங்களால் ஏற்படுத்தப்பட்டன அல்லவா! இது போன்று பல அரசியல் விலகல்களையும், அரசியல் அடிப்படைகளையும் விமர்சிக்க, இன்றுமொரு இதழே தேவைப்படும் அளவுக்கு மலிந்து காணப்படுகின்றது. இது தேசிய, சர்வதேசிய அரசியல் இடை வெளியை புரிந்து கொள்ளத் தவறியதன் வெளிப்பாடாக உள்ளது.

# மலடாகிப் போன வக்கற்ற வக்கிர இன்ப நுகர்ச்சி, இலக்கிய விபச்சாரம்

மலடாகிப் போன வக்கற்ற புலம்பெயர் இலக்கிய நடத்தைகளை இட்டு எழுதுவது காலத்தையும், இடத்தையும் விரயமாக்குவதாகவே மாறிவிட்ட நிலையில், இதை அம்பலம் செய்யும் வகையில் சிற்சில குறிப்புகள் அவசியமாகி விடுகின்றது.



பாராளுமன்றம் பன்றிகள் கூடிக் குலாவும் சகதியாக இருக்குமளவுக்கு அதன் பிரதிநிதிகள், ஊழல், லஞ்சம், விபச்சாரம், சாதிச் சங்க அரசியல், நிற அதிகாரம், ரவுடித்தனம், கடத்தல், திருட்டு, உழைப்பை உறிஞ்சும் அட்டைகள் என்று சமுதாயத்தின் இழிந்து போன அனைத்து சமுதாய விரோதிகளும் கூடி புரண்டு எழும் நாற்றத்தால் அழுகிக் கிடக்கின்றது. இந்தப் பாராளுமன்றங்கள் எப்படி மக்களுக்கு விரோதமாக இருக்கின்றதோ, உலகத்தில் உள்ள கழிசடைகள் எல்லாம் ஜனநாயகத்தின் பெயரில் கூடுமிடமாக இருக்கின்றதோ, அது போன்று தான் புலம் பெயர் இலக்கியச் சந்திப்பும் இருக்கின்றது என்றால் மிகையாகாது.

புலம் பெயர் இலக்கியச் சந்திப்பு ஏன் நடத்துகின்றார்கள் என்று கேட்டால் அதற்குக் கூட பதிலளிக்க முடியாத வகையில், சமூக நோக்கம் சிறிதும் அற்றவையாகி வக்கற்றுப் போய் மலடாகியுள்ளது. கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் பின்பும், சமூகத்தின் நோக்கத்தில் உண்மையையோ, நேர்மையையோ கொண்டிருப்பதில்லை. மலடாகிப் போன மலட்டுத் தனத்தில் வக்கற்றவர்களாகி உயிர்ப்பற்ற வம்புகளின் இன்ப நுகர்வில் காலத்தையும், சமூகத்தையும் இட்டு வக்கரித்து பிதற்றுவதே இதன் பொழுது போக்கு. காழ்ப்பு உணர்வுகள், சதிகள், திட்டமிட்டே தாக்குவது, முதுகு சொறிவது, குறுகிய நோக்கில் சாதி மற்றும் சமுதாயத்தில் எதாவது ஒன்றை இட்டு, சமூக நோக்கமின்றி முன்னிலைப்படுத்தி அதில் குளிர் காய்வது, பெண்ணியம் பேசிய படி கலந்து கொள்ளும் பெண்களை ஆணாதிக்க வடிவில் இழிவாக கொச்சைப்படுத்துவதும் பயன்படுத்துவதும், தமது உப்புச் சப்பற்ற பல பக்கக் கட்டுரைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பைபிள் மாதிரி, எழுதியதை ஒப்புவிப்பதை நோக்கமாக கொள்வது, விவாதங்கள் நடத்த முடியாத அளவுக்கு அறிவற்ற குருட்டுத்தனத்தில் இருந்து வீம்பு பண்ணுவது, எங்கள் அறிவுத் தேடலை பன்முகப்படுத்துகின்றோம் என்ற வம்பு வாதங்களின் பின்பு ஓணான் போன்று தமது நிறம் மாற்றும் வக்கற்ற தன்மைக்கு விளக்கம் அளிப்பது, நேரடி வன்முறை என்று, சமுதாயத்தை இட்டு அலட்டிக் கொள்ளாமல், போதைவஸ்து கடத்தியவர்களும், ஜனநாயக படுகொலைகளை நியாயப்படுத்தியவர்களும், உற்றர்ரும், உறவினரும், நண்பர்களும், இலக்கியம் சமுதாயத்துடன் தொடர்பற்றது என்று சமுதாயத்தில் இருந்து விலகி வக்கற்று பிற்றுபவர்களும் என்று பல வண்ண சமூக இழிவுகள் சேர்ந்து, யதார்த்தத்துக்கு புறம்பாக தமது வம்புத் தனங்கள் மூலம் சீரழிந்து கிடக்கின்றனர்.

பாரிசில் மார்கழி 23,24 ஆம் திகதிகளில் நடந்த இலக்கியச் சந்திப்பும் இதையே மீண்டும் சாதித்தது. ஆனால் இந்த சந்திப்பு தனக்குத் தானே மார்க்சிய முலாமிட நாய் வாலை நிமிர்த்த பிரயத்தனம் செய்தது. யாரை மட்டம் தட்டுவது, விவாதத்தின் ஒழுங்கு முறைகள் மூலம் யாரை புறக்கணிப்பது, யாருக்கு நேரம் கூட்டுவது குறைப்பது என்று திட்டமிட்டு தீர்மானித்து, அதை எப்படி மறைமுகமாக கட்டுப்படுத்துவது என்று பல சதிகளை, திட்டமிடுதலைக் கொண்டே "சுதந்திரமான" "ஜனநாயக" 'விவாதத்தை" நடத்தின. பாரிசில் எக்ஸில், உயிர்நிழலை அடிப்படையாக கொண்டு உருவான மோதல், சென்ற வருடம் வன்முறையாக வெடித்தது. இதில் இரண்டு அணியாக களம் இறங்க, சிலர் வாலை அங்கும் இங்குமாக இதற்குள் நுழைத்தபடி நகர்ந்து மலடாகிப் போன புலம் பெயர் வக்கற்ற வக்கிர இலக்கியம், இன்று இறுகிய இரு போக்குகளை எடுத்துள்ளது.

எக்ஸில் மார்க்சிய எதிர்ப்பை அடிப்படையாக கொண்டு வலதுசாரி வலது அரசியல் பக்கம் குறுகிய திடீர் அதிர்ச்சி மலட்டுக் கோசங்கள் ஊடாக தன்னை நிலைப்படுத்த முனைகின்றது. மறுபுறம் உயிர்நிழல் இதனுடன் இணங்கிப் போகாத அனைத்து வகையான வக்கற்ற மலட்டு அரசியல் ஓடுகாலிகளின் வலது இடது ஜென்மங்களின் பின்னால், தனக்குத் தானே மார்க்சிய முலாம் பூச விரும்புகின்றது. மார்க்சியத்தின் வர்க்கப் போராட்டமும், அதன் மேலான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும்,

## விபச்சாரமும் இலக்கியமும் சந்திக்கும் புள்ளிகள்

ஐரோப்பிய பாலியல் வக்கிரத்தை தீர்க்க சுற்றுப் பிரயாணத்தை செய்த சாருநிவேதா, இந்திய ஏகாதிபத்திய தரகு முதலாளிகளுக்கு சார்பான மேட்டுக் குடி பெண்களின் அலைந்து திரிந்து அனுபவிக்கும், நுகர்வு விபச்சாரத்தை ரசித்து அனுபவித்த ஆணாதிக்க வக்கிர வெறியை இலக்கியமாக்கி, அதை புலம்பெயர் வக்கிரங்களுக்கு புலம்பியபடி, ஐரோப்பிய விபச்சாரிகளை வீதி விதியாக தேடி, பரந்த பெரிய மார்பகங்களை கண்டுபிடித்து (இப்படியான பெண்களே வேண்டும் என்று கோரி தேடியலைந்தான்) அவர்கள் முன் அமர்ந்தே, இலக்கிய சுற்றுப் பயணத்தை நிறைவு செய்த புரட்சிச் செம்மல். ஆணாதிக்க பாலியல் வக்கிரம் பிடித்த இந்தச் செம்மல் 1.2.2001 குமுதம் இதழில் "கஞ்சா புகைத்தபடி" ஆடை அவிழ்ப்பை நடன (டிஸ்கோவில்) மண்டபத்தில் செய்ததாக வாக்கு மூலம் கொடுக்கின்றான். கஞ்சா அடித்தபடி ஆணாதிக்க வக்கிரத்தை ரசித்து இலக்கியம் படைக்க, கோப்பை கழுவி கூப்பிட்டதாக இந்த ஆணாதிக்க பன்றி அதில் எழுதத் தயங்கவில்லை. பாரிசில் ஸ்ராலின் பேய் கலைக்க வந்த இடத்தில், சாதித்தது எல்லாம் இவைதான். இந்த பச்சைப் புளுகாண்டி கஞ்சா அடித்த போதையில் ஆணாதிக்க பாலியல் வக்கிரத்தை தீர்க்க கூப்பிட்ட புலம்பெயர் பின்நவீனத்துவ தலித்துகள், நாள் ஒன்றுக்கு 30 மணி (!!) நேரம் உழைத்து, 30 மணி முடிய (!!) மயங்கி விழுந்ததாக கூறுவது, பார்ப்பான் தியாகராயர் சிதம்பரம் சென்ற போது திரைச்சீலை அறுந்து விழுந்து திருவுருவம் காட்டியது போல் அதிசயமானது. இது போன்ற பல புளுகுகளை குமுதம் ஊடாக வெளியிட்ட சாருநிவேதாவை, 30 மணி நேரம் மயங்கி விழ விழ கோப்பை கழுவி அவரை கூப்பிட்டு தூக்கி திரிந்து, விவாதம் நடத்திய எல்லா எழும்பு சுப்பிகளின் ''சுதந்திர'' ''இலக்கிய'' தலித் பின்நவீனத்துவ "முதுகு எலும்புகளிடம்" குலைத்து நக்க இதை விட்டுவிடுவோம். ''அரசியல்வாதிகளால் கவிஞர்களைப் புரிந்து கொள்ள முடியாது. வெறுமனே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடர்ந்தும் வர்க்கப் போராட்டத்தை தொடர்வதையும் மறுத்து, அதை எதிர்த்து மார்க்சியத்தை திரித்து மலடாக்கி, அதை மார்க்சியமாக காட்டி தனக்குத் தானே ஒளிவட்டத்தை போட்டுக் கொள்ள முனைகின்றனர். இவ்விரண்டுக்கும் இடையில் அங்கும் இங்குமாக அலைவுகள் இருந்த போதும், இதன் பண்பு தெளிவுபட கோடுபிரிக்கத் தொடங்கியுள்ளது. எக்ஸிலின் வலது அணியில் தனிப்பட்ட காரணங்களால் இடம் கிடைக்காத வலதுகள், உழைக்கும் மக்களை எதிர்த்து அம்மாவின் பின்னால் அணிகட்டி கோஸ்டி கானம் கோலோசுகின்றது. கோஸ்டி கானம் மேலும் ஆழமாக புதிய கோஸ்டிகள் சார்ந்து சஞ்சிகளையும், மலர்களையும் பெத்துப் போடுவது தவிர்க்கமுடியாது விளைவாகின்றது. இதன் தொடர்ச்சியில் சனதருமபோதினி என்ற மலர் அண்மையில் வெளியாகியது. இதன் வெளியிட்டு ஆசிரியர் குறிப்பில், சமரை மையமாக வைத்து சேறுயடிப்பை தொகுத்துள்ளது. சென்ற மலர் இருள்வெளி போல், ஒடுக்கபட்ட மக்களை எதிர்த்து தனது பிதற்றலையே மீளவும் புலம்ப முடிந்துள்ளது.

பாரிசில் தொடங்கிய அரசியலில் வக்கற்றவர்களின் இலக்கிய மோதல், சமுதாய மாற்றத்தை நடைமுறையில் சாதிக்க போராட வேண்டும் என்று கோராத, இதை நிராகரிக்கின்ற இலக்கிய பிழைப்புவாதிகள் அனைவரையும் இதற்குள் அணிதிரட்ட தொடங்கியுள்ளது. புலம் பெயர் அனைத்து நாடுகளிலும், இந்தியாவிலும் இப்பிளவு சார்ந்து ஆழப்படுத்தியுள்ள அதேநேரம், இது இலங்கைக்குள்ளும் புகுந்து வருகின்றது. இதை வக்கற்றவர்களின் மலட்டுக் கோட்பாட்டில் சாதிக்கவில்லை. மாறாக அவர்களின் எழுத்துக்கான முன்னுரிமையும் நிராகரிப்பையும் (அதாவது அவர்களுக்கிடையில் உள்ள முரண்பாட்டை பயன்படுத்தல்) அடிப்படையாகக் கொண்டும், தனிப்பட்ட உறவுகளை ஏற்படுத்தல் மூலமும், விமர்சனமற்ற குழையடிப்பும், அவர்களின் எதிரிகளை தூற்றுதல் மூலமும், தனிப்பட்ட தாக்குதலை முதுகுக்கு பின்னால் கட்டமைத்தும், சமுதாயம் சார்ந்த வக்கற்றுப் போன மலட்டு இலக்கியம் ஒன்றுக்கு பணத்தை கொடுப்பதன் மூலமும், வெளிநாட்டு வக்கற்ற இலக்கிய சுற்றுப் பயணத்தை குலுக்கல் சீட்டாக இவர்கள் முன் நிறுத்தி, கனவுகளில் மிதக்கவிட்டதன் மூலம், இந்த அணி பிரிதல் சாத்தியமாகியுள்ளது. சீட்டுக் குலுக்கலில் வெற்றி பெற, இலங்கை இந்தியாவில் வாழும் மலட்டு இன்ப நுகர்ச்சி இலக்கிய நீட்சைகள், டிஸ்கோ நடனக்காரிகள் போல் உரிந்துவிட்டு

குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்யவே முடியும்" என்று சாருநிவேதா கூற, அம்மா இதில் இருந்து தனது இலக்கிய கோட்பாட்டை வகுக்க, அதன் ஆசிரியர் குறிப்பில் "இன்றைய இலக்கியச் சூழல் ஓர் கலகக்காரரின் வருகைக்காக காத்துக்கிடக்கிறது..." என்ற தலைப்பிட்டே இதை எடுத்துக் காட்டி, ஒரு கலகக்காரனுக்குரிய பெருமை கொடுத்து பெருமைப்பட்டு சாமரை வீசத் தயங்கவில்லை. கஞ்சா அடித்து ஆணாதிக்க வக்கிரத்தை (சினிமாவில் ஆடவைக்கப்படும் பாலியல் வக்கிர நடனங்கள் மற்றும் காட்சிகள் போல்) கொட்டித் தீர்க்கும் கோட்பாட்டு சமூகவிரோதிகளை, அரசியல்வாதிகள் சரியாக புரிந்தே இருப்பதை இவை மீண்டும் உறுதி செய்கின்றது. இங்கு அரசியல்வாதிகள் என்பது பாட்டாளி வர்க்கத்தை குறித்தே நிற்கின்றது. (இந்த நடத்தைகளில் ஈடுபடும் சாதாரண மக்களை, கோட்பாட்டு இலக்கிய தளத்தில் இருந்து வேறுபிரித்தே பாட்டாளி வர்க்கம் அணுகுகின்றது.) இந்தியாவில் கோடான கோடி மக்கள் கொத்தடிமையாகவும், சாதிய கொடூரத்தாலும் மற்றும் சுரண்டப்படும் உழைக்கும் மக்களின் உதிரத்தை மறைமுகமாக ஆதாரமாக கொண்டு, சொகுசாக வாழும் இந்த பன்றிகளின் சமூக விரோத வக்கிர இலக்கியங்களை பாட்டாளி வர்க்கம் சரியாகவே மீண்டும் இனம் காண்கின்றது. அதையிட்டு மூலதனமும், அதை வாலாட்டி சூப்பித் தின்னும் நாய்களும் குரைக்கின்ற போதே, எமது விமர்சனத்தினதும் போராட்டத்தினதும் சரியான பாதையை மீளவும் உறுதி செய்கின்றது.



விபச்சாரமும் இலக்கியமும் சந்திக்கும் புள்ளிகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடும் "சுதந்திர" "ஜனநாயக" வேஷைத்தனத்தில் தலைகால் தெரியாமல் குதித்தாடுகின்றனர். இந்த வெளிநாட்டு பயணக் குலுக்கல் மற்றும் தமது தெரிவில் தமது குறுகிய வக்கற்ற திடீர் மலட்டு அதிர்ச்சி கோசங்களை உச்சரித்து, கூப்பிட்டவரை உச்சி குளிர வைக்கும் நபர்களை முன்னிலைப்படுத்தப்படுகின்றனர். அனைத்துக்கும் பணத்தை ஆதாரமாக, அடிப்படையாக கொள்ளுகின்றனர். இந்தியா, இலங்கையில் இருந்து பிழைப்புவாத பிரமுகர்களை கூப்பிடுவதே ஜனநாயக புரட்சியாகவும், புலம் பெயர் இலக்கியமாகிப் போனது ஆச்சரியமானது அல்ல. இது சாதி பார்த்து, பிரமுகத்தனம் பார்த்து, மார்க்சிய எதிர்ப்பின் அளவு கோல் பார்த்து, இதில் எது தமது வக்கற்ற அரசியல் மலட்டு பிழைப்பவாத பிளவு அரசியலுக்கு சாதகமானது என்று கணிப்பிட்டே, தமது குலுக்களில் கூட மோசடி செய்கின்றனர்.

இந்தியாவில் இருந்து இலங்கை வரை இந்த குலுக்கல் விரவிப் பரவுகின்றது. ஏகாதிபத்திய பாலியல் நோயால் வக்கிரம் பிடித்த ஆணாதிக்க கழிசடை நாயகன் சாருநிவேதாவின் ஐரோப்பிய இலக்கிய வக்கற்ற மலட்டுச் சுற்றுப் பயணமும் (பார்க்க பெட்டிச் செய்தியை), இலங்கையில் இருந்து வந்த டொமினிக் ஜீவா என, வக்கற்ற இரு மலட்டு எதிர் அணி சார்ந்து இலக்கியச் சந்திப்பின் கோஷ்டி கானத்தில் கலந்து கொண்டனர். இது போன்றே சில மாதத்துக்கு முன் நடந்த பெண்கள் சந்திப்பிலும் நடந்தது. புலம் பெயர் இலக்கிய நடத்தை என்பது, இலங்கை இந்தியாவில் வக்கற்றுப் போன பிரமுகர்களின் தயவிலான கோஷ்டி கானத்தில் புலம் பெயர் இலக்கிய வானில் பாடப்படுகின்றது. இந்த வக்கற்றவர்களின் இன்ப நுகர்ச்சி எப்போதும் சந்திப்புகளின் இறுதியில் அருந்தும் மதுவில் புளுத்து வெளிப்படுவது வழக்கம். இங்கு வன்முறை, சாதி வக்கிரம், நிற வக்கிரங்கள், ஆணாதிக்க கொப்பளிப்புகள் உச்ச வெறியில் உளறும் போதும் தலைகால் தெரியாது பீறிடுவதே புலம் பெயர் இலக்கியத்தின் உச்சமாகும்.

புலம் பெயர் வக்கற்ற மலட்டு இலக்கியத்தின் நியாயப்படுத்தலை படுகொலை செய்யப்பட்ட சபாலிங்கம் பெயரில் பூசி மெழுகுகின்றனர். புலம் பெயர் இலக்கிய சஞ்சிகை சரி, இலக்கியச் சந்திப்பு தொடங்கியவர்களும், தொடங்கிய சமூக நோக்கம் சீரழிந்த போது, பலரை அதில் இருந்து ஒதுங்க வைத்தது. இந்த இலக்கியச் சந்திப்பு தொடங்கியதுக்கும் சபாலிங்கத்துக்கும் எந்தவித உறவு ஒட்டோ கிடையாது. சபாலிங்கம் கடைந்தெடுத்த வகையில், புதிதாக வந்த அகதிகள் சார்ந்து நியாயமற்ற வகையில் அவர்களை மூலதனமாக்கிய ஒரு வியாபாரி தான். இங்கு அல்லலப்பட்டு வந்த அகதிக்கு நியாயமான வகையில், பணம் பெற்று உதவிய சமூகவாதியல்ல. சமூகப்பற்று என்பது இந்த அகதிகளை மனிதநேயத்துடன் அணுகுவதும், அவர்களிடம் இயன்றதை மட்டும் பெற்று உதவுவதுமே. ஆனால் இதற்கு மாறாக பணத்தை கறந்ததன் மூலம், அவரின் சொந்த வாழ்வை மேம்படுத்தும் ஊடகமாக இந்த அகதிகள் இருந்தனர். இலங்கையில் இருந்து வரும் அகதிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டிருந்தவர், அவர்களிடம் வியாபாரியாக நடந்தவர், புலம்பெயர் மற்றும் சமூகம் பற்றி இலக்கியத்தில் மனிதாபிமானியாக, சமூகப் பற்றாளனாக இருந்தார் என்று பசப்புவது உண்மைக்கும், நேர்மைக்கும் மாறானது. இரட்டை நடத்தைகள் சமூக உறவில் சாத்தியமானது அல்ல. மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் புலியெதிர்ப்பு ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்தில் பணம் பெற்று, இலங்கை அரசின் பாதுகாப்பு பெற்று வெளியிடும் வெளியீடுகளை, மொழி பெயர்த்து ஏகாதிபத்திய அரசியல்வாதிக்கு விசுவாசமாக விநியோகித்து, ஏகாதிபத்திய கைக்கூலியாகி புலம் பெயர் இலக்கியவாதியாகியவர். இவர் படுகொலை செய்யப்பட முன்பு மிக குறுகிய காலமே, இந்த இலக்கியச் சந்திப்புகளுக்கு சென்று வந்தவர். ஆனால் புலம் பெயர் இலக்கிய செயற்பாட்டால் தான் கொல்லப்பட்டார் என்பது அப்பட்டமான சோடிப்பும் மோசடியுமாகும். அது சரி இந்த இலக்கிய பிரமுகர் என்ன இலக்கியத்தை புலம் பெயர் சமூகத்துக்கு தந்துள்ளார்! அதில் எது சார்ந்த குறிப்பாக கொல்லப்பட்டார்! வக்கற்றுப் போன மலட்டு எந்த இலக்கியவாதியும்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்க முடியாத மர்மமான இலக்கியமாம் அவர் இலக்கியம்!

இலக்கிய சந்திப்பிலும், வெளியிலும் கோஷ்டி சேரும் வக்கற்றவர்கள், இலக்கிய சந்திப்பு புலிகளின் அராஜகத்துக்கு எதிரானது என்றும், அதனால் தான் புலிகள் இதை விரும்பவில்லை என்றும் பலவிதமாக தாலிக்கு முடிச்சுப் போடுகின்றனர். புலிகளின் அராஜகத்துக்கு இலக்கியச் சந்திப்பு எதிரானது என்பது எந்தவிதமான அரசியல் அடிப்படையோ, அதை இதுவென்று சொல்ல எந்தவிதமான அடிப்படையும் ஆதாரமும் கிடையாது. புலிகள் இலக்கியச் சந்திப்பை விரும்புகின்றார்களா எனின் இல்லை. அது புலிகளின் அரசியலுக்கு எதிரானது என்ற அடிப்படையில் அல்ல. புலிகள் அல்லாத எந்தச் செயற்பாட்டையும் புலிகள் விரும்புவது இல்லை. அது சிறு இலக்கிய சஞ்சிகையாக இருக்கட்டும், பாடசாலை பழைய மாணவர் சங்கமாகட்டும், பல்வேறு புலிகளின் பினாமியாக செயற்படும் தொலைக் காட்சி மற்றும் ரேடியோவாக இருக்கட்டும், புலிகளுக்கு சார்பாக புலி அல்லாத பிரிவு பணம் திரட்டுவதாக இருக்கட்டும், சினிமா படம் ஓடுவதாகட்டும், தமிழ் கல்வியாகட்டும், அனைத்தையுமே புலிகள் அல்லாத பிரிவு செய்வதை புலிகள் விரும்பவில்லை. இது சாதாரண பலசரக்கு கடைகள், கோயில்கள் என அனைத்துக்கும் பொருந்தும். இதுவே யதார்த்தமாக உள்ளது. அதற்கு எதிராக புலிகள் இருப்பதே உண்மை. இது போல் தான் இலக்கியச் சந்திப்பு பற்றிய புலிகளின் நிலைப்பாடும் நடத்தைகளும். இதை விட்டு இலக்கியச் சந்திப்பு புலிக்கு மாற்றான, தமிழ் மக்களின் ஒரு அரசியல் மற்றும் இலக்கிய சக்தியல்ல. இதற்கு மாறாக அரசியலில் வக்கற்றுப் போய் கோஷ்டி கானத்தில் இன்ப நுகர்ச்சியை நுகர, இறக்குமதியாகும் இலக்கிய நீட்சைகளின் தயவில் சோகமாக புலம்புவது நிகழ்கின்றது.



விடுதலை இயக்கங்களாலும், புலிகளாலும் மறுக்கப்பட்ட ஜனநாயகமும், ஜனநாயக படுகொலைகளுக்கு எதிராக போராடி மரணித்த ஆயிரக்கணக்கான மனிதர்களின் தியாகங்களையும், மூடிமறைக்கப்பட்ட ஒரு நிலையில் தான் மலடாகிப் போன புலம் பெயர் இலக்கியம் வக்கற்றுப் போய்கிடக்கின்றது. மண்ணில் ஜனநாயகம் கோரி போராடி மரணித்த ஆயிரக்கணக்கான தியாகிகள் பெயரில், அதன் தொடர்ச்சியில் இன்று இந்த இலக்கியச் சந்திப்பு நடக்கவில்லை. தொடங்கிய போது இது பற்றி இருந்த சமூக அக்கறைகளை மூடி மறைத்தபடி, அதை இன்று மறுத்தபடி, அந்த ஜனநாயக அரசியலை கொச்சைப்படுத்தி மீண்டும் மீண்டும் அவர்களை படுகொலை செய்தபடிதான், புலம் பெயர் இலக்கியம் வக்கற்று கோலோச்சுகின்றது. கடந்த கால ஜனநாயக போராட்டத்தை மறுத்து குறுகிய வக்கிரத்துடன் திடீர் கோசங்களை போட்டபடி, வரைமுறையற்ற இலட்சியமற்ற எல்லையற்ற விவாதம் நடத்துவதாக பிதற்றுவதும், தேடுவதாகவும் கூறி, சமுதாய இயங்கியலை கொச்சைப்படுத்துகின்றனர். புலம் பெயர் சமூக பிரச்சனை, வாழும் நாட்டின் பிரச்சனை, சொந்த நாட்டு பிரச்சனை என எதிலும் சமூக அக்கறையும் கிடையாது. இது போல் இவர்களின் இலக்கியம் மற்றும் சந்திப்புகள் கூட இதை பிரதிபலிப்பதில்லை.

புலியெதிர்ப்புக் கோசத்தின் கீழ் தமிழ் மக்களின் சுயநிர்ணயத்தையே மறுத்து, இலங்கை அரசின் கைக்கூலியாக கோட்பாட்டிலும், நடைமுறையிலும் கோசம் போடுவது வக்கரித்துக் கிடக்கின்றது. எல்லாவற்றுக்கும் புலியெதிர்ப்பு ஊடாக நியாயப்படுத்தி, ஜனநாயக வேடம் போடுவதன் மூலம், பெரும் தேசிய வெறியர்களாக பவனிவருவதில் இலக்கியச் சந்திப்பு வக்கரித்து வெதும்பிக் கிடக்கின்றது. மறுபுறத்தில் புலியெதிர்ப்பில் புலிகளின் ஜனநாயக விரோத நடத்தைகளை தனித்துவமாக்கி, அரசியல் விபச்சாரம் செய்வது மலட்டு தனத்தில் ஒரு வடிவமாகியுள்ளது. இந்த மலட்டுத்தனத்தைத் தான், எம் மண்ணில் நடந்த உன்னதமான ஜனநாயக போராட்டமாக காட்ட முனைவது நிகழ்கின்றது. உதாரணமாக எக்ஸில், முஸ்லிம் சிறப்பு இதழ் வெளியிட வக்கற்றுப் போன மலடுகளை அழைக்கின்றனர். புலிகள் முஸ்லிம் மக்களை ஒரே நாளில் ஈவிரக்கமின்றி குறுகிய குறுந்தேசிய வெறியில், அவர்களின் வாழ்விடத்தை விட்டு துரத்திய மனித விரோத நடத்தைகளை குறிப்பாக்கி, அதை குறுகிய சிங்கள பெரும் தேசிய இனவாதம் சார்ந்து, புலியெதிர்ப்பு கோசம் போட வக்கற்றவர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைக்கின்றனர். முஸ்லிம் மக்களையிட்டு, அவர்களின் விடுதலை மீது அக்கறை கொள்பவன், தமிழ் மக்களையிட்டும் அக்கறை கொள்ளவேண்டும். இங்கு இரட்டை வேடம் இருக்க முடியாது. எக்ஸில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்த படி (இதை எழுத்தில் வைக்க வக்கற்றவர்கள்), அதை கொச்சைப்படுத்தியபடி தான், முஸ்லிம் மக்களை பற்றி முக்கால் அழுது சிறப்பு இதழ் வெளியிட முனைகின்றனர். உண்மையில் இதைத் தான் புலிகளுக்கு எதிராக பெரும் தேசிய சிங்கள இனவாதமும் செய்கின்றது. மறுக்க முடியுமா? பெரும் தேசிய இன வாதம் சிறு தேசியத்தை ஒடுக்கும் போது, இங்கு தமிழ், முஸ்லிம், மலையகம் என அணுகுமுறையில் அவற்றுக்கிடையில் வேறுபட முடியாது.

முரணற்ற ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்டு அணுகும் போக்குக்கு பதிலாக; சாதியம், இனம், நிறம் என்று சமுதாய பிரச்சனைகளை குறுகிய நோக்கத்துடன் கோசம் போட்டு, அரசியலில் குறுக்கு வழியில் புகுந்து விடும், மலடாகிப்போன மலட்டுக் கோசங்கள் வக்கற்று வக்கரிப்பதே இன்றைய புலம் பெயர் இலக்கியம் என்றால் மிகையாகாது.

குறிப்பு -1 "யன்னலைத் திறவுங்கள்" என்ற தலைப்பில் அசோக்கிடம் சில கேள்விகள் என்ற பெயரில் அவரே எழுதி வெளியிட்ட 18 பக்க பிரசுரத்தில் பெயர் குறிப்பிட்ட சில முன்னைநாள் இவர்களின் சீடர்களையிட்டு தனிப்பட்ட தாக்குதலை நடத்தியுள்ளார். எந்த விதமான அரசியலையும் கொண்டிராது, அங்கும் இங்கும் தனிப்பட்ட முகம் சார்ந்த உறவை ஒட்டி அலைந்து திரியும் அசோக், முன்னை நாள் சீடர்களையும், நண்பர்களையும் தாக்கிய போது, அந்த தாக்குதலை நடத்த உதவிய சில தனிப்பட்ட சம்பவங்கள் உண்மையாக இருந்த போதும், ஏன் அவர்களைப் பற்றி முன்பே நேர்மையாக முன்வைத்து விமர்சிக்கவில்லை. பாரிசில் புலம்பெயர் இலக்கியத்தில் நேரடி வன்முறையை முதலில் தொடக்கி வைத்த அசோக் கோஷ்டி கானம் பாடத் தொடங்கியது முதல், எதிர்க் கோஷ்டியை தூற்றுவதும், முன்பு தூற்றியவர்களை புரட்சியின் நாயகர்களாக காட்டி அதையே மார்க்சியமாக்கி, அவர்களையும் மார்க்சியவாதியாக காட்டி வியாபாரமாக்கிவிடுவது புலம் பெயர் இலக்கியமாகியுள்ளது. "சதி" அமைப்பான புளொட்டின் மத்தியகுழு உறுப்பினராக இருந்ததனால், முன்னைய உறவுகளையும், பிரமுகத்தனத்தையும் பயன்படுத்தி, புலம்பெயர் மற்றும் இந்தியா இலங்கை வரை தொலைபேசி மூலமே குறுகிய நோக்கத்தில், வக்கற்ற வக்கிரமான மலட்டு அரசியல் பிழைப்பை அண்மைக்காலமாக விரிவாக்கியுள்ளார். இது சார்ந்து கோஷ்டி கானம் இசைப்பதில், அவர் ஒரு குழுவுக்கு தலைவராக இருப்பது இன்றைய புலம் பெயர் இலக்கியமாக உள்ளது.

குறிப்பு -2 கவிஞரும், முஸ்லிம் மக்கள் பற்றி முதலைக்கண்ணீர் வடித்தே அவர்களின் மீட்பாளராக உலாவருபவரும், தற்போதைய புலிகளின் பினாமியுமான வ.ஐ. ஜெபாலனின் தம்பி (அண்ணன் பற்றி விமர்சிக்காத, மற்றவர்கள் விமர்சித்தால் களம் இறங்கும் வாய் திறவாத புரட்சிக்காரன்) உயிர்நிழல் 15 இல் தான் சார்ந்த கோஷ்டி கானத்தில் "புலிகளுடன் சுமுகமாக உறவு கொண்டுள்ள ஒரு நாடக ஆசிரியரின் நாடகம் புலி எதிர்ப்பு நாடகம் எனப் பிழையான..."விளக்கம் கொடுத்ததாக பெயர் குறிப்பிட்டு எழுத வக்கற்று, அம்மா ஆசிரியரை கோஷ்டி கானத்தின் தொடர்ச்சியில் தாக்குகின்றார். இதன் படி தாமும் மற்றவர்களும் புலிகளுடன் சுமுகமற்ற உறவு கொண்டுள்ளதாக சத்தியம் செய்கின்றார். புலிகளிடம் சுமுகமற்ற உறவு கொண்டிருக்கும் அந்த அரசியல் மட்டும் இதுவரை யாருக்கும் தெரியாது. இவர் அண்மையில் இந்தியாவில் நடந்த தமிழினி இலக்கிய நீட்சைகளின் கூட்டத்தில் கலந்து கொண்டு அதை பாதுகாத்து வக்கரித்த போதே இதை உயிர்நிழலில் புலம்புகின்றார். இவர் கோட்பாடற்ற மலட்டு கதம்ப இலக்கியச் சந்திப்புகளை முன்நின்று தலைமையேற்று நடத்தும் போலி மார்க்சிய வேடதாரி, மற்றவர்களை கோஷ்டி கானத்தில் வரைமுறையற்று தாக்கும் போது, புலிகளை எப்படி விமர்சிக்க வேண்டும் என்று கூறுவது கிடையாது. தமிழ் மக்களின் சுயநிர்ணய போராட்டத்தில் என்ன பாத்திரம் எடுக்க வேண்டும், எப்படி புலிகளை விமர்சிக்க வேண்டும் என்று கூறுவது கூட கிடையாது. மாறாக புலி முத்திரை குத்துவதன் ஊடாக வக்கற்ற அரசியல் பிழைப்பை நடத்துவது கோஷ்டி கானத்தின் சோக இசையாகின்றது. புலிகளை இன்று எங்கே எப்படி அரசியல் ரீதியாக விமர்சித்துள்ளீர்கள்! என்ன நடைமுறையை மாற்றாக வைத்துள்ளீர்கள்! இப்படி எதுவும் இல்லாமல் இருக்கும் போது, அதை மற்றவர் மீது சுமத்துவது கடைந்தெடுத்த மோசடியாகும். அண்ணன் ஜெயபாலன் புலிகளுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடிக்குலாவி நடத்தும் தேன்நிலவு வைப்பாட்டித் தனத்தை, யாரும் கேள்வி கேட்டால் துள்ளிக் குதிக்கும் தம்பி ஸ்பாட்டகஸ்தாசன், மற்றவர்களுக்கு ஆதாரமற்ற முத்திரை குத்துவது புலம் பெயர் இலக்கியத்தின் வக்கற்ற மலட்டுத்தனத்தின் வக்கிரமாக புரையோடிப் போய்க்கிடக்கின்றது.

குறிப்பு 3: அம்மா 13 இல் ஷோபா சக்தி "... அரசின் அனுமதியைப் பெற்று அரசு அனுமதித்த பாதைகளின் வழியே பதாகைகளை உயர்த்திப் பிடித்துவந்து மேதின ஊர்வலத்துக்கு தலைமையேற்று நடத்தி ஒழுங்கமைப்பவர்கள் C.G.T, F.O போன்ற பிரான்சின் ஆகப்பெரிய கருங்காலித் தொழிற்சங்கங்களும் P.K.K, LTTE, JVP போன்றன குட்டி முதலாளிய இயக்கங்களுமேயாவர்" என்று ஒரு கண்டுபிடிப்பை பின்நவீனத்துவ தலித்திய கோட்பாட்டை கைவிட்டு, மீளவும் டிரொக்சிய வழியில் வெளியிட்டுள்ளார்.
இங்கு சட்டத்துக்கு புறம்பாக செயற்பட வேண்டும் என்ற கோசம் தொங்கி நிற்கின்றது. தொழிலாளி வர்க்கம் வன்முறை கொண்ட மனநோயாளிகள் அல்ல. அப்படி இருக்க வேண்டும் என்று கோருவது, அராஜக வாதத்தின் குட்டிபூர்சுவா மனப்பாங்காகும். தனது உரிமைக்கு போராடும் உரிமை உள்ள வரை, சட்ட விரோதமாக போராட வேண்டியது அவசியமற்றது. சட்டவிரோதமாக மாறுவது என்பது சட்டத்துக்குட்பட்ட போராட்டத்தின் வளர்ச்சியில், அரசு போராடும் உரிமையை மறுக்கின்ற போதே பரிணமிக்கின்றது. அனுமதித்த பாதை வழியாக செல்வது என்பது தவறான உள் நோக்கம் கொண்ட திரிபாகும். தொழிற் சங்கங்கள் கோரும் பாதையை பொலிஸ் அங்கீகரிக்கின்றது அல்லது உடன்பாட்டை பேச்சு வார்த்தையில் வந்தடைகின்றது. ஊர்வலங்கள் நடக்கும் இடம் பிரான்சின் மையமான பகுதியாக இருப்பது, இங்கு குறிப்பான விடயமாக உள்ளது. இத் தொழிற்சங்கங்கள் கருங்காலிச் சங்கங்கள் என்று முத்திரை குத்துகின்றார். எந்த ஆதாரத்தையும் இங்கு அடிப்படையாக வைக்கவில்லை. பிரான்சில் தொழிலாளர்களினதும் மக்களினதும் பிரதான கோரிக்கைகள், போராட்டங்கள் அனைத்திலும், அரசியல் கோரிக்கைகள் சரியாகவே உள்ளது. 1995 வேலை நிறுத்தம், லொறிச் சாரதிகளின் வாகன மறியல் போராட்டம், 35 மணி நேர கோரிக்கை, ஒய்வு கால நீடிப்புக்கு எதிரான போராட்டம், விசா அற்றோருக்கு விசா வழங்கக் கோரிய போராட்டம், வேலையற்றோர் உரிமை தொடர்பான அண்மைய மிக முக்கிய போராட்டங்கள் அனைத்திலும், C.G.T சரியான அரசியல் கோரிக்கையை முன்வைத்து எந்த ஒப்பந்தத்திலும் கையெழுத்திட மறுத்தன. 35 மணிக்கு பதிலாக 32 மணி நேரமும், அனைவரின் ஒய்வு ஊதியக் காலத்தை ஆகக் குறைந்ததுக்கு அதை மேலும் குறைக்கவும் என்று கோரிக்கைகளை முன்வைத்து போராடுவதில், சரியாகவே உள்ளது. இங்கு இத் தொழிற் சங்கம் கம்யூனிஸ்ட் கட்சியுடன் இருந்த நேரடி கட்டுபாட்டைக் கூட, அண்மையில் முறித்துக் கொண்டது. இங்கு பாட்டாளி வர்க்க அரசியல் வழியினூடாக புரட்சிகரமாக்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவும் போராட்ட அரசியல் வழிகாட்டல் இன்மையே, இதன் கோரிக்கைகள் வர்க்கப் போராட்ட மார்க்கத்தில் தடம்புரளுகின்றது. இதனால் தனிப்பட்ட சில நபர்கள் துரோகத்தில் ஈடுபடுகின்றனர். இதை வரையறுக்க அரசியல் கல்வியின்மையும், வர்க்க சர்வாதிகார மார்க்கத்தை நோக்கிய போராட்ட இன்மையும், இதன் அடிப்படையாக உள்ளது. பிரஞ்சு தொழிலாளர் வர்க்கத்தினால் எடுத்துக் கொள்ளப்பட்ட முக்கியமான விடயங்களில், சரியான கோசத்தையே இது முன்னிறுத்தியது. இதை மறுத்து மாற்றுக் கோரிக்கையை வைக்க முடியுமா. "சும்மா" எழுந்தமானமாக புலம்புவதை விட்டு ஆதாரமாக வைப்பது அல்லவா நேர்மை. பூர்சுவா இயக்கங்களின் பங்குபற்றல், பிரஞ்சு தொழிலாளர் வர்க்கத்தின் போராட்ட வரலாற்றில் காணப்படும், ஜனநாயக வழியில் இணைந்து போராடும் வரலாறு தெரியாதவர்களின், அறிவின்மையின் குருட்டுத்தனமான புலம்பலாகும். இது இயக்கங்களின் குறுகிய அழித்தொழிப்பு பூர்சுவா தனித் தன்மை வாதத்தின் வெளிப்பாடாகவே, மீளவும் பிரதிபலித்து எழுப்பப்படுகின்றது.

சமர்-27 இல் பக்கம்-8 இல் லெனின் படத்தை ஸ்ராலின் படமாக போட்ட தவறு நிகழ்ந்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சர்வதேசிய வர்க்க மதிப்பீடே, *எப்போதும்* பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர போர்த்தந்திரமாகும்.



"... புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசக் கட்டுபாடுக்குக் கீழ்ப்படுவதால் தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தின் மகத்தான பிரச்சினைகளைத் தீர்க்கிறோம் என்பதிலே நாம் பெருமைப்படுகிறோம்"[1] என்றார் லெனின். சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர போர்த்தந்திரம் மீது, மார்க்சியத்தை கைவிட்டு ஓடுகின்ற போது, சர்வதேச ரீதியாகவே பிளவுகள் ஏற்படுகின்றது. இது மார்க்சிய வரலாறு முழுக்க நிகழ்ந்து வந்துள்ளது. மூன்று உலகக் கோட்பாடு பற்றிய சர்வதேச வாத பிரதி வாதங்கள், புரட்சிகர பிரிவுகளை இரண்டாக பிளவாக்கியுள்ளது. இதன் குறிப்பான தன்மைகளை நடைமுறைக்கு பயன்படுத்தும் பலத்தையும், சூழலையும் பெறாத பாட்டாளி வர்க்கத்தின் குறிப்பான இன்றைய நிலையில், இதன் விளைவுகள் நடைமுறை அனுபவத்தை தவிர்க்கின்றது. ஆனால் இதை நடைமுறையில் பயன்படுத்தும் தன்மை, இதன் மீதான கோட்பாட்டுத் தெளிவை நிர்வாணப்படுத்தும்.

இன்று இதன் மீதான சர்வதேச பிளவை கோட்பாட்டு ரீதியாக ஆராய்வதன் ஊடாக, அதன் மீதான தெளிவைப் பெறுவது பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகின்றது. இதுவே பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் புரட்சிக்கு வழிகாட்டும். இன்று மூன்று உலகக் கோட்பாடு சர்வதேச புதிய மாற்றங்களின் ஊடாக, அதாவது சோவியத்தின் சிதைவின் பின்பு அதன் தன்மையே மாற்றமடைந்துள்ளது. அவை பற்றி இக் கட்டுரை ஆராயவில்லை. மாறாக அன்று இருந்த சர்வதேச நிலைமையில் இதை ஆராய்வதன் மூலமே, இன்றைய சர்வதேச நிலைமையை மதிப்பிட்டு, ஒருமித்த வகையில் பாட்டாளி வர்க்கம் புரட்சிகரமான மார்க்கத்துக்கு வந்தடைய முடியும்.

மூன்று உலகக் கோட்பாட்டை மறுத்து, சர்வதேசத்தைப் பற்றி மதிப்பீடாக எதையும் முன்வைக்காதவர்கள், எதை தமது கோட்பாட்டு நிலைக்காக முன்வைக்கின்றனர் எனப் பார்ப்போம்.

1.மூன்று உலகக் கோட்பாடு மாவோவால் முன்வைக்கப்படவில்லை.

2.மாவோ முன்வைத்த மூன்று உலகக் கோட்பாடு, சோசலிச நாட்டின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு கூறுக்கு மட்டுமே சரியானது.

3.மூன்று உலகக் கோட்பாடு சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரமல்ல. இது டெங்கின் கோட்பாடாகும்

4.மூன்று உலகக் கோட்பாடு புரட்சிகர மக்களின் ஐக்கியத்துக்கு பதில், பிற்போக்கு அரசுகளின் ஐக்கியத்துக்கே அழுத்தம் தருகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5.உள்நாட்டு வர்க்கப் போராட்டத்துக்கு உதவும் வகையில் மட்டுமே ஐக்கிய முன்னணி கட்டப்பட வேண்டும். ஆனால் மூ.உ.கோட்பாடு வர்க்க சமரசத்தை ஐக்கிய முன்னணியில் முன்வைக்கின்றது.
6.சமூக-ஏகாதிபத்தியமான ரசியாவை, அமெரிக்காவை விட பிரதான எதிரியாகவும், உலக யுத்தத்தின் ஊற்று மூலமாகவும் காண்கின்றது. இங்கு அமெரிக்கா தற்காப்பு நிலையில் இருக்கின்றது என்பது விஞ்ஞான ரீதியாக ஆதாரமற்றவை.
7.ஏகாதிபத்திய உலகத்தில் இருந்து அமெரிக்காவையும், ரசியாவையும் தனியாக பிரித்தெடுக்கின்றனர். இது தவறு.
8.பல்வேறு ஏகாதிபத்தியத்தின் நடைமுறை ஆக்கிரமிப்புத் தன்மையைக் கொண்டு, சர்வதேசியத்தை மதிப்பிடக் கூடாது. இவை மாறக் கூடியவை.
இவை தான் மூன்று உலகக் கோட்பாடு எதிர்ப்பாளர்கள் முன்வைக்கும் அடிப்படை கோட்பாட்டு வாதமாகும். இதை முன்வைத்தவர்கள் எந்த இடத்திலும் உலகை வகைப்படுத்த தவறிவிடுகின்றனர். இங்கு இவர்கள் உலகை வகைப்படுத்துவது தவறு என்று கருதுகின்றனரா? இப்படி மதிப்பிடுவது ஒரு சர்வதேசிய மார்க்கமாக இருக்க முடியாது என்கின்றனர். உலகின் பல்வேறு ஏகாதிபத்தியம் முதல் மூன்றாம் உலக நாடுகளை சர்வதேசிய பாட்டாளி வர்க்கம் வகைப்படுத்த முடியாதா? வகைப்படுத்துவது பாட்டாளி வர்க்கத்துக்கு எதிரானதா? வர்க்கப் போராட்டத்துக்கு எதிரானதா? இது வர்க்க சமரசத்தை ஏற்படுத்துகின்றதா? எப்படி? பாட்டாளி வர்க்கம் உள்நாட்டின் நிலைமைக்கேற்ப சர்வதேச நிலையை மதிப்பிட வேண்டுமா? சர்வதேசிய பாட்டாளி வர்க்க நிலை மற்றும் ஐக்கியத்தில் இருந்து உள்நாட்டு வர்க்கப் போராட்டத்தை நடத்த வேண்டுமா? மூன்று உலகக் கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள் இவைகளை ஒட்டி மௌனம் சாதிக்கின்றனர். ஏன்?

பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டம் என்பது முழு உலகையும் ஆய்வு செய்வதில் இருந்தே நடத்தப்படுகின்றது. சர்வாதிகாரத்தை பாதுகாக்கப் போராடுகின்றது. சர்வாதிகாரத்தில் வர்க்கப் போராட்டத்தை தொடருகின்றது. இதை மறுப்பது மார்க்சியமாகாது. ஒவ்வொரு தனி நாட்டிலும் நடக்கும் உள்நாட்டு வர்க்கப் போராட்டம் சர்வதேசிய கண்ணோட்டத்தில், சர்வதேச எதிரி மற்றும் நண்பன் மற்றும் நடுநிலை சக்திகளை மதிப்பிடுவதன் ஊடாகவே வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியும். இந்த ஆய்வை நிராகரித்த எல்லா நிலையிலும் இடது மற்றும் வலது சந்தர்ப்பவாதம் வர்க்கப் போராட்டத்தை இதற்குள் சிதைக்கின்றது. இன்று எந்த ஒரு கூறின் மீதும் நடக்கும் வர்க்கப் போராட்டமும் தவிர்க்க முடியாமல், சர்வதேச கூறுகளை உள்ளடக்கியே பிரதிபலிக்கின்றது. உலகமயமாதல் சமூகத்தில் அனைத்து சிறுவிடயங்களிலும் கூட ஊடுருவி உள்ள நிலையில், போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாகவே உள்ளது. இது சில வேளை பகிரங்கமாகவும், மறைமுகமாகவும் வர்க்க சமுதாயத்தில் ஊடுருவிப் பிரதிபலிக்கின்றது. எல்லா வர்க்கப் பிரிவுகளின் வர்க்கப் போராட்டத்திலும் விதிவிலக்கின்றி காணப்படுகின்றது. அதாவது ஏகாதிபத்தியத்துக்கு சார்பாகவும், எதிராகவும் கூட காணப்படுகின்றது. ஒரு சிறிய விடயத்தில் இது நிகழ்ந்தாலும், சர்வதேச மூலை முடுக்கெல்லாம் இது மறுபடியும் பிரதிபலிக்கின்றது. இன்று சிறிய நாட்டில் அல்லது கிராமத்தில் நடக்கும் வர்க்க அதிர்வுகள், உலகையே குலுக்குகின்றது. இது அனைத்து வர்க்கத்தையும் எதோ ஒரு வகையில் பாதிக்கின்றது.



இந்த நிலையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வர்க்கப் போராட்டத்தின் மீது நிறுவ விரும்பும் பாட்டாளி வர்க்கம், உலக நிலையை மதிப்பிடுவது அவசியமானது, நிபந்தனையானது. சர்வதேச நிலைமையை மதிப்பிடத் தவறுவது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவும் போராட்டத்தை கைவிடுவதற்குச் சமனாகும். சர்வதேச நிலையை மதிப்பிடத் தவறுகின்ற, அதை நிராகரிக்கின்ற நிலை என்பது, மார்க்சியத்தை கைவிட்டு ஓடுவதாகும். இது தேசிய வாதத்துக்குள்ளும், குறுகிய வர்க்க நலன்களிலும், பொருளாதார வாதத்துக்குள்ளும் சிக்கிவிடுவதாகும். இங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவும் போராட்டத்தை மறைமுகமாக கைவிடுவதாகும். ஒரு நாட்டில் நடக்கும் வர்க்கப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டுமாயின், அந்நாட்டைச் சுற்றியுள்ள அனைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளைப் பற்றிய மதிப்பீடு இன்றி சாத்தியமில்லை. இந்த மதிப்பீடு உலகின் எல்லா நாட்டு பாட்டாளி வர்க்க மதிப்பீட்டுக்கும் முரணாக இருக்க முடியாது. உலகின் ஒவ்வொரு நாட்டினைப் பற்றிய மதிப்பீடு, சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்துக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. இது ஒன்றாக இல்லாத வரை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ முடியாது. ஏன் தொடர்ந்து நிறுவிய நாடுகளின் சர்வாதிகாரத்தை பாதுகாக்கவும், வர்க்கப் போராட்டத்தை தொடரவும் கூட முடியாது.

உலகை மதிப்பிடுவது சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரமாகும். உலகை மதிப்பீடு செய்வது சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரமல்ல என்பது, விவாதத்துக்கிடமின்றி மார்க்சியத்தை கைவிட்டுச் செல்வதாகும். உலகை பாட்டாளி வர்க்கம் மதிப்பிடுவது வர்க்கப் போராட்டத்தை நடத்தவும், சர்வாதிகாரத்தை நிறுவவும், அதை பாதுகாத்து வர்க்கப் போராட்டத்தை தொடரவுமாகும். இதுவே பாட்டாளி வர்க்கத்தின் அடிப்படையான சர்வதேசிய புரட்சிகர போர்த் தந்திர மார்க்கமாகும். இதை நிராகரிக்கின்ற போது வர்க்கப் போராட்டத்தை கைவிட்டுச் செல்வது நிகழ்கின்றது. இந்த சர்வதேச மதிப்பீடு, ஒரு நாட்டில் குறிப்பான நிலைமைக்கும் பொருந்தும்.

மூ.உ.கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள் உலக மதிப்பீட்டை மறுக்கின்ற தன்மை குறுங்குழுத் தன்மை கொண்டவையாக மார்க்சியத்தை தேசிய எல்லைக்குள் சிதைத்து சீரழித்து விடுகின்றது. சர்வதேச மதிப்பீட்டைச் செய்ய எந்தக் கட்சி தவறுகின்றதோ, அதுவும் சர்வதேசிய பாட்டாளி வர்க்க மதிப்பீட்டுக்கு முரணாக, எந்தக் கட்சி அதை முன்வைக்கின்றதோ, அங்கே வர்க்கப் போராட்டத்துக்கு துரோகம் இழைக்கப்படுகின்றது. மதிப்பீட்டை மறுப்பதே அரசியல் ரீதியாக மார்க்சியத்தை கைவிடுவதாகும். சர்வதேச மதிப்பீடு அவசியம் என்று ஏற்கின்ற போது, சர்வதேச மதிப்பீடு சரியானதா அல்லது பிழையானதா என்ற வாதம் இங்கு இரண்டாவது விடயமாக உள்ளது. அதாவது சர்வதேச மதிப்பீடு அவசியம் என்று கருதுவது நிபந்தனையற்ற வகையில் சர்வதேசிய போர்த்தந்திரமாகும். இந்த முதலாவது நிலையை ஏற்றுக் கொண்டால், இரண்டாவது விவாதம் சர்வதேசிய மதிப்பீடு சரியானதா என்ற விடயம் இங்கு வருகின்றது. இங்கு மூ.உ.கோட்பாடு சர்வதேசிய கண்ணோட்டத்தில் உலகை மதிப்பிடுகின்ற போது, அதை மறுப்போர், இதற்கு மாறாக உலகை மதிப்பிடத் தவறிவிடுகின்றனர். அதாவது சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் உலக பகுப்பாயும் அரசியல் மற்றும் சர்வதேசிய போர்த் தந்திரத்தை இங்கு மறுப்பது நிகழ்கின்றது. மூ.உ.கோட்பாடு தவறு என்றால், சரியான சர்வதேசிய மதிப்பீடு என்ன என்ற கேள்விக்கு, அவர்கள் எந்த மதிப்பீட்டையும் முன்வைப்பதில்லை.

மாறாக இதை டெங்கில் இருந்து மறுக்கின்றனர். அதாவது ரொக்சியம் மார்க்சியத்தை கைவிட்டுச் செல்ல ஸ்ரானில் இருந்து தொடங்குவது போல், இவர்களும் செய்கின்றனர். ஒரு வர்க்கப் போராட்டத்தின் தொடர்ச்சியை, கோட்பாட்டு ரீதியாக ரொக்சியம் எப்படி ஸ்ராலின் பெயரால் மூடி மறைத்து மறுக்கின்றதோ, அதேபோல் உலகைப் பற்றிய சர்வதேசிய மதிப்பீட்டு போர்த் தந்திரத்தை, டெங்கு ஊடாகவே மறுக்கின்றனர். குருசேவ் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை லெனினைத் திரித்துப் பயன்படுத்திய போது, சர்வதேசிய பாட்டாளி வர்க்கம் திரிபை அம்பலம் செய்து, கோட்பாட்டு ரீதியாக சமாதான சகவாழ்வின் சரியான கோட்பாட்டை பாதுகாத்தது. இங்கு சமாதான சகவாழ்வை கோட்பாட்டில் சர்வதேசியம் மறுத்துவிடவில்லை. மாறாக சமாதான சகவாழ்வு எப்படி திரிக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது என்ற வர்க்க அம்பலப்படுதல் ஊடாகவே, குருசேவின் கோட்பாட்டு அடிப்படை தகர்க்கப்பட்டது. சமாதான சகவாழ்வு கோட்பாட்டு ரீதியாக நடைமுறை ரீதியாக, மார்க்சியத்தின் அடிப்படை நிலைப்பாடு மீது நடைமுறையில் பாதுகாக்கப்பட்டது. ஆனால் மூன்று உலகக் கோட்பாட்டை நிராகரிப்போர், மூன்று உலகக் கோட்பாட்டின் சரியான நிலையை பாதுகாக்கத் தவறி, மூ.உ.கோட்பாட்டையே நிராகரிக்கின்ற அவலம் நிகழ்கின்றது. இதை நியாயப்படுத்த, உலகை பாட்டாளி வர்க்கம் சர்வதேசிய ரீதியாக மதிப்பிடுவதே தவறு என்கின்ற கோட்பாட்டு மறுப்புக்குச் செல்கின்றனர். இது சர்வதேசிய மார்க்சிய பகுப்பாய்வை கைவிட்டுச் செல்வதாகும்.

இனி நாம் மூ.உ.கோட்பாட்டின் உள்ளடக்கத்தை பார்ப்போம்.

1.இரு மேலாதிக்க வல்லரசுகளான ருசியாவும் அமெரிக்காவும் உலக மக்களின் பொது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரிகளாகும். ருசியா உலக யுத்தத்தின் மிகப் பயங்கரமான ஊற்றுக் கண்ணாகும்
2.ஏகாதிபத்தியம், காலனிய ஆதிக்கம், மேலாதிக்கம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தில் மூன்றாவது உலக நாடுகளும் மக்களுமே பிரதான சக்திகளாகும்.
3.மேலாதிக்கத்திற்கெதிரான போராட்டத்தில் இரண்டாம் உலக நாடுகளை ஐக்கியப்படுத்த வேண்டிய சக்தியாகும்.

இவை தவறு என்று கூறும் மூ.உ.கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள், இதற்கு மாற்றாக எதையும் முன் வைப்பதில்லை. உலகில் பல ஏகாதிபத்தியங்கள் இருந்த போதும் ஏன் அமெரிக்காவையும், ருசியாவையும் பொதுமக்களின் எதிரியாகவும், அதில் ருசியாவை உலக யுத்தத்தின் ஆபத்தான பிரிவாகவும் வகைப்படுத்தினர். முதலாம் உலக யுத்தம் மற்றும் இரண்டாம் உலக யுத்தம் ஏகாதிபத்தியங்களில் சிலவற்றை கீழே தள்ளி சிலவற்றை மேலே கொண்டு வந்தது. ருசியாவில் நடந்த பாட்டாளி வர்க்க புரட்சி, இரண்டாம் உலக யுத்தத்தில் சோவியத் உலகத்தை மீட்டுப் பாதுகாத்த போக்குகளில் இருந்து, உலகில் கொந்தளித்துக் கொண்டிருந்த வர்க்கப் போராட்டத்தை தடுக்க, பலவீனமான ஏகாதிபத்தியங்கள் பலமான ஏகாதிபத்தியத்தின் தயவில் தற்பாதுகாப்பை கொண்டு உலகம் கட்டமைக்கத் தொடங்கியது. அமெரிக்காவே முதலாம், இரண்டாம் உலக யுத்தத்தில் அதிகமான சேதமின்றி தப்பி, மற்றைய நாடுகளின் யுத்த இழப்பை பயன்படுத்தி பெரும் மூலதனம் கொண்டு, இலாபத்தை பெறத் தொடங்கியது. அமெரிக்க மூலதனம் யுத்தத்தில் ஈடுபட்டு சிதைந்த ஏகாதிபத்தியங்கள் மற்றும் அதன் காலனிகள் மற்றும் செல்வாக்கு மண்டலங்களில் வெள்ளமென புகுந்ததன் மூலம், அங்கிருந்து உழைப்பின் செல்வத்தை அள்ளிச் செல்லத் தொடங்கியது. இது அமெரிக்க மூலதனத்தை பூதாகரமானதாக மாற்றியது. இது உலகை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன், அதை பாதுகாக்க இராணுவ ரீதியாக தன்னை விரிவாக்குவதில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளது. மற்றைய ஏகாதிபத்தியங்கள் யுத்த சிதைவில் இருந்து மீள, அமெரிக்க மூலதனத்தின் உதவி தேவைப்பட்டது. ஆனால் சோவியத் யுத்த இழப்பை மீறி உலகின் பலம் பொருந்திய இரண்டாவது சக்தியாக மாறியதுடன், உலகின் புரட்சிகளின் உற்ற நண்பனாகவும் மாறியது. புரட்சியும், எழுச்சியும் ஏகாதிபத்திய நாடுகளிலும், அதன் காலனிகளிலும், செல்வாக்கு மண்டலங்களிலும் வீறு கொண்டெழுந்த போது, தவிர்க்க முடியாமல் அமெரிக்காவின் எதிர்ப் புரட்சியின் தலைமைப் பாத்திரம் மேலும் உறுதியாகியது. புரட்சியும் எழுச்சியும், மூலதனத்திற்கு எதிரான சோவியத்தின் உதவியும், உலகின் பிரதான போக்காக மாறிய போது, அமெரிக்கா தலைமையில் அதை எதிர்த்து அனைத்து ஏகாதிபத்தியமும் ஒரணியில் திரண்டன. காலனிகள் மற்றும் செல்வாக்கு மண்டலங்களில் நடந்த எழுச்சிகள், மற்றும் புரட்சிகளை தடுக்க படிப்படியாக பலவீனமான ஏகாதிபத்தியம், அதை பாதுகாக்கும் பொறுப்பை அமெரிக்காவிடம் கொடுத்தது. அமெரிக்காவின் தலைமையின்றி உலகை பாதுகாக்கும் தகுதியை மற்றைய ஏகாதிபத்தியங்கள் இழந்து போனது. அமெரிக்காவே உலகின் முதலாவது எதிரியாக மாறியது. சோவியத் தலைமையிலான பாட்டாளி வர்க்க உலகப் புரட்சிக்கு எதிரான போராட்டத்தில், அமெரிக்கா அற்ற ஏகாதிபத்திய உலகம் என்பது கற்பனையாகியது.

ஸ்ராலின் மறைவுக்கு பின்பு சோவியத்தில் உள்ளிருந்தே முதலாளித்துவத்தை மீட்டு சமூக-ஏகாதிபத்தியமாக மாறிய போது, உலகம் முற்றாக மாறத் தொடங்கியது. சோவியத் உலகப் புரட்சியின் ஒரு மையமாக இருப்பது இனியும் சாத்தியமில்லை. மாறாக எதிர்புரட்சியில் ஈடுபடத் தொடங்கியது. அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியம் சோவியத் தலைமையிலான வர்க்கப் போராட்ட அச்சுறுத்தலையிட்டு அஞ்சிய வரலாறு முடிவுக்கு வந்தது. மாறாக அச்சம் மூலதனச் சந்தையை ருசிய ஏகாதிபத்தியத்திடம் இருந்து தற்காப்பதில் குவியத் தொடங்கியது. மூலதனத்துக்கு எதிரான போட்டியாளனை எதிர் கொண்ட நிலையில் இருந்து, மூலதனத் தகர்வின் அச்சம் தவிர்க்கப்பட்டது. மூலதனச் சந்தையை கைப்பற்றும் புதிய போராட்டம் புதிதாக தோன்றிய சமூக-ஏகாதிபத்தியத்திடம் இருந்து தீவிரமான நிகழ்ச்சி நிரலாகியது. முன்பு மூலதனத் தகர்வுக்கான வர்க்கப் போராட்டம் தீவிரமாக இருந்தது மாறி, மூலதனத்தை கைப்பற்றி விரிவாக்கும் போராட்டம் தீவிரமாகியது. இது ஏகாதிபத்தியமான அமெரிக்காவுக்கும், சமூக-ஏகாதிபத்தியமான ருசியாவுக்குமான தீவிர நெருக்கடியாகியது. இங்கு வர்க்கப் போராட்டம் இவை இரண்டுக்கும் இடையில் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, மூலதனத்தைக் கைப்பற்றுவது இவை இரண்டுக்குமிடையில் தீவிரமாகியது. இங்கு ருசியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக-ஏகாதிபத்தியம் பிரதான ஏகாதிபத்திய போட்டியாளனாக மாறினான். பலமான உலக சக்தியான சோவியத் புதிதாக தன்னை சமூக-ஏகாதிபத்தியமாக மாற்றிய போது, ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை அடைய ஆக்கிரமிப்பு நிபந்தனையாகியது. உலகை மீளப் பங்கிடுவது ஏகாதிபத்தியத்தின் புதிய நிகழ்ச்சியாகியது. ஏகாதிபத்தியம் பற்றிய மார்க்சிய வரையறையை இவ்விடத்தில் ஆராய்வது, விடயத்தை நுணுக்கமாக புரிந்து கொள்ள உதவும். அதைப் பார்ப்போம். ".. ஏகாதிபத்தியமானது 1.ஏகபோக முதலாளித்துவமாகும். 2.புல்லுருவித்தனமான, அல்லது அழுகத் தொடங்கிவிட்ட முதலாளித்துவமாகும். 3.அந்திமக்கால முதலாளித்துவமாகும்.... *அதன் சாரப் பொருள்..* 1.கார்ட்டல்கள், சிண்டிக்கேட்டுகள், டிரஸ்டுகள் - முதலாளிகளது இந்த ஏகபோக கூட்டுகள் தோற்றுவிக்கப்படும் அளவுக்கு பொருளுற்பத்தியின் ஒன்றுகுவிப்பு வளர்ந்து விடுகிறது. 2.பெரிய வங்கிகளின் ஏகபோகநிலை.... 3.மூலப்பொருட்களுக்கான ஆதாரங்களை முதலாளித்துவ டிரஸ்டுகளும் நிதி ஆதிக்கக் கும்பலும் கைப்பற்றிக் கொண்டுவிடுகின்றன... 4.சர்வதேசக் கார்ட்டல்கள் உலகைத் தம்மிடையே கூறுபோட்டு பாகப் பிரிவினை செய்து கொள்வது *ஆரம்பமாகிவிட்டது....* 5.உலகின் பிரதேசம் (காலனிகள்) பங்கிட்டுக் கொள்ளப்படுதல் *நிறைவுற்றுவிட்டது....* ஏகாதிபத்தியத்தை இனம் கண்டு கொள்வதற்குரிய அடையாளமாய் இருப்பது தொழில்த்துறை மூலதனத்தின் ஆதிக்கம் *அல்ல, நிதி மூலதனத்தின்* ஆதிக்கமே ஆகும்."[2] என்றார் லெனின். இரண்டாம் அகில சந்தர்ப்பவாதிகள் முதலாம் உலக யுத்தத்தை ஆதரித்து ஏகாதிபத்தியத்தை திரித்துக் காட்டிய போது, ஏகாதிபத்தியத்தை வரையறுத்த லெனின் கோட்பாட்டில் ஏகாதிபத்திய கைக்கூலித்தனத்தை இரண்டாம் அகில சமூக ஜனநாயகம் மீது அம்பலம் செய்தார்.

முதலாளித்துவ மீட்சியூடாக சமூக-ஏகாதிபத்தியமாக மாறிய ருசியாவுக்கு இந் நிபந்தனை அடிப்படையானது. இது உலகை புதிய வகையில் பங்கிடக் கோரியது. சமூக ஏகாதிபத்தியமாக மாறிய ருசியாவின் ஏகாதிபத்திய கோரிக்கையை, மற்றைய ஏகாதிபத்தியங்களிடையே தற்காப்பு நிலைக்கு இட்டுச் சென்றது. ருசியா சமூக ஏகாதிபத்திய கோரிக்கையுடன், அதை வென்று பெற தாக்குதல் நிலையில் இருந்தது. இது பற்றி மாபெரும் விவாதத்தில் சீனா சார்பாக சீன கம்யூனிஸ்ட் கட்சியும், மாவோவும் ஒன்பதாவது விமர்சனத்தை தொடர்ந்து "குருசேவ் ஏன் விழுந்தார்?" என்ற தலைப்பில் 21.11.1964 எழுதிய பகிரங்க கடிதத்தில் இருந்தும், பின்னால் 22.4.1970 இல் "லெனினியமா, சமூக ஏகாதிபத்தியமா?' என்ற விமர்சனத்தில் இருந்தும் பார்ப்போம். "... *யுத்தவெறியைத் தூண்டத் தம்மால் இயன்றதனைத்தையும் செய்ய,* தற்போதைய சர்வதேசியச் சூழ்நிலை 'புதியதொரு உலக யுத்தம் என்ற ஆபத்தைக் கர்ப்பத்தில் கொண்டிருக்கின்றது' என்று கூப்பாடு போட்டு, *'விரோதிகளை முந்திக் கொள்வது'* என்று கூறி வெளிப்படையாக பயமுறுத்துகிறார்கள். தமது *'யுத்த தந்திர ஏவுகணைக' களால் 'எந்த இடத்திலுள்ள எந்த இலக்கையும் அழித்தொழிக்க முடியும்' என்று பகட்டுகிறார்கள். அவர்கள் இராணுவச் செலவை மேலும் வெறித்தனமாக அதிகரித்து, ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கான அணிதிரட்டலையும் தயாரிப்புகளையும் தீவிரப்படுத்தி கிட்லர் மாதிரி மின்னல் வேகத் தாக்குதல் ஒன்றை தொடுக்கச் சதி செய்திருக்கிறார்கள்...* அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போல், ரசியத் திரிபுவாதச் *சமூக - ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருக்கும் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் உலக யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கத் தயார் செய்து கொண்டிருக்கும் இன்னொரு தலையாய குற்றவாளியாக மாறியுள்ளனர்...*

*...ரசியத் திரிபுவாதம் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் அதன் விஸ்தரிப்பு, சூறையாடல் ஆகியவற்றின் மூலம், இந்தப் பிரதேசங்களின் மக்களுக்கு எதிராகத் தன்னைத் தானே நிறுத்தி வைத்திருக்கிறது....* உலக ஏகாதிபத்திய அணிகளில் ரசியத் திரிபுவாதச் *சமூக ஏகாதிபத்தியம் சேர்ந்திருப்பதால், ஏகாதிபத்திய நாடுகள் மத்தியிலுள்ள முரண்பாடுகள் மேலும் கூர்மையாயிருக்கின்றன. தத்தம் செல்வாக்குப் பிராந்தியங்களை விஸ்தரிக்கும் முயற்சியில் சமூக ஏகாதிபத்தியமும், ஏகாதிபத்தியமும் தீவிரமான போட்டியில் ஈடுபடுகின்றன."* இதைத் தான் மூன்று உலக கோட்பாட்டாளர்கள் மறுக்கின்றனர். ஆனால் சர்வதேச விவாதம் முழுக்க இதை தெளிவுபட தொடர்ச்சியாக விரிவாக எடுத்துரைக்கின்றது.

ரசிய ஏகாதிபத்தியம் யுத்த வெறியுடன் புதிதாக அரங்கில் நுழைந்ததையும், புதிய உலக நெருக்கடியை வித்திட்டதையும் மறுப்பது, உள்ளடக்கத்தில் சமூக-ஏகாதிபத்தியமாக ரசியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாறியதையும், அன்றைய சர்வதேச விவாதத்தையும் மறுப்பதில் போய்விடுகின்றது. பாட்டாளி வர்க்க அரசு சமூக ஏகாதிபத்தியமாக மாறுகின்ற போது என்ன நடக்கும். ஏகாதிபத்தியத்துடன், ஏகாதிபத்திய நலனை அடையும் போட்டியில் பெரும் பலத்துடன் புதிதாக குதிக்கின்றது. உலகம் ஏகாதிபத்தியத்துக்கு இடையில் பங்கிடப்பட்ட நிலையில் இருக்கின்ற போது, புதிதாக ஏகாதிபத்திய கொள்கையுடன் போட்டியில் ஈடுபடுகின்ற போது, பங்கிடப்பட்ட சந்தையை கைப்பற்றும் யுத்தவெறியை பகிரங்கமாகவே கோருவது ஏகாதிபத்திய தன்மையாகும். சந்தைகள் ஒரு சமநிலையில் முரண்பாட்டுக்கிடையில் ஏகாதிபத்தியத்துக்கிடையில் பங்கிடப்பட்ட அமைதியை கெடுக்கும், புதிய நாடாக, ரசிய சமூக-ஏகாதிபத்தியம் மாறியது. இது சந்தைக்காக ஏகாதிபத்திய யுத்த வெறியை தூண்டியது. அமெரிக்காவும் மற்றைய ஏகாதிபத்தியங்களும், பிடித்து வைத்திருந்த சந்தைகளை தற்பாதுகாக்கும் தற்காப்பில் ஈடுபட, சமூக ஏகாதிபத்தியமும் அதை கைப்பற்றும் போட்டியில் ஈடுபட்டது. இந்த சர்வதேச சந்தை போட்டியில் ரசியா ஈடுபட்ட நிகழ்வு ஆக்கிரமிப்பு வழியில் தான் என்பதை சர்வதேசியம் தெளிவுபடவே வழிகாட்டியது. இந்தப் போட்டியில் மற்றைய ஏகாதிபத்தியங்கள் சந்தைகளை பாதுகாப்பதில் தற்காப்பு நிலை எடுத்தன.

இதற்கு தனது முந்திய புரட்சிகரமான அரசியல் பாத்திரத்தை, தனது ஏகாதிபத்திய நோக்கத்துக்காக கேடுகெட்ட வழியில் மக்களை ஏமாற்றி பயன்படுத்தியது. உலகின் வர்க்கப் புரட்சிக்கு உதவிய பழைய சர்வதேசிய நிலையை கேவலமாக பயன்படுத்தியது. தனது செல்வாக்கு மண்டலத்தை விரிவாக்கவும், காலனிகளை பெறவும் தனது தொங்கு சதையாக முன்னைய பாட்டாளி வர்க்க கட்சிகளை மாற்றி, அவற்றைக் கொண்டு ஏகாதிபத்திய போட்டியில் குதித்தது. மக்களின் புரட்சிகர அரசியலை சிதைத்து, தனது ஏகாதிபத்திய மூலதன நோக்கத்தை அடைய முறைகேடாக சதிகளையும், திடிர் எதிர்ப் புரட்சிகளையும் நடத்த புரட்சிகர முகமூடியைப் பயன்படுத்தியது. இது மற்றைய ஏகாதிபத்தியத்தின் முன் புதிய நெருக்கடியாகியது. முன்பு ஏகாதிபத்தியங்கள் மக்களின் மூலதனத்துக்கு எதிரான வர்க்கப் புரட்சியை எதிர் கொண்டு இருந்த தன்மை மாறி, சதிக் குழுக்கள், எதிர் கட்சிகள் ஊடாக மூலதனப் போட்டியை சமூக-ஏகாதிபத்தியம் சார்ந்து சந்தித்தது. மறுபுறம் சீனா தலைமையிலான சர்வதேச பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பாதை ஒரு புறமாக இருக்க, புதிதாக ஏகாதிபத்திய போட்டியாளனாக ருசியாவின் சதிகள் மற்றும் ஆட்சி கவிழ்ப்புகள் மூலம் மூலதனச் சந்தை நெருக்கடிக்குள்ளானது. இந்த புதிய போக்கால் மூலதனச் சந்தையை தற்காப்பதில், அதிக நெருக்கடியை அமெரிக்கா சார்ந்து நின்ற ஏகாதிபத்தியங்கள் சந்தித்தது. இங்கு இதன் புதிய போட்டியாளனாக ருசியா இருந்தது. உலக யுத்தம் மூலதனச் சந்தையை கைப்பற்றுவதில் இருந்து ஆரம்பிப்பதால், தவிர்க்க முடியாமல் அமெரிக்கா தற்காப்பிலும், ருசியா தாக்குதல் என்ற நிலையிலும் உலகை இட்டுச் சென்றது. இதற்கிடையில் இழுபறியான தொடர்ச்சியான கெடுபிடி யுத்தம் பொதுப் போக்காகியது. மறுதளத்தில் ருசியத் திரிபுவாதம் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான நிலைக்கு அபாயகரமான சேதத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் பாட்டாளி வர்க்கத்தின் நேரடி எதிரியாக ருசிய சமூக-ஏகாதிபத்தியம் இருப்பதும் யதார்த்தமாக இருந்தது.

ருசியா பிரதான எதிரியாகவும், உலக யுத்தத்தின் பிரதான ஊற்றுக் கண்ணாகவும் இருப்பதை மூ.உ.கோட்பாட்டாளர்கள் மறுப்பது, அடிப்படையில் ருசியா ஏகாதிபத்தியமாக மாறியதை மறுப்பதாகும். அதாவது சீனாவின் தலைமையில் நடந்த சர்வதேச பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை கைவிடுவதாகும். இது ருசியா திரிபுவாத நிலைக்கு சரிவதாகும். புதிதாக ஏகாதிபத்திய அரங்கில் நுழைந்த அரசு பற்றி, அதுவும் அமெரிக்காவின் பிரதான போட்டியாளனின் நோக்கத்தை மூடிமறைப்பதாகும். இது வர்க்க அரசியலை சர்வதேசிய விவாதம் மீது ஊன்றி நின்று முன்வைக்க தவறுவதாகும். டெங் சீனாவை திரிபுவாதத்தின் ஊடாக முதலாளித்துவத்தை மீட்ட போது, மூ.உ.கோட்பாட்டை திரித்து முறைகேடாக வியாக்கியானப்படுத்திய போது, அதை அம்பலம் செய்யத் தவறி, அதை மறுப்பதில் சறுக்கிவிடுவது நிகழ்கின்றது. குருசேவ் சமாதான சகவாழ்வை இது போன்று திரித்த போது, பாட்டாளி வர்க்கம் அதை அம்பலம் செய்து, சமாதான சகவாழ்வின் சர்வதேசிய நிலையை உயர்த்திப் பிடித்தது. சோவியத்தை பிரதான எதிரியாக கொண்டு அமெரிக்காவுடன் டெங் குலாவ, மூ.உ.கோட்பாட்டை திரித்த வரலாற்றை அம்பலம் செய்வதற்கு பதில், ருசியாவை பிரதான எதிரியாக காட்டியது தவறு, இது டெங்கின் கண்டுபிடிப்பு என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்குமளவுக்கு மூ.உ.கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள் சரிந்து சென்றனர். ஆனால் சோவியத் பிரதான ஆபத்தான எதிரி என்பதை அதன் ஏகாதிபத்திய தன்மையில் இருந்தே, சீனக் கம்யூனிசக் கட்சியும், மாவோவும் மாபெரும் விவாதத்தில் அம்பலம் செய்த சர்வதேசிய விவாதத்தை ஊன்றி நடத்த வேண்டிய சர்வதேசிய கடமையை மறுத்து, டெங்கில் இருந்து புரிந்து விளக்கிய தவறை மூ.உ.கோட்பாட்டு எதிர்ப்பாளர்கள் செய்தனர். அதையே தொடருகின்றனர்.

இந்த இரு பிரதான போட்டியாளருக்கிடையில் அமெரிக்கா சார்ந்து நின்ற மற்றைய ஏகாதிபத்தியங்களின் நலன்கள் மேலும் நெருக்கடிக்குள்ளாயின. ஒரு புறம் புதிதாக அரங்கில் நுழைந்த ருசிய ஏகாதிபத்தியத்திடம் தமது நலன்களை இழப்பதும், அதே நேரம் அமெரிக்காவின் தற்காப்பில் ஏற்படும் இழப்புகளை மற்றைய ஏகாதிபத்தியம் மீது திணிப்பதும், என்ற நெருக்கடிகளில் இருந்து மீள, பிரதான இரு ஏகாதிபத்திய போட்டியில் இருந்து மீள்வது அவசியமாகவும் நிபந்தனையாகவும் இருந்தது. அதே நேரம் ஏகாதிபத்தியமல்லாத இரண்டாம் உலக நாடுகளின் நலன்கள் ஏகாதிபத்திய நலன்களின் இடையே சிக்கி நெருக்கடிக்குள்ளாகியது. சொந்த பொருளாதார நலன்கள் ஏகாதிபத்திய நெருக்கடிக்குள் சிக்கி நெருக்கடிக்குள்ளாகின்ற நிலையில், அந் நாடுகள் இதிலிருந்து மீள்வது அவசியமாக இருந்தது. அதே நேரம் ஏகாதிபத்திய நெருக்கடி மேலும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்த, வர்க்கப் போராட்டம் உக்கிரமடைவது நிகழ்ச்சி நிரலாக இருந்தது. வர்க்கப் போராட்டத்தின் கூர்மையில் இருந்து தப்பித்துக் கொள்ள, இரண்டாம் உலக நாடுகள் மக்களின் சில கோரிக்கையை ஏற்பதும், சர்வதேசிய பாட்டாளி வாக்கத்தை பயன்படுத்துவதும் என்ற நிலைமையை கையாண்டது. அதாவது தனது வர்க்க நலனுக்கு பயன்படுத்த முனைவதும் இயல்பானது. இந்த நிலையில் ஏகாதிபத்திய எதிர்ப்பை வரையறுக்கப்பட்ட சொந்த வர்க்க பொருளாதார நலன்களின் எல்லையில் வெளிப்படுத்துவது தவிர்க்க முடியாததாகியது. இந்த நிலையில் இரண்டாம் உலக நாடுகளை ஏகாதிபத்திய எதிர்ப்பில் தள்ளிச் செல்லும் பொறுப்பு சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் தீவிர கடமையாகியது. பாட்டாளி வர்க்கம் தனது சொந்த வர்க்க ஆட்சியை நிறுவ, பிரதான எதிரியை தனிமைப்படுத்த, நடுநிலை மற்றும் ஊசலாடக் கூடிய அனைத்து சக்தியையும் எதிரி நிலைக்கு தள்ளாது கையாள்வது, சர்வதேசிய அரசியல் மார்க்கமாகும். இது ஒவ்வொரு சொந்த நாட்டிலும் நடக்கும் குறிப்பான வர்க்கப் போராட்டத்தை கைவிட்டு அல்ல. உலகில் மிகவும் கொந்தளிப்பான, பல்வேறு திடீர் மாற்றத்தின் ஊடாக புரட்சியை வென்று எடுத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும், மாவோவும் உலகை வகைப்படுத்துவதில் இருந்து, ஐக்கிய முன்னணி கட்டுவது வரை பல அனுபவத்தை எமக்கு விட்டுச் சென்றுள்ளனர். அதில் ஒன்றை பாாப்போம்.

1959ல் பீங்கிங்கில் அச்சாகி வெளியாகிய நவ சீனப் புரட்சியின் வரலாற்று நூலில் 1940 களின் நிலைமையை மாவோவின் தலைமையிலான சீனக் கட்சி, சர்வதேசிய நிலையில் சொந்தப் புரட்சியைக் கையாளும் போது, உலகை மூன்றாக வகுத்தனர். "சர்வதேச ரீதியாக மூன்று வகைப்பட்ட சக்திகள் இருந்தன: ஜப்பான், அமெரிக்காவும் பிரிட்டனும், சோவியத்யூனியன். கட்சி இத்தகைய சக்திகளுக்கிடையே கண்டிப்பான வேறுபாட்டினை செய்தது. அதில் சோவியத் யூனியனுக்கும் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய இப்படிப்பட்ட முதலாளித்துவ அரசுகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்த்தது. சீனாவை படை எடுத்துக் கொண்டிருந்த ஜப்பானிய ஏகாதிபத்தியத்திற்கும் மற்றும் சீனாவின் மீது படை எடுக்காமல் இருந்த இதர ஏகாதிபத்திய அரசுகளுக்கும் இடையே வேறுபடுத்திப் பார்த்தது. ஜப்பானோடு ஒரு கூட்டணியை அமைத்திருந்த ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் ஒரு புறத்திலும் மறுபுறத்தில் ஜப்பானை எதிர்த்து நின்ற பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிற்கு இடையே வேறுபடுத்தி பார்த்தது. தூர கிழக்கிற்கு மியூனிச் கொள்கையை விட்டுவிட்ட இன்றைய பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றிக்கும் இடையே அது வேறுபடுத்தி பார்த்தது; பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் மக்களுக்கும் இத்தகைய நாடுகளின் ஆளும் வர்க்கங்களுக்கும் இடையேயும் வேறுபடுத்தி பார்த்தது. இத்தகைய வேறுபாடுகளின் மீது கட்சி அதனுடைய அயல் நாட்டுக் கொள்கையை அடிப்படையாக கொண்டிருந்தது; எதிர்ப்பு யுத்தத்தை மேலும் தொடர்ந்து நடத்துவதற்கு சர்வதேச துறையில் சகல ஜப்பானிய எதிர்ப்பு சக்திகளையும் அணிதிரட்டும் பொருட்டு கட்சி அதனுடைய அயல் நாட்டுக் கொள்கையை இத்தகைய வேறுபாடுகளின் மீது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையாகக் கொண்டிருந்தது.'' (பக்கம் 400-401) இது சோவியத்யூனியன் அமெரிக்கா பிரிட்டனுடன் இரண்டாம் உலகயுத்தத்தில் பாசிசத்துக்கு எதிரான ஐக்கிய முன்னணி உருவாக முன்பே, மாவோ கடைபிடித்து வரையறுத்த சர்வதேச மூன்று வகைப்படுத்தப்பட்ட புரட்சிகர சர்வதேசிய பார்வையாகும். இது யாருடைய கற்பனையும் அல்ல. சீனக் கட்சி அன்று உலகை மதிப்பிட்ட அதே வடிவில் தான் சர்வதேசிய கட்சிகளும் வந்தடைந்தன. யப்பான், ஜேர்மனி, இத்தாலி உலகை மீளப் பங்கிடக் கோரி தாக்குதல் நிலையை எடுத்த போது, மற்றைய ஏகாதிபத்தியங்கள் தற்காப்பு நிலையை பின்பற்றியது. இந்நாடுகள் உலகின் அனைத்து மக்களினதும் எதிரியாகவும், பல நாடுகளின் சுதந்திரத்தை அச்சுறுத்துவதாகவும் இருந்தது. இக்காலத்தில் பாட்டாளி வர்க்கம் இவர்களை தனிமைப்படுத்தும் வகையில், இவர்களுக்கு எதிரான அனைத்து சக்திகளையும் அனிதிரட்டுவது அவசியமாக இருந்தது. இதை மறுப்பது மார்க்சியத்தில் இருந்து விலகிச் செல்வதை குறித்து நின்றது. சீனா சர்வதேசிய கண்ணோட்டத்தில், சோவியத் பாசிசத்துக்கு எதிரான ஐக்கிய முன்னணியை கட்ட முன்பே, இக்கொள்கையின் அடிப்படையில், உள்நாட்டு யுத்தத்தை வெற்றிகரமாக எதிரியை தனிமைப்படுத்தி நடத்தியது. இங்கு இந்த பொதுவான சர்வதேசிய உலகப் பார்வையை ஏற்றுக் கொள்ளும் போது, குறிப்பான நாடுகளில் நிலவும் முரண்பாடுகளை இதற்கு உட்படுத்தியே வர்க்கப் போராட்டத்தை நடத்துவது சர்வதேசிய பாட்டாளி வர்க்கத்தின் கடமையாகும். இதன் போது உள்நாட்டு எதிரியை நிர்பந்தித்து, சர்வதேச மக்களின் பொது எதிரியை எதிர்க்கக் கோரும் வகையில், வர்க்கப் போராட்டத்தின் திசை வழியில் வர்க்கப் போராட்டத்தை நகர்த்த வேண்டும். சீனக் கட்சியை அழித்தொழிக்கும் நோக்கில் பல லட்சம் கம்யூனிஸ்டுகளை கொன்று பல படையெடுப்புகளை தொடர்ச்சியாக நடத்திய சியாங்கேசேக்குடன் கூட, ஐக்கிய முன்னணி அமைப்பதில் சர்வதேசிய மற்றும் உள்நாட்டு நிலைமைகளை சரியாக கையாண்டதன் மூலம் பிரதான எதிரியை தனிமைப்படுத்தி அழிக்க முடிந்தது!. உள்நாட்டின் பிரதான எதிரி சர்வதேச மக்களின் பிரதான எதிரியின் கைப்பொம்மையாகவிடாது தடுத்து, உலக மக்களின் பிரதான எதிரிக்கு எதிராக போராட நிர்பந்தித்த சர்வதேசிய வழிகாட்டுதல், மூன்று உலகக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு நடத்தப்பட்டதை சீன வரலாறு தெளிவுபட விளக்குகின்றது.

இரண்டாம் உலக யுத்த கால கட்டத்துக்கு முந்திய கால கட்டத்தில், தாக்குதல் எதிரியாக புதிதாக நுழைந்த ஏகாதிபத்தியத்தை தனிமைப்படுத்த, உலகளாவிய ஒருமைப்பாடு கொண்ட சர்வதேசிய மூன்று உலக வகைப்படுத்தல் எவ்வளவு சரியானதோ, அதேயளவுக்கு சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் மூலதனத்தை கைப்பற்றும் உலக யுத்தத்தின் ஊற்றாக மாறிய யதார்த்தத்தை வகைப்படுத்தியது வரை மூ.உ.கோட்பாடு சரியாகவே இருந்தது. வியட்னாம் போராட்டத்தின் வர்க்கத் தன்மையை சிதைத்தது போராட்டத்தின் வெற்றியை தனது ஏகாதிபத்திய நோக்கத்துக்கு சீரழித்ததும், வர்க்கப் புரட்சியை நடத்திய கம்பூட்சியாவை ஆக்கிரமித்தது, கம்யூனிச நாடான சீனா மீதான ஆக்கிரமிப்புடன் கூடிய மிரட்டல் தாக்குதல், இந்தியாவை பிராந்திய வல்லரசாக கொண்டு தனது செல்வாக்கு மண்டலங்களை விரிவாக்கியது என பல உலக நிகழ்வுகள் எல்லாம், புதிய ஏகாதிபத்தியத்தின் முன்னேறிய தாக்குதலையும், ஆக்கிரமிப்புத் தன்மையும் காட்டியது. ருசியாவின் முன்னேறிய தாக்குதலையும், அமெரிக்கா தற்காப்பில் ஈடுபடுமளவுக்கு நிலைமை காணப்பட்டது. ''லெனினியமா, சமூக-ஏகாதிபத்தியமா'' என்ற சீனக் கட்டுரை 1970 இல் லெனினின் 100வது பிறந்த தின நினைவாக எழுதப்பட்டது. அதில் ''ரசியத் திரிபுவாதம் ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் அதன் விஸ்தரிப்பு, சூறையாடல் ஆகியவற்றின் மூலம், இந்தப் பிரதேசங்களின் மக்களுக்கு எதிராகத் தன்னைத் தானே நிறுத்தி வைத்திருக்கிறது. அது தன் சக்திக்கு மீறித் தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிக் கொண்டு பெருஞ்சுமையுடையதால் உடல் வீக்க நோய்வாய்ப்பட்ட ஒரு மனிதனைப் போல இருக்கின்றது. 'எங்களை விட மிக மோசமாக இல்லாவிட்டாலும் ரசியர்களும் எங்களைப் போல் பெரும் பிழை செய்கிறார்கள் என நாங்கள் கண்டுபிடித்துள்ளோம்.' என்று அமெரிக்க ஏகாதிபத்தியப் பத்திரிகை கூட கூறுகின்றது.'' என்று சீனக் கம்யூனிசக் கட்சி, ரசிய ஆக்கிரமிப்பின் தாக்குதல் தன்மையை அம்பலம் செய்கின்றது. மேலும் இதே கட்டுரையில் ''.. ஐய்ரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்கா ஆகியவற்றைத் தழுவிய பெரிய ரசியத் திரிபுவாத பேரரசு ஒன்றை ஸ்தாபிக்கும் முயற்சியில் அது தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு, ஆபிரிக்கா ஆகியவற்றுக்கும் லத்தீன அமெரிக்காவுக்கும் கூட அதன் கரங்களை நீட்டி, மத்திய தரைக்கடல்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்து பெருங்கடல், பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், ஆகியவற்றுக்குள் அதன் கப்பல் படைகளை அனுப்பியிருக்கின்றது." அந்தளவுக்கு ஏகாதிபத்தியத் தன்மை தாக்குதல் நிலைக்குள் வளர்ச்சி பெற்றது. இந்த இராணுவ வெறி பற்றி லெனின் " 'நவீன இராணுவவெறி முதலாளித்துவத்தின் விளைவாகும்' என்றும், இன்றைய கால யுத்தம் 'ஏகாதிபத்தியத்தின் இயல்பிலிருந்தே தோன்றுகின்றது' " என்றும் கூறினார். மேலும் அதே நூலில் "...ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு இயல்பையும், சகசவாதத்தையும் முழுமையாக அம்பலப்படுத்தி இருக்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் போல், ரசியத் திரிபுவாதச் சமூக-ஏகாதிபத்தியத்தின் ஆட்சியிலிருக்கும் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் உலக யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கத் தயார் செய்து கொண்டிருக்கும் இன்னொரு தலையாய குற்றவாளியாக மாறியுள்ளன." என்ற சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆய்வுரைகளை மறுப்பதன் மூலம், வர்க்கக் கண்ணோட்டத்தை அரசியலில் இருந்து ஒழிப்பதாகும். ரசிய திரிபுவாதக் கட்சி பாட்டாளி வர்க்கப் போராட்டத்தை தனது திரிவுகள் கொண்டு சிதைத்து, மக்களுக்கு எதிராக திட்ட வட்டமாக செயற்பட்டது. நயவஞ்சகம், மூடிமறைப்பு, சதிகள் மூலம் மக்களின் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தை ஒடுக்கியது. இந்தப் போக்கிலும் சர்வதேச ரீதியாக மக்களின் பிரதான எதிரியாக திரிபுவாதமும், ரசிய ஏகாதிபத்தியமும் மாறியிருந்தது எப்படி தவறாகும். அதே நேரம் ரசிய ஏகாதிபத்தியம் தனது விஸ்தரிப்பு வாத ஆக்கிரமிப்பு ஏகாதிபத்திய கொள்கையால், இராணுவத்தை பூதாகரமாக கட்டியதுடன் சர்வதேச ரீதியாக உலக யுத்தத்துக்கு அறைகூவலிட்டபடி, ஒவ்வொரு நாட்டிலும் அரசுகளை கைப்பற்ற சதி மற்றும் ஆட்சிக் கவிழ்ப்புகள் முதல் இராணுவத்தை அனுப்புவது என்று உலகின் மூலை முடுக்கெல்லாம் தனது வலையை விரித்தது. இந்த நிலையில் சகல நாடுகளும், ரசிய ஏகாதிபத்தியத்தை கண்டு அஞ்சுமளவுக்கு நிலைமை மாறி இருந்தது. மக்களும் மறுபுறம் நாடுகளும் ரசிய ஆக்கிரமிப்பு மற்றும் அதன் சதி மற்றும் புரட்சிக்கு எதிரான திடீர் திரிபுவாதம் கவிழ்ப்புகளும் என்று, உலகின் அனைத்து பிரிவுகளினதும் முதன்மையான எதிரியாக சமூக-ஏகாதிபத்தியம் மாறியது. இதை மறுப்பது அன்றைய சர்வதேசிய மதிப்பீட்டைக் காண மறுப்பதாகும். இது மார்க்சியத்தை, சர்வதேசியத்தில் இல்லாது ஒழிப்பதாகும்.

இந்த சர்வதேசிய மதிப்பீட்டை டெங் தனது முதலாளித்துவ நோக்கத்துக்கு திரித்து பயன் படுத்தியது என்பது, இதை மறுப்பதற்கான ஆதாரமல்ல. இது மார்க்சியத்தின் விஞ்ஞான பூர்வமான பகுத்தாயும் முறையையே மறுப்பதாகும். அனைத்து திரிபுவாதமும் தனது முதல் முயற்சியாக மார்க்சியத்தை திரித்து முன் வைப்பதன் ஊடாகவே அரங்கேறியது வரலாறாகும். டெங் கும்பல் சீனாவை முதலாளித்துவ மீட்சிக்கு, சர்வதேசிய மூ.உ.கோட்பாட்டை திரித்து முறை கேடாக பயன்படுத்தியது என்பது, வரலாற்றில் எல்லாக் காலத்திலும் நிகழ்ந்தேயுள்ளது. இது முதல் முறையுமல்ல, இதுவே கடைசியாகவும் இருப்பதில்லை. மார்க்சியம் திரிபின் மேல் தனது சரியான நிலையை முன்வைத்து போராடியதன் மூலம், தனது சரியான விஞ்ஞான பூர்வமான நிலையை பாதுகாத்தே திரிபுவாதத்தை முறியடித்தது, முறியடிக்கின்றது. ஆனால் மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டோரின் ஒரு பகுதி இதை செய்யத் தவறி, மூ.உ.கோட்பாட்டை நிராகரிக்கும் அளவுக்கு டெங்கின் மறு கோடிக்கு சென்று விடுவதன் மூலம், படிப்படியாக மார்க்சியத்தில் இருந்து விலகிச் செல்வது நிகழ்ந்து விடுகின்றது.

அடுத்து மாவோ இதை எப்போது முன்வைத்தார் என்ற வாதங்கள் அர்த்தமற்றவை. மூன்று உலக வகைப்பாடு மற்றும் ஐக்கிய முன்னணி பற்றி, மாவோவைப் போல் அவ்வளவு நேர்த்தியாக, ஆனால் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட திருப்பங்களில் கூட பிரதான எதிரிகள் மாறிய போது, முன்னைய எதிரியுடன் ஐக்கிய முன்னணி அமைத்து புதிய எதிரியை அழித்தொழிக்க தயங்கவில்லை. உலகை வகைப்படுத்தவும், யுத்த தந்திரத்தை முன்வைத்த பல சந்தர்ப்பங்களில், சர்வதேசியத்தை ஊன்றி நின்று பாதுகாத்ததுடன் அதை நடைமுறைப்படுத்தியதை சீன வரலாறு வெளிப்படுத்தியுள்ளது. அமெரிக்க அதிபர் சீனா வந்தது, இலங்கையில் ஜே.வி.பியை ஒடுக்க உதவியவை எல்லாம், சர்வதேசிய மதிப்பீட்டில் சர்வதேசிய பாட்டாளி வர்க்க புரட்சிக்கு சார்பாக சோவியத்தை தனிமைப்படுத்துவதில் இருந்தே இவை வெளிப்பட்டது. லெனின் சமரசங்கள் செய்வது பற்றி கூறும் போது "பாட்டாளி வர்க்கப் புரட்சியின் ஆதரவாளர் முதலாளிகளுடன் சமரசங்கள் அல்லது ஒப்பந்தங்கள் செய்து கொள்ளலாம் தான். எல்லாம் எவ்வகையான ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த நிலைமைகளில் செய்து கொள்ளப்படுகிறது என்பதையே பொறுத்திருக்கிறது. பாட்டாளி வர்க்கப் புரட்சியன் கண்ணோட்டத்தில் நியாயமான ஒப்பந்தத்துக்கும் (இதே கண்ணோட்டத்தில்) துரோகமான, வஞ்சகமான ஒப்பந்தத்துக்கும் இடையிலான வேறுபாட்டை இதில், இதில் மட்டுமே தான் காண முடியும், காணவும் வேண்டும்." என்று லெனினின் "போர்த்தந்திரங்கள் பற்றிய கடிதங்கள்" என்ற நூலில் பகுத்தாய்கின்றார். சமரசங்களுக்கே இந்த வடிவில் கையாளும் போது, ஐக்கிய முன்னணி போன்றவற்றில் மேலும் உயர்ந்த நிலையை சர்வதேசியம் கொண்டிருப்பது இயற்கையாகும். டெங் போன்ற முதலாளித்துவ மீட்பாளர்கள் தமது மீட்பு நோக்கத்துக்கு ஐக்கியத்தை கேடாக திரித்து பயன்படுத்தியதை எப்படி அணுக வேண்டும் என்பதற்கு லெனின் பகுத்தாய்வே போதுமானது. அதை விட்டுவிட்டு மூ.உ.கோட்பாடு வெளி வந்த காலத்தை வைத்து அதை நிராகரிப்பது சிறுப்பிள்ளைத் தனமாகும். நிறைய படைப்புகள் காலம் தாழ்த்தியே வெளி வந்தது வரலாறுமாகும்.. மாவோ இறக்க முன் எழுதியதாகவும் கூட இருக்கலாமல்லவா! பிரச்சனை சர்வதேசிய பகுத்தாய்வை சீனா முன் கூட்டியே பயன்படுத்தியதா? இல்லையா என்பதே. இல்லை என்றால் சீனாவின் சர்வதேசிய மதிப்பீடு என்னவாக இருந்தது. என்ன கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு உலகை மதிப்பிட்டது. இது நாட்டுக்கு நாடு உள்ள சர்வதேசிய பாட்டாளி வர்க்க நிலைக்கு முரணாக இருக்க முடியுமா? சர்வதேசிய உலகப் பார்வையைத் தாண்டி உலகின் எந்த விடயத்தையும் தனித்துவமாக கணிப்பிட முடியுமா? முடியும் என்பது, மார்க்சியம் அல்ல. ஈராக் பிரச்சனை, யூக்கோசிலோவியா பிரச்சனை என்று உலகில் எழும் அனைத்து பிரச்சனையிலும் சர்வதேசிய மதிப்பீடு மாற்றப்பட முடியாது. மாறுபட்ட பார்வை மார்க்சியத்தை கைவிட்டு விலகிச் செல்வதாகும். இந்தியாவில் மக்கள் யுத்த குழுவும், இலங்கையில் மார்க்சியவாதிகளும் புலிகளைப் பற்றிய மதிப்பீட்டில் மாறுபாடு இருக்க முடியாது. மக்கள் யுத்த குழு புலிகளை நிபந்தனை இன்றி ஆதரிப்பது, இலங்கையில் மார்க்சிய நிலைப்பாட்டுக்கு எதிராக இருப்பதில், மக்கள் யுத்த குழு இப்பிரச்சனையில் மார்க்சியத்தை கைவிட்டு விடுவதைக் காட்டுகின்றது. சர்வதேச ரீதியாக மார்க்சியவாதிகள் புலிகள் பற்றிய மதிப்பீட்டில் ஒரே மாதிரி தான் இருக்க முடியும். ஆனால் இதை மறுப்பதும், மூ.உ.கோட்பாட்டை மறுப்பதும் அதாவது பாட்டாளி வர்க்கத்தின் போர்த்தந்திரமாக சர்வதேசிய மதிப்பீடு இருக்க முடியாது என்று மார்க்சியத்தை கைவிட்டு ஒடுவது நிகழ்கின்றது. உலகின் எந்த மூலையில் எந்தப் பிரச்சனை நடந்தாலும், அது பற்றிய மார்க்சிய மதிப்பீடு ஒன்றாக இருப்பது வர்க்க பகுப்பாய்வாகும். இதை மறுக்க முடியுமா!

ஒரு கோட்பாட்டின் உள்ளடக்கத்தை திரிக்கவும், அதை ஆதாரமாக கொண்டு பிற்போகான வகையில் பயன்படுத்துவது உலக வரலாறு முழுக்கவும் நடந்துள்ளது. அதை அம்பலம் செய்வதும், திரிபுக்கு பதில் அதன் சரியான தன்மையை மீள நிறுவுவதும் வரலாற்றில் நிகழ்ந்தேயுள்ளது. இந்த வகையில் மூன்று உலக கோட்பாட்டை திரிபில் இருந்து பாதுகாக்கவும், எதிர்காலத்தில் சர்வதேசிய மதிப்பீட்டை உலகம் தழுவி உலக பாட்டாளி வர்க்கம் வந்தடையும் புரட்சிகர மார்க்கத்தை ஏற்படுத்தவும், இந்த சிறு விமர்சனக் கட்டுரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உங்கள் முன்னுள்ளது.

1.போர்த்தந்திரம பற்றிய கடிதங்கள் - லெனின்

200க்கு மேற்பட்ட கட்டுரைகள் உள்ளடங்கிய 3000 பக்கங்களை கொண்ட சர்வதேசிய தோழமையைப் பலப்படுத்தும் இணையத் தொடர்பு முகவரி :
http://tamil-caste-race-class-nation-feminism-literature-culture.org/



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மேற்கத்திய கல்வியும், மாணவ மாணவிகளின் பண்பாடுகளும் எம்நாட்டுக்கு மாற்றாக முன்னிறுத்த முடியுமா?

வேலணை மத்திய மகாவித்தியாலய நிகழ்ச்சியில் பிரதம விருந்தினர் உரை ஒன்றை செய்த வாசுதேவன், மேற்கின் மாணவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தையும் அதன் பண்பாட்டையும், இலங்கைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று ஆலோசனை கூறிய, உலகமயமாதலின் பண்பாட்டு அடிப்படைகளை காவிச் செல்ல தயாராக இருப்பதை பறைசாற்றினர். மூன்றாம் உலக நாடுகளின் கல்வி சமூக கண்ணோட்டமற்ற மூடத்தனத்தையும், நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்திலும், ஆசிரியர் மாணவர் உறவில் உள்ள அதிகார வடிவங்கள் விமர்சனத்துக்குரியவை தான். இந்தக் கல்வியை உருவாக்கிய காலனியாதிக்கவாதிகளின் பொருளாதார நோக்கத்தை ஈடு செய்வதில், இதன் அடிப்படை நோக்கமும் உள்ளடக்கமும் இதன் சாராம்சமாக இன்று வரை திகழ்கின்றது. ஆனால் இதை அரசியலில் இருந்து பிரித்து எடுத்து மேம்போக்காக எதிர்த்து மேற்கின் கல்வி மற்றும் பண்பாட்டினை முன்னிறுத்தி, அதை எமது கல்விக்கு மாற்றாக முன்வைத்து தீர்க்கக் கோருவது தான் இங்கு விசித்திரமானது. உலகமயமாதலை தூக்கி முன்னிறுத்தி காவிச் செல்ல நேரடி ஆக்கிரமிப்புகள் தேவையில்லை, புத்திஜீவித்தனத்துடன் கூடிய மேற்கு பொருளாதார பலத்தினை ஆதாரமாக கொண்ட அறிவுத்துறையினர் மட்டும் போதுமானதாகும்.

அவர் மேற்கின் ஆக்கிரமிப்பு கல்வியை காவிச் செல்ல, அங்கு வெளியிட்ட மலர் கட்டுரையிலும், பேச்சிலும் பிரதிபலிக்க தவறவில்லை. அதை அறிவின் மேன்மையின் மயக்கத்தில் திணிக்க முயல்வதைப் பார்ப்போம். "கருப்பையிலிருந்தே, புலன்களின் உணர்திறன் செயற்பட ஆரம்பித்தவுடனேயே மனித உயிரின் அறிவும், ஆர்வமும் ஆரம்பித்துவிடுகிறது" என்பது எமது நாட்டின் கல்வியின் மூடத்தனம் போல இதுவும் கருத்துமுதல்வாதமாகும். எப்படி இந்து மத கற்பனைகள் எமது கல்வியை குருடாக்கி மலடாக்கின்றதோ, அதே போல் இதுவுமொன்று. புலன்திறன்கள் தான் தொடர்புபட்டுள்ள பொருட்களின் மீதே செயற்பட ஆரம்பிக்கின்றன. இதை மறுப்பதில் கருத்துமுதல்வாதம் புகுந்து கொள்கின்றது. பொருட்கள் இன்றி, பொருளுடன் தொடர்பின்றி உணர்வுகள் பிறப்பதில்லை. ஒரு குழந்தை பிறக்கும் சமூகம், நாடு, பண்பாடு சார்ந்து கூட வேறுபட்ட உணர்வை, பிறக்கும் இடம் சார்ந்து பெறுவது என்பது, அங்கு காணப்படும் பொருட்கள் மீதான மனித உணர்வுகளைச் சார்ந்து பரம்பரை பரம்பரையாக கடத்தப்படுகின்றது. வேறுபட்ட சமூகத்தில் வாழ்ந்தாலும் குழந்தை வேறு சமூகத்தில் பிறந்து வாழ்கின்ற போது, குறித்த சமூகத்தின் உணர்வுகளையே குழந்தை பெறுகின்றது. இங்கு உணர்திறன் என்பது புற உலகு சார்ந்தே பிறக்கின்றதே ஒழிய, அக உணர்வு சார்ந்து அல்ல. அறிவும் ஆர்வமும் புற உலகின் பொட்ருகளின் மீதே உணர்வாக உருவாகின்றதே ஒழிய அக உணர்வில் இருந்து பிறப்பதில்லை. இது அச்சமூகம் பொருட்கள் மீதான தனது உழைப்பை எதன் அடிப்படையில் எப்படி கையாண்டு என்ன பண்பாட்டைக் கொண்டுள்ளதோ, அதையே புலனறிவாக கொள்கின்றது. ஒரு சமுதாயத்தின் உறவுகள், பண்பாடுகள் அச்சமுதாயத்துக்கேயுரிய உழைப்பின் மீதான வடிவங்கள் சார்ந்த, உறவுகளிலிருந்தே உருவாகின்றது. மேற்கின் பண்பாட்டை அப்படியே மூன்றாம் உலக நாடுகளின் கல்விச் சாலைகளில் ஏற்படுத்த முனைவது, கோருவது அடிப்படையில் மேற்கின் பொருளாதார உலகமயமாதல்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்பாட்டு அடிப்படைகளை நிறைவு செய்யும் இயந்திரங்களையும், காவல் நாய்களையும் உற்பத்தி செய்ய வழிகாட்டுவது தான். எம்நாட்டின் மீதான ஆங்கிலேய காலனியாக்கத்தில் அவர்கள் திணித்த கல்வியின் அடிப்படை உள்ளடக்கம், காலனிய நலன்களை விரிவாக்கவும் பாதுகாக்கவும் விசுவாசமான நாய்களை உருவாக்க முடிந்தது. அவர்கள் கொடுத்த சுதந்திரம் என்பது, காலனிய கல்வியை விசுவாசமாக பின்பற்றி காலனிய நலன்களை அவர்களின்றி பாதுகாக்கும் விசுவாசத்தையே ஆட்சி மாற்றம் ஆக்கியதன் பின்னணியில், காலனிய கல்வி ஆதாரமாக இருந்தது, இருக்கின்றது. மேற்கின் கல்வி முறை, ஏகாதிபத்திய உலகமயமாதல் விசுவாச இயந்திர காவல் நாய்களையும், அவர்களின் பொருளாதார நலன்களையும் விரிவாக்கவும் உதவுமே தவிர, சமுதாய நலன் சார்ந்து சமூகத்துக்கு எதையும் பெற்றுத்தராது.



அடுத்து மேற்கின் ஆசிரியர் மாணவமாணவியர் கல்வி முறையிலான உறவுகள் வன்முறை கொண்டது அல்ல என்றும், ஆசிரியரை மாணவன் மதிப்பது அடக்குமுறையின் அதிகாரச் சின்னமென்றார். எனவே வன்முறையற்ற கல்வி அவசியம் என்றும், மேற்கில் மாணவர்கள் ஆசிரியர் மீதான வன்முறை விதிவிலக்கானது என்றும், அது எம்மிடமும் உண்டு என்றார். மேற்கு மாணவர்களிடையே வன்முறை என்பது விதிவிலக்கான சம்பவங்கள் என்று பிரஞ்சில் மாமேதை, சமூக இயக்கத்தையே திரித்துக் காட்டிவிடுகின்றார். இந்த நிகழ்ச்சி நடந்த பின்னால் வெளியாகிய FRANCE SOIR (2.2.2001) பத்திரிகையில், பிள்ளைகளின் வன்முறை பற்றி முன் பக்க தலைப்புச் செய்தியை வெளியிடுகின்றது. இது போன்று பல ஆய்வு மற்றும் புள்ளிவிபரங்களை பிரஞ்சுப் பத்திரிகைகள் வெளியிடுகின்றன. பிரஞ்சு சமூகத்தில் அதிதசுதந்திரம் வழங்கப்பட்டு விட்டதாக விவாதங்களும் உண்டு. இந்த அதித சுதந்திரம் மூலதனத்தின் சுதந்திரமாக இருப்பதால், அது சமூகத்தில் வக்கரித்து பிறக்கின்றது என்பது ஆய்வுக்குள்ளாவதில்லை. சதந்திரம் என்பது மற்றவன் மேல் தான் செயற்படுகின்றது என்பதும், அடக்குமுறையின்றி சுதந்திரம் என்பது கற்பிதமாகும். சுதந்திரம் எவ்வளவுக்கு அதிகமானதாக இருக்கின்றதோ, அந்தளவுக்கு அடக்குமுறை அதிகமாக இருப்பதை பறைசாற்றுகின்றது. அதாவது பள்ளமின்றி மேடோ, கூட்டல் இன்றி கழித்தலோ, நேர் மின்னேற்றம் இன்றி எதிர்மின்னேற்றமோ, ஏழ்மையின்றி வசதியோ, தாழ் சாதியின்றி உயர் சாதியோ எப்படி இருக்க முடியாதோ, அதுபோல் தான் அடக்குமுறையும் சுதந்திரமுமாகும். சுதந்திரம் எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ, அங்கு அடக்குமுறையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அதன் உள்ளடக்கமாக இருக்கின்றது. பிரான்சில் அதிக சுதந்திரம் வேண்டும் என்று கோரும் வலதுசாரிக் கட்சி, மாணவ மாணவியர் வன்முறையில் ஈடுபடுவதால் பெற்றோர் தண்டிக்கப்பட வேண்டும் என்று, தொலைக்காட்சியில் விவாதம் செய்கின்றனர். பிரஞ்சு மாணவ மாணவிகளின் மீதான தண்டனை, பாடசாலையில் தனிமைப்படுத்தி விடுவது, வெளியேற்றுவது, பெற்றோரிடம் புகார் கூறுவது, தனியான விசேட பாடசாலைக்கு அனுப்புவது, உளவியல் மருத்துவத்தை திணிப்பது, தனிச் சிறைகளில் அடைப்பது என்ற விரிவான தண்டனை முறை நடைமுறையில் உள்ளது. பொலிஸ் கைது செய்வது என்று இவை பரந்த வடிவில் காணப்படுகின்றது. தண்டனையும், வன்முறையும் உடல் சார்ந்ததாக மட்டும் குறுக்கி பார்த்து விளக்கும் ஜனநாயகவாதிகளின் அடிப்படை எல்லைக்குள் தான், தண்டனை பற்றியும் சுதந்திரம் பற்றியும் பிதற்ற முடிகின்றது. ஒரு மனிதனின் சொந்த உழைப்பை சுரண்டுவது ஜனநாயகமாக உள்ள வரை, சுரண்டப்படுவது ஜனநாயக விரோதமாக, அவன் மேலான சர்வாதிகாரமாக தெரிவதில்லை. இது தான் தண்டனை வடிவத்திலும் வெளிப்படுகின்றது. தண்டனை என்பதை உடல் சார்ந்ததாக மட்டும் பார்ப்பவர்கள், உளவியல் தண்டனைகளை வரவேற்று அங்கீகாரிக்கின்றனர். உடல் தண்டனையை விட உளவியல் தண்டனையே கொடூரமானது. அதை மூடிமறைத்த படி தான் அதை எமது கல்வியில் புகுத்த கோருகின்றனர்.

இன்று அமெரிக்காவில் பாடசாலை மாணவர்கள் துப்பாக்கியுடன் பாடசாலைக்குள் செல்லுகின்றனரா என்று, ஆயுதம் ஏந்திய நபர்கள் ஆயுதப் பரிசோதனை செய்தே வகுப்புக்குள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இது ஏன்? இது போன்று இன்று ஐரோப்பாவில் வளர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வருவதையும், தொடர் வன்முறைகளும் தொடர்ச்சியாக இச் சமூகத்தில் புதிய நெருக்கடியாகியுள்ளது. இன்று தனியாக எந்த சாதாரண மனிதனும் பிரான்சில் பாடசாலைக்கு முன்னால் செல்வது என்பது துணிச்சலுக்குரிய ஒருவிடயமாகிவிட்டது. ஏன் நடைமுறையில் சின்ன உதாரணத்தைப் பார்ப்போம். பிரான்சில் பாடசாலைக்குள் மாணவ மாணவிகள் கல்வியல்லாத எந்த நிலையிலும், ஒரு நிமிடம் கூட ஏன் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவதில்லை? கண்காணிப்பின்றி, பாடம் அல்லாத எந்த நிலையிலும் பாடசாலைக்கு செல்ல ஏன் அனுமதிப்பதில்லை? ஆனால் எம் ஊரில் பாடசாலை அல்லாத எந்த நேரத்திலும் பாடசாலையில் இருக்க முடிவது ஏன்? ஒரே ஒரு காரணமே இங்கு உண்டு. எமது மாணவ மாணவிய சமுதாயம் வன்முறை அற்றதாகவும், மேற்கு மாணவ மாணவிய சமூகம் வன்முறை கொண்டதாகவும் உள்ளது. மேற்கில் ஆசிரியர் அற்ற எந்த நிலையிலும், மாணவ மாணவிய தங்கியிருப்பு என்பது, பாடசாலை பொருட்கள் மீதான வன்முறையாகிவிடுகின்றது. மலசலகூடம் எதுவும் சேதமின்றி இங்கு பாடசாலையில் காணமுடியாது. அதனால் இன்று மலசலகூடத்துக்கும் கண்காணிப்பு கமரா பூட்டப்படுகின்றது. பாடசாலை கமரா கொண்டு கண்காணிக்கும் ஒரு நிலையிலும், பாடசாலை மீதான வன்முறை விரிவாக உள்ளது. இங்கு மாணவர் சமூகம் கண்காணிப்பின் எல்லைக்குள் கண்காணிக்கப்பட்டே "சுதந்திரமாக" ஒழுங்குபடுத்தப்பட்டு அடிமையாக அடக்கப்பட்டுள்ளனர். கண்காணிப்பு அற்ற எல்லா நிலையிலும் மாணவ மாணவியர் வன்முறை கும்பலாகிவிடுகின்றது. இதற்கு வயது வேறுபாடு கூட கிடையாது. கண்காணிப்பினுள் வன்முறை ஒரு பொது நிகழ்வாக அடிக்கடி பீறிட்டு வெடிக்கின்றது. பிரான்சின் சில பகுதிகள் இரவு நேரங்களில் மாணவ மாணவிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிடுகின்றது. பொலிஸ் உட்புகுந்தால் சிதைந்து போன நகரப் பகுதியையே விடியக்காலை மீட்கின்றனர். இதனால் அரசு பொலிஸ் கண்காணிப்பின் அடிப்படையாக கொண்டு, இப்பகுதிகளில் தீடீர் திடீரென குடும்பத்துடனேயே பெரிய குடி நகர்த்தலை பரந்த பிரதேசத்துக்குள் செய்து, மாணவ மாணவிகளின் வன்முறை அமைப்பு ஒழுங்கை சிதைக்கின்றனர். புதிய வன்முறை ஒழுங்கு உருவாக்கும் காலம் வரை இப்படித் தான் வன்முறையை சமாளித்து சமாளிக்க முனைகின்றது. வன்முறை என்பது சமூக பொருளாதார கல்வியின் அடிப்படை உள்ளடக்கத்தில் இருப்பதை மூடிமறைப்பதன் மூலம், இந்த பொருளாதார விரிவாக்கத்தை பாதுகாக்கின்றனர். ஆனால் வன்முறை இதுபோன்று எமது ஊரில் இல்லை. அப்படி இருப்பின் அது விதிவிலக்குகளே. மேற்கின் கல்வி அடிப்படையில் உலகமயமாதலை விரிவாக்கும் வன்முறையை கொண்டே கட்டமைக்கப்படுவதால், வன்முறை பண்பாடாகவும் கலாச்சாரத்தின் ஊற்று மூலமாக கல்வியாகின்றது.

எமது நாட்டில் சாதியத்தினாலும், வறுமையினாலும், இனவாதத்தினாலும், பாலியலாலும் மறுக்கப்பட்ட குழந்தைகளின் கல்வியும், வசதியும் அடிப்படையானதும் அவசியமானதுமான உடனடிப் பணியாக எம்முன்னுள்ளது. இதை நோக்கி எமது கவனம் குவிக்கப்பட வேண்டும். கல்விச் சாலையில் மேற்கின் கற்பனையுடன் பகட்டு மேற்கின் கனவுக் கல்விக்கு வசதியையும் வாய்ப்பையும் ஏற்படுத்தும் பண்பாட்டுக் கலாச்சாரத்தை எதிர்த்து, கல்வி மறுக்கப்பட்டவனின் கல்வி முதன்மையானதும் அடிப்படையானதுமாகும். ஆசிரியர் மாணவர் உறவுகளில் உள்ள ஜனநாயக மீறல் என்பது எமது அடிப்படைக் கல்வியை, சமூகத்தின் தேவையிலிருந்தே உருவாக்க முடியுமே ஒழிய, வெளியிலிருந்து திணிப்பது என்பது அத்துமீறலாக சமூக விரோதமாக பரிணமிக்கின்றது.



மேலும் அவர் "கிணற்றுக்குள் தவளை வளர்த்த காலமே கரையேறிவிட்டது. சமுத்திரத்தில் முதலை வளர்க்க ஆசிரியர்கள் தம்மை நவீனப்படுத்த வேண்டும்" என்றார். எவ்வளவு விசித்திரமான உலகமயமாகும் கைக்கூலித்தனம். எமது பண்பாட்டுக்கு மாற்றாக மேற்கின் கல்வி முறையை புகுத்தும் ஒரு மாற்றுத் தான், இவரின் நவீனத்துவக் கண்டுபிடிப்பு. நிலப்பிரபுத்துவ தரகு முதலாளித்துவ காலனித்துவ கிணற்றுத் தவளை கல்வி முறை அறிவியலை, அச்சமூக இருப்பு சார்ந்து கட்டமைக்கப்படுகின்றது. இங்கு தனிப்பட்ட ஆசிரியன் மீது குற்றம் சுமத்துவதும், பரிசளிப்பதும் என்பது; சமூக பொருளாதார உறவை விடயத்தின் உள்ளடக்கத்திலிருந்து பிரித்தெடுப்பதாகும். நவீன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கல்வி என்பது ஏகாதிபத்திய உலகமயமாதல் சுரண்டல் சமூக பொருளாதார அமைப்பு சார்ந்து, பரந்த சமுத்திரத்தில் முதலையாக இருக்க கோருகின்றார். சுத்தியும் சுத்தி தண்ணீருக்குள் (சுரண்டல் எல்லைக்குள்ளான கல்வி) ஒரு முதலையாக காலத்தை ஓட்டக் கோருகின்றார். முதலை தரையில் உயிர் வாழ முடியாத சமுத்திரத்தின் எல்லைக்குள் மூழ்க வேண்டியது தான். அதாவது மேற்கின் கல்வி சமுத்திரத்தில் முதலைத் தன்மை கொண்டவை தான். அறிவை, மனித இயற்கை மற்றும் உழைப்பில் இருந்து அகற்றி, உலகமயமாதலை விரிவாக்கும் தளத்தில் சமுத்திர முதலையாக இருக்கக் கோருவதே. எப்படி நிலப்பிரபுத்துவ கல்வி கிணற்றுத் தவளையாக உள்ளதோ, அதே போல் மேற்கு கல்வி சமுத்திர முதலைக் கல்வி தான். இரண்டும் தரையில் வாழ முடியாது. கிணற்றுத் தவளை தரைக்கு வந்து போகவோ வாழவோ முடியாது. முதலை தரைக்கு வரமுடியும், ஆனால் சமுத்திரத்தை விட்டு தரையில் தூரச் செல்லவோ, தரையில் உயிர் வாழவோ முடியாது. மண்டிப் போன மூலதனத்தை விரிவாக்கும் இயந்திர உறுப்பு சார்ந்த கல்வி அறிவுடன், பகட்டுச் சுதந்திரத்தில் போலியாக வாழ்வதே நிகழ்கின்றது. இதற்கு மூன்றாம் உலக நாடுகள் பலிக்கடாவாகும். மூன்றாம் உலக நாடுகள் சுரண்டப்படுவது நிறுத்தப்படின், தவிர்க்க முடியாமல் மேற்கின் கல்வியும், கல்விமுறையும் தகர்ந்து போகும்.

அடுத்து இணையம் பற்றிய பிதற்றலைப் பார்ப்போம். "வீட்டிலிருந்தவாறே உலகின் மிகப்பெரிய நூல் நிலையங்களுக்குள் நுழையும் வாய்ப்பு சாதாரண விடயமாகி விட்டது. செய்தித்துறையின் மீதான மேற்கத்திய நாடுகளின் சர்வாதிகாரத்தை நொருக்கியெறியும் சாதனையை இணைய வலையம் வெகுவிரைவில் ஆற்றி முடிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ளத் தேவையில்லை" என்று கூறி அமைதியாகும் படி உபதேசம் செய்கின்றார். பிரஞ்சு மொழி மன்னன், இணைய பொறியியலாளரின் (எஞ்சினியரின்) அறிவுக்கு, இது எப்படி எதன் வழியில் சாத்தியம் என்பதை ஆதாரமாக நிறுவ வேண்டும் என்ற தரவுகள் கூட அவசியமற்றதாகிவிடுகின்றது. இணைய பொறியியலாளர்களை உருவாக்க கற்பிக்கும் போதே, மேற்கின் கல்வி முறை இதைச் சொல்லத் தயங்குவதில்லை. அதை அப்படியே எமக்கு கொஞ்சம் திருத்தி சொல்வதே இங்கு மீள நிகழ்கின்றது. இதை புத்ஜீவி சொல்கிறேன் சந்தேகமின்றி ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேறு பிரகடனம் செய்கின்றார்.

ஆனால் உண்மை நிலை என்ன. இணையம் என்பது மனிதனுக்கு புறம்பாக, மனிதனின் இன்றைய அறிவைத் தாண்டி எந்தச் செய்தியையும் வெளியிடுவதில்லை. மனிதன் தான் செய்தியினை அதற்குள் புகுத்துகின்றான். உலகெங்கும் உள்ள மனிதன் தன் சமூகத்தின் பொருளாதார பண்பாட்டு கலாச்சார எல்லைக்குள் சிந்திப்பதைத் தான், மீள முன்வைக்க முடிகின்றது. இந்த நிலையில் உலகமயமாதல் எல்லையில் மனித அறிவுகள் அதற்குள் பெரும்பான்மையாக அதுவே அறிவாக உள்ள நிலையில், இணையமும் அதன் எல்லைக்குள் தான் செய்தியை கொண்டிருக்கின்றது அல்லவா. சமூகத்தின் அறிவைத் தாண்டி இணையம் ஒன்று வெட்டிக் கிழிப்பதில்லை. தமிழ் பேசும் மக்களை எடுத்தால் அதன் அறிவின் எல்லை, இந்த சமுதாய எல்லைக்குள் எப்படி உள்ளது என்பதை இணையத்தில் புகுந்தாலே வெட்ட வெளிச்சமாக நிர்வாணமாகின்றது. இதுபோல் தான் அனைத்து மொழியும். வரையறுக்கப்பட்ட ஏகாதிபத்திய உலகமயமாதல் அறிவு எல்லைக்குள், இணையம் திறந்த புத்தகமாகவே உள்ளது. அனைத்தும் ஏகாதிபத்தியத்தின் கட்டுப்பாட்டில் கண்காணிப்பிற்கு உள்ளாகியே உலகு முழுக்கச் செல்லுகின்றது. எது தடை செய்யப்பட வேண்டுமோ, அவை தடை செய்யப்படுகின்றன. இங்கு அதை மீறியும் வருகின்றது எனின் இரகசிய இணைய வழிமுறையும், மற்றும் கணணி கண்காணிப்பின் போதாமையுமே காரணமாக உள்ளது. இணையம் கண்காணிப்பை வீட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இணையம் மூலம் தனிமனிதனின் எழுத்துகள் கணணியில் எழுதிக் கொண்டிருக்கும் போதே கண்காணிக்கப்படுகின்றது.

இணையம் மனிதனுக்கு எதை நுகரக் கொடுக்கின்றது. ஆணாதிக்க வக்கிரத்துக்கு தீனி போடுகின்றது. இன்டர்நெட்டில் எதை ஆராய்கின்றனர் என யாகூ (YAHOOLL) என்ற இணையம் ஆராய்ந்த போது செக்ஸ் என்ற அதிர்ச்சியே உலகுக்கு எஞ்சியது. இன்டர்நெட்டில் அதிகம் இறக்குமதியானது சின்டி மார்கோலிஸ் (CINDY MARGOLIS) நீச்சல் உடைகள்தான். சின்டியின் நூறு பிரசித்தி பெற்ற போட்டோக்கள் 750000 பேர் பிரிண்ட் எடுத்துள்ளதை அமெரிக்க ஒன்லைன் அறிக்கை தெரிவிக்கின்றது. சிண்டி தனக்கு வரும் ஈ-மெயில் நாற்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சதவீதம் எப்படி உடல் அழகைப் பேணுகின்றீர்கள் எனக் கேட்டு வருகின்றது என்கின்றார். இன்ரநெற் தொடர்பான ஆய்வு ஒன்றை செய்த அமெரிக்காவிலுள்ள 'கார்னேஜி மெல்லோன் பல்கலைக் கழகம்' 'தகவல் மாநெடுஞ்சாலையில் நடக்கும் பாலுறவு வக்கிர இலக்கியங்களின் வியாபாரம்' என்றொரு தலைப்பில் செய்தது. அதன்படி 18 மாதத்தில் 917410 பாலுறவு வக்கிரப் படங்கள், சிறுகதைகள், சித்தரிப்புகள், ஆண்டுத் திரைப்படங்கள் இன்ரநெற்றில் புகுத்தப்பட்டதை குறிப்பிட்டதுடன், 83.5 சதவீதம் பேர் இதைக் கண்டு கழிப்பதையும் அம்பலமாக்கினர். பல்கலைக்கழக இன்ரநெற் பயன்பாட்டில் 40 க்கு 13 பாலியல் வக்கிரத்துக்குள் நீடிப்பதை வேறு அம்பலமாக்கியுள்ளது. இந்த சேவையை வழங்கும் அமெரிக்காவின் 5 பெரிய ஜனநாயக நிறுவனங்கள், 10 லட்சம் டாலருக்கு மேல் இதன் மூலம் சம்பாதிக்கின்றனர். இணையம் மனிதனுக்கு கல்வியையோ, அறிவையோ, சமூக நோக்கத்தையோ புகட்டவில்லை. மாறாக ஆணாதிக்க நிற இன சுரண்டலை போதிப்பதன் ஊடாக, சுரண்டலை விரிவாக்கி மனிதனை முடமாக்குவது நிகழ்கின்றது.

அற்ப நுகர்வையும், அற்ப சந்தோசங்களையும் வீட்டுக்குள் புகுதியதுக்கு அப்பால், இணையம் எதையும் சமூகத்துக்கு கொடுத்துவிடவில்லை. முன்பு உடல் ஆரோக்கியத்தை அடிப்படையாக கொண்டு விளையாட்டுகள், உடற்பயிற்சிகள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள் என்று மனிதன் சமூகத்துடன் உறவாடி செய்தவைகள் எல்லாம், முடங்கிப் போன நாலு சுவருக்குள், கம்யூட்டர் முன் எல்லா வக்கிரங்களும் புகுந்து மனித இயற்கை வாழ்வியல் சிதைந்து, இயந்திர பண்பை நாலு சுவருக்குள்ளும் பெற்று பொம்மையாகின்றான்.

இணையம் என்பது மனித சமுதாய பயன்பாட்டின் தேவைகளில் இருந்து அன்னியப்பட்டு மூலதனத்தை உருவாக்கும் ஊடகமாக இருப்பதால், இதன் ஊடாக அதிக மூலதனத்தை சம்பாதிக்க விரும்புபவன், எப்படி இணையத்தின் ஊடாக மூலதனத்தை பெற முடியும் என்றே சிந்திக்கின்றான். இந்த மனித விரோதிகளின் கையில் இணையம் உள்ள நிலையில், அங்கு மனிதனை எப்படி ஏமாற்றி எவ்வளவு வேகமாக மூலதனத்தை திரட்ட முடியும் என்பதே நோக்கமாக உள்ள நிலையில், இணையம் பாலியல் சுதந்திர ஜனநாயக வக்கிரத்தால் நிரம்பி வழிகின்றது. பார்வையாளன் ஒரு சினிமாப் படம் பார்ப்பது போல், அதில் கவர்ச்சி பாலியலைத் தேடி நாயாக அலைவது போல், இது இணையத்தில் நேரடியாக அடைவது அன்றாட பொழுதுபோக்காக மாறிவிட்டது. தொடர்ச்சியாக இவை பற்றிய ஆய்வுகள் தெள்ளத் தெளிவாக அம்பலம் செய்கின்றது. சினிமா தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வக்கிரத்தை தேடி அடைவது என்பது போய், இங்கு குறி வைத்தே வக்கிரத்தை அடைவதே இணையத்தில் மையமான உள்ளடக்கமும் வக்கிரமுமாகும். அதாவது உலகமயமாதலில் பணம் உள்ளவன் எதையும் அனுபவிக்க முடியும் என்பதை, இணையத்தில் அனைத்து மக்களுக்குமான காட்சியூடாக, வக்கிரமாக சுயதிருப்தியடையத் தூண்டுவதில் இணையம் தலையாய பாத்திரத்தை வகிக்கின்றது. சமுதாயம் சமூக நலன்களை புறந்தள்ளி சிலரின் நலன்களை பிரதிபலிக்கும் உலகமயமாதல் உலகத்தில், இணையமும் அது சார்ந்தே தனது உள்ளடக்கத்தையும், பயன்படுத்தலையும் தீர்மானிக்கின்றது. எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளும் சமூகத்துக்கு எப்படி எதிராக இருக்கின்றதோ, அதுவே இணையத்துக்கும் பொருந்தும். இங்கு விதிவிலக்காக கற்பிப்பது என்பது, புத்திஜீவித்தனத்தின் மோசடியுடன் கட்டமைக்கப்படுவதாகும்.

## *"முகம்" இழந்தவரின் ஆணாதிக்க பின்னணி இசையில் முகிழ்ந்த "சுதந்திர" பெண் விடுதலைக் கோசம்*

28.1.2001 பாரிசில் நடந்த வேலணை மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க நிகழ்வில், பெண் விடுதலை என்ற பெயரில் ஓரிருவர் சுதந்திர கோசத்தை, புலம் பெயர் இலக்கியவாதிகள் அனைவரையும் எதிர்த்து எழுப்பினர். ஓரிருவர் அண்மையில் நடத்திய புலம் பெயர் இலக்கியச் சந்திப்பை மான வெட்கமின்றி அண்மையில் அலங்கரிக்கவும் தவறாதவர்கள். சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு முரண்பாடு. புலிகளின் பினாமியாக உத்தியோகபூர்வமாகவும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உத்தியோகபூர்வமற்ற நிலையிலும் இயங்கும், 99 சதவீதம் சினிமா திரைப்பட ஆணாதிக்க பாடல் குப்பைகளை அடிப்படையாக கொண்டு இயங்கும் ஐரோப்பிய தமிழ் வானொலி தொலைக் காட்சிகளில், படுபிற்போக்கான அறிவிப்பளார்களாக பவனி வருபவர்கள். அங்கு தேவாரம் முதல் திருக்குறள் வரை குழந்தைகள் மீது திணித்து, ஆணாதிக்கத்தை மதத்தினுடாகவும் பண்பாட்டின் ஊடாகவும் ஊட்டி வளர்ப்பவர்கள். புலம்பெயர் இலக்கிய வாதிகளின் நேர்மையைப் பற்றி வாய் கிழிய கோசமிட்டவர்கள், பார்ப்பனிய ஆணாதிக்க அடிமை திருமணச் சடங்குகளின் சின்னமான தாலியை கழுத்திலும், ஆணின் அடிமையை பறை சாற்றும் குங்குமத்தை நெற்றியிலுமாக மடிசார் முறையில் வீற்றிருந்து, ஆணாதிக்கம் பற்றி தமது கோசத்தை, நேர்மையினமாக நடைமுறைக்கு எதிராகவே இரவல் கோசத்தில் எழுப்பினர். புலம்பெயர் இலக்கிய சீரழிவையும் வக்கிரத்தையும் குறித்து விமர்சிப்பதற்கு, அதாவது இங்கு பொதுவில் அல்ல, குறைந்தபட்சம் அதற்கு சமூக நடைமுறையில் ஆணாதிக்க ஒழிப்பில் நேர்மை தேவை. குறிப்பான பாதிப்பு இருப்பின் குறித்த விமர்சனமும், பொதுவான விமர்சனம் எனின் உயர்ந்த சமூக விஞ்ஞான கோட்பாட்டின் அடிப்படையில் நின்று செய்வதுமே நேர்மையாகும். இந்து மதத்தை ஒழிக்காமல் பெண்ணியம் என்பது வெற்றுப் பேச்சாகும். இந்து மதமே ஆணாதிக்க வக்கிரமாகவும் வன்முறையாகவும் இருக்கின்ற போது, இந்துமதச் சடங்குகளை கோயில் படியேறி செய்வதில் தொண்டராக இருந்தபடி, ஆணாதிக்க ஒழிப்பு பற்றி பிதற்றுவது எதற்காக? புலிகளின் ஆணாதிக்க உரைகள் முதல் நடத்தைகள் வரை சமரசம் செய்து சோரம் போய் விமர்சிக்க வக்கற்று, அனைத்து மனித விரோதத்துக்கும் துணை போபவர்கள், புலிகள் அல்லாத இலக்கிய வாதிகளின் கோட்பாடுகள் மீது பொதுவாக கொச்சைப்படுத்தி தாக்குவது எதற்காக? ஆனால் தேசியம் மீது மட்டும் ஆகயாக, என்ன காதல்! என்ன சமரசம்! என்ன ஆணாதிக்கம்! இதன் அரசியல் பின்னணி என்ன? தாம் சொல்வதற்கு எதிராக ஆணாதிக்க அடிமைத்தனத்தை தனக்குள் பாதுகாத்தபடி, பெண் விடுதலை பற்றிய பிதற்றல், உள்ளடக்கத்தில் பிற்போக்கானவை. ஆணாதிக்க அடிமைத்தனத்தை தாலியிலும், குங்குமத்திலும், மெட்டியிலும் அணிகலனாக அணிந்தபடி, அந்த சடங்குகளை சுயவிமர்சனமின்றி பாதுகாத்தபடி, மேடையில் அச் சின்னங்களுடனும், வனொலியிலும் அதை பண்பாடாக கூறியபடி,

## முகத்தின் பின்னால்...

இப்பெண்களை புலம்பெயர் கோஸ்டி கானத்தில் ஆசியும் அருளும் வழங்கி ஆட்டுவித்தவனாக நம்பப்படுபவன் "முகம்" எடுத்து முகமிழந்த "முகம்" காட்டா கவிஞனாவன். இக் கவிஞரின் பல கவிதைகளும், இவரின் ஆசியும் அருளும் பெற்று எழுதப்பட்ட பல கவிதைகள், இப் பெண்ணிய கோசவாதிகளால் உரிமை கோரியும் கோராதும் அரங்கேறியது பலரும் அறிந்ததே. புலம் பெயர் இலக்கியத்தில் மலட்டுத்தனத்தில் உயிர்ப்பிக்கும் ஆற்றலற்ற வக்கிரத்தை வெளிப்படுத்திய விதம் கேவலமானது. இக் கவிஞனின் இலக்கியம் என்பது மென்மையான உணர்ச்சி சார்ந்தது என்ற போர்வையில், பூர்சுவா பெண்ணுக்கேயுரிய ஆணாதிக்கம் சார்ந்த மென்மையான உணர்வுகளை இலக்கியத்தினைக் கொண்டு மயக்கி அவர்களை ஏமாற்றி நுகரும், ஒரு அற்ப ஊரறிந்த பொறுக்கியாவான். மென்மை உணர்வை பெண்களுடன் பொருத்தி அதை இலக்கியத்தின் பண்பாக காட்டி, கவிஞன் மென்மையான உணர்வுகளைக் கொண்டவன்', அவன் பெண்களின் மென்மையான உணர்வில் ஒன்று கலப்பவன் என்று நியாயப்படுத்தி, பெண்களை இலக்கியத்தின் பின் ஏமாற்றி நுகரும் இலக்கியப் பண்பாடு, இலக்கிய வரலாற்றில் புதியவையல்ல. இதைச் சொல்லியே பல கவிஞர்கள் கவிஞர்களாக நுகர்ந்து பொறுக்கி வாழ்கின்றனர். கவிஞனின் "சுதந்திரம்" அனைத்தையும் விட மேலானது அல்லவா!! இந்தப் பொறுக்கி தமிழ் வனொலிகளின் பிற்போக்கை எதிர்ப்பதாக பாசாங்கு செய்தபடி, செய்தி அறிவிப்பாளர்களுக்கு ஆலோசனைகளும், முகமற்ற கவிதைகளையும் எழுதிக் கொடுத்து, பெண்களை இலக்கியத்தின் ஆணாதிக்க தேசிய ரசனைகளுக்குள்ளும், பயன்பாட்டுக்குள்ளும் வளைத்துப் போடும் விடயத்தில் முகமற்ற சமரசவாதியாவான். கவியின் இலக்கிய ரசனையை ரசித்து நண்பியாக இருந்தவர்களும் இல்லாதவர்களும், ஆணாதிக்க கவிஞனால் ஏற்பட்ட சொந்த மனைவியின் துயரத்தை கவிதை நிகழ்வாக்கவில்லை. சொந்த மனைவி இலங்கையில் தனிமையில் பல வருடங்கள் தவித்து தனித்து கிடந்த போது, அந்த பெண்ணின் "முகம்" இழந்த முகத்தை, ஆணாதிக்கத்துக்கு எதிரான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோசம் போடுவதே பெண் விடுதலை என்கின்றனர். தேசிய விடுதலைப் போராட்டத்தை பயன்படுத்தியும், தமிழ் மக்களை ஆழ்ந்த அறியாமையிலும், வீட்டில் ஆணாதிக்க சினிமாவைக் கொண்டு தனிமையில் காலம் தள்ளி வாழும் அடிமைப் பெண்களின் தொலைபேசித் தயவிலும், பிழைப்பு நடத்தும் வனொலிகளின் அறிவிப்புத் திலகங்களின் பெண்ணியம் என்பது, நவீன ஆணாதிக்கத்தை பெண்ணுக்கு அணிகலனாக்கி அதை நடைமுறையில் கொண்டிருக்கும் ''சுதந்திரத்தை'' அங்கீகரிக்க கோருவதாகும். ஆணாதிக்க அடிப்படை நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய பண்பாட்டு கலாச்சாரங்களை பேணியபடி ''சுதந்திர'' ஆணாதிக்கத்தில்,

> போராட்டங்கள் நிச்சயமாக வரலாற்றில் படமாக்கும். இந்தியா இலங்கை மீது சமதானப் படை வேடத்தில் ஆக்கிரமித்து, தமிழ் பேசும் மக்களை கொன்றும், கற்பழித்தும் சொத்துகளை சூறையாடி அழித்த நிகழ்வுகளை, பெருமை பட பீற்றும் கவிஞர், ஒரு இந்தியக் கைக்கூலியாவர். புலம்பெயர் இலக்கியத்தினை பொதுப்படையாக தூற்றுவதற்கு அவரின் தனிப்பட்ட காழ்ப்புகளை அடிப்படையாக கொண்டு, அதை முகமிழந்து "முகம்" தெரியாத பின்ணியில் சேற்றை அள்ளி எறிவது, புலம்பெயர் கோஷ்டி கானத்தின் இசையின் ஒரு பக்கமாக இது வெடித்துக் கிளம்பியது. புலம்பெயர் இலக்கியத்துடன் எந்தவிதமான தொடர்பற்ற பெண்களை ஆதாரமாக கொண்டு, அதை தூற்றுவித்த ஒரு வக்கிரம் கொண்டவனாக, இலக்கிய கோஸ்டி வாதத்தை துணை கொண்டு புரையோடிய போது இலக்கிய வக்கிரம் வெளிப்பட்டது. எடுப்பார் கைப்பிள்ளையாகி சுதந்திரம் இழந்து கருத்திழுந்து பொம்மையாக, அவர்களுடன் நேரடியாக சம்பந்தமில்லாத புலம் பெயர் இலக்கியம் மீது பொதுத் தாக்குதலை நடத்தியோர், படுபிற்போக்காக இருக்கின்ற சமுதாயத்தின் முன்னணி நடிகர்கள் தான்.

பெண்களின் "சுதந்திர" ஆணாதிக்க நடத்தைகளை கோருவதில் இவை மண்டிக்கிடக்கின்றது. இப்படி நடைமுறையில் ஆணாதிக்கத்தை கொண்டபடி கோசம் போட்ட பெண்கள் புலம்பெயர் இலக்கியத்துடன் எந்தவிதமான ஒட்டோ உறவோ கிடையாது. புலம் பெயர் இலக்கியத்தை படிப்பதோ, அது பற்றி தெரிந்து கொண்டவர்களோ அல்ல. ஆனால் புலம் பெயர் இலக்கியம் மீது தேசியத்தை விலத்தி மற்றைய கோட்பாடுகளின் மீது நடத்திய பொது தாக்குதலின் பின்னணி என்ன? (பார்க்க பெட்டிச் செய்தியை.)

அதே நிகழ்ச்சி மண்டபத்தில் உரத்து பெண்ணியம் பேசிய ஒருவரின் சொந்த மகள், படையப்பா படத்தின் "சுதந்திர" பாடல் காட்சிக்கும், வேறு சினிமா பாடலுக்கும் ஆடிய ஆட்டம், டிஸ்கோவில் பெண் "சுதந்திரம்" பெற்று ஆடியதை ஒத்ததே. ஏகாதிபத்திய பணபாட்டில் பிள்ளைகள் இயலபாகவே இதை ஆடுவது, ஏகாதிபத்திய நாட்டின் பொதுவான சமூகப் போக்காக இருப்பது முற்றிலும் இதிலிருந்து வேறானது. ஆனால் இதை தாயும் தந்தையுமாக முன்னின்று நடத்தியது என்பது, பெண்ணியத்தை பேசும் அருகதையை அற்றதாக்கின்றது. அப்பெண்ணின் தாயும் தந்தையும் இப் பெண்ணை, தந்தை வேலை செய்யும் டிஸ்கோவில் ஆட அனுமதிப்பாரா? இன்றைய சினிமாவில் நடிகை, மற்றும் துணை நடிகைகளை ஆணாதிக்க வக்கிரத்துக்கு தீனிபோடும் வகையில், ஆட வைக்கும் ஆணாதிக்க சினிமா உலகத்தின், ஆணாதிக்க பாடல் மற்றும் நடனப் பண்பாட்டை பெண்ணியம் பேசியபடி, சொந்த மகளுக்கு பழக்கி அதை மேடையில் ஏற்றி ரசிக்கும் பெண்ணியம் எந்த வகைப்பட்டது. இந்தப் பண்பாடு எல்லை பல கடந்து உலகை ஆக்கிரமிக்கும், உலகமயமாதலின் நீக்கமற்ற மறுவடிவம் தான் இது. அதை பழைய மாணவர் சங்கத்தின் குறைந்தபட்சம் இருக்கும் உள்ளார்ந்த நேர்மையான நோக்கத்தை கொச்சைப்படுத்தும் வகையில் நடத்தியது என்பது, மாணவர் சங்கத்தின் சமூக கண்ணோட்டத்தின் பலவீனங்கள் மீது தான். இந்த சமூகத்தின் ஆணாதிக்கம், அறியாமை, மூடத்தனம், நிறவாதம், இனவாதம், தற்குறித்தனம், சாதியத் திமிர்... என அனைத்தினதும் தலைமைக் குருக்கலாக வழிகாட்டியாக முன்னோடியாக இருப்பவர்கள், ஆணாதிக்க ஒழிப்பு பற்றி கோசம் போட்டு வேசம் போடுவது அருவருப்பான பெண்ணியமாகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பார்ப்பனிய, பின்நவீனத்துவ, தலித்தியல்வாதிகள்
# ஏன் நீட்சேயை தலையில் வைத்து கூத்தடிக்கின்றனர்?

நீட்சே எதை சமுதாயத்தின் மிக உயர்ந்த பண்பாக வருணிக்கின்றாரோ, அதுவே சுரண்டலில் தொடங்கி ஆணாதிக்கம் ஈறாக யதார்த்த மனிதப் பண்பாகவுள்ளது. "காமவேகம், வலிமை சக்திக்கு ஆசை, சுயநலம் இம் மூன்றும் தான் முப்பெருந் தீமைகளாகப் பன்னெடுங் காலமாகச் சபிக்கப்பட்டு வருதிருக்கின்றன. ஆனால் அம்மூன்றும் தான் மனிதத் தன்மையில் நல்லனவாக நான் எடை போடுகிறேன்"[1] என்று சமுதாயத்தை பிளந்து, அதில் இதைச் சாதிக்கும் சிறுகூட்டத்தின் திமிர்த்தனத்தையே நீட்சே, உயர்வான மனிதப் பண்பாக காட்டமுயல்கின்றார். காமம், ஆசை, சுயநலம் என்பன மனித சமுதாயத்தை பிளந்து அதில் சிலர் மட்டும் பெரும்பான்மைக்கு எதிராக அனுபவிக்க கூடியவை. சமுதாயப் பிளவு இந்த சமுதாயத்தில் இல்லாத வரை, இதை ஒருக்காலும் யாராலும் சாதிக்க முடியாது. சமுதாயப் பிளவற்றதாக இருக்கின்ற போது, இந்த உணர்ச்சிகள் சார்ந்த மனித இழிவுகள் கற்பிதமாக மாறிவிடுகின்றது. உலகமயமாதல் சரி நாசிகளின் பாசிசம் சரி மூலதனத்தை பெருக்கவும் பாதுகாக்கவும் இதையே ஆதிமூல மந்திரமாக, தனிமனித நடத்தையாக கொண்டே, கோடான கோடி மக்களின் உதிரத்தையே உறுஞ்சிச் சுவைத்து ரசிக்கின்றது.



இதை நீட்சே இயற்கையின் விதி என்கிறார். "உயிர் வாழ்பிறவிகள் அனைத்திடமும் கொள்ளையடிப்பதும், கொலை புரிவதும் லட்சணங்களாக அமைந்திருக்கின்றனவே! இயற்கை நியதி அது தான் அல்லவா?" என்று கூறி உயிரியல் விதியையே திரித்து கொள்ளையடிக்கவும், கொலை புரியவும் உரிமை உண்டு என்று, உரக்க பாசிட் கோட்பாட்டாளனாக மூலதனத்தின் பாதுகாவலனாக பிரகடனம் செய்கின்றார். உயிர்த் தொகுதிகளில் இரண்டு வேறுபட்ட உயிர்களுக்கிடையில் உணவுக்கான போராட்டம் கொலையோ, கொள்ளையோ அல்ல. இயற்கை அதற்கு அப்படி பெயரிட்டதில்லை. இயற்கை மறுத்த வர்க்க சமுதாயத்தின் சுரண்டல் பண்பாக உழைப்பை திருடிய போதே, இது கொள்ளையாகவும் கொலையாகவும் அடையாளம் காணப்பட்டது. கொலையும் கொள்ளையடிப்பதும் மனித இயல்புகளாக வர்க்க சமுதாயத்தில் மனித உழைப்பை சுரண்டியதால் உருவானவை தான். உயிர்த் தொகுதியில் உயிர் வாழ்தல் என்ற அடிப்படையில் மட்டும் ஒன்றை ஒன்று உண்டு வாழ்வது நிகழ்கின்றது. இது சங்கிலித் தொடராக சுழற்சியாக நிகழ்கின்றது. ஆனால் மனிதன் அதை அப்பட்டமாக நிர்வாணமாக மீறுகின்றான் மற்றவன் உழைப்பைச் சுரண்டி உபரியை திரட்டவும், அதைக் மூலதனமாக்கி அதை கொண்டு அடிமைப்படுத்தவும், மற்றைய உயிரினங்களை கொன்று கொள்ளையிடுவது என்ற பண்பு இயற்கையானது அல்ல. அடுத்து சொந்த மனித இனத்துக்குள் மற்றவன் உழைப்பை சுரண்டி கொள்ளையிட்டு கொன்று போடும் தன்மை, உயிரியல் தொகுதியின் இயற்கையானவையல்ல. மனித இனம் இன்று உயிர்வாழ்வதற்குரிய மனிதப் பண்புக்கு இது நேர் எதிரானது. மனிதனை மனிதன் கொன்று அழித்து கொள்ளையிட்டிருப்பின், மனிதன் காட்டுமிராண்டி சமூகத்தை தாண்டி ஒரு நாள் கூட உயிர் வாழ்ந்திருக்க முடியாது. நீட்சேயின் கோட்பாட்டை அடிப்படையாக கொண்டு சுயநலத்தில் ஆசைப்பட்டு காமத்துடன் அலைந்து, கொள்ளையிலும் கொலையிலும் கொழுத்து எழும் பூதமாகவே உலகமயமாதல் காணப்படுகின்றது. இதன் பண்பாடு, பொருளாதார கலாச்சார அலகுகள் அனைத்துமே, விதிவிலக்கின்றி இதுவே தாரக மந்திரமாக உயிருடன் உலாவருகின்றது. இதை தீவிரமாக்க வர்க்கப் போராட்டத்தை அடக்கியொடுக்க, பாசிசத்தையே அதன் மூல மந்திரமாக கொண்டு கூத்தடிக்கின்றது. சமுதாயத்தைப் பற்றி சிந்திப்பதை வெறுக்கும் நீட்சே " 'மானுஷிகத்தின் எதிர்காலத்திற்கு மிகக்கொடிய விபத்தை விளைவிப்பவர்கள் நன்மை நியாயம்' என்கிற வாதங்களைப் பேசித்திரிகிறவர்கள் தான்! தீங்கானவர்களின் செயலைக் காட்டிலும் இந்த நன்மை வாதிகளின் செயல் தான் மிகக் கெடுதலானவை."[1] என்று கூறுவதன் மூலம் சமுதாய நலன் சார்ந்த நடத்தைகள் மீதான வெறுப்பை வெளிப்படுத்துகின்றான். நன்மை, நியாயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்பன இந்த வர்க்க சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாக இருப்பது, நீட்சேக்கு அருவருப்பூட்டி வெறுப்பூட்டுவதாக இருக்கின்றது. இதனால் சமுதாய நலன்களை தூற்றுவது, இது இருக்கின்ற சுரண்டல் அமைப்புக்கு தீங்கானவை என்றும், ஆபாத்தானவை என்று கூறி வெறுப்பதில் வக்கரிக்கின்றான்.

நீட்சேயின் கோட்பாடுகள் சுற்றிச் சுழன்று எதை நிறுவ முனைகின்றது. ஐரோப்பாவில் உருவான மையப்படுத்தப்பட்ட தேசிய முதலாளித்துவ அரசுகளை அடிப்படையாக கொண்டு, ஜேர்மனிய தேசத்தில் சிதறுண்டு கிடந்த ஐக்கியமற்ற பழைய நிலப்பிரபுத்துவ எச்சசொச்சத்தினை எதிர்த்தே நீட்சே தன்னை அடையாளம் காட்டியுள்ளார். அதை இவர் "... உங்களுடைய குழந்தைகளின் நாடு என்பது இன்னும் கண்டு பிடிக்கப்படாமல்"[1] இருக்கிறது என்று கூறியபடி ஜேர்மனிய ஐக்கியத்துக்கு மறைமுகமான தடையாக கிறிஸ்தவ மதம் இருப்பதை கண்டார். இதில் இருந்து கிறிஸ்தவத்தை மட்டும் எதிர்த்ததுடன், ஐக்கியத்தை சாதிக்கவல்ல மாமனிதர்களை தேடினார். மற்றைய மதங்கள் மீது தனது ஆதரவை தெரிவித்தார். அதை அவர் "..தற்காலத்திய தத்துவ ஞானம் மதத்திற்கு எதிர்ப்பல்ல. ஆனால் கிறிஸ்தவ மதத்திற்கு விரோதமானதென்றே கூறியாக வேண்டும்"[2] என்று கூறி, ஜேர்மனிய ஐக்கியத்தை அடைய வன்முறையையும், ஈவிரக்கமற்ற சர்வாதிகாரத்தையும் கோரி, அதைப் புகழ்ந்தே தத்துவத்தை உருவாக்கினார். கிறிஸ்தவ எதிர்ப்பை ஜெர்மனிய ஐக்கியத்தின் பின்பும், நாசி பாசிச தேசியவாதத்தில் நீட்சே வெளிப்படுத்த தயங்கவில்லை. "கடவுளை மறுக்கும் நாஸ்திகவாதம் முன்பு கொடிய குற்றமாயிருந்தது; கடவுள் செத்துப் போனதால் நாஸ்திகர்களும் செத்துப் போனார்கள்; இப்போதைய நாஸ்திகவாதம் இந்த மண்ணை மறுப்பதும் தூற்றுவதுமேயாகும்"[1] என்றதன் ஊடாக சர்வதேசிய நாஸ்திகத்தை மறுத்து, பாசிச தேசிய நாசிசத்தை இலட்சியமாக கொண்டதுடன், அடிமட்ட உழைக்கும் மக்களை இழிந்த அற்பமனிதராக சித்தரிக்க தயங்கவில்லை.. இதை சாதிக்க உழைக்கும் மக்களின் போராட்டத்தை வெறுப்பதில் தனது கோட்பாட்டை அடிப்படையாக கொண்டார். ஜேர்மனி ஐக்கியத்தை வந்தடைய கொடூரமான வன்முறை கொண்ட யுத்தம் அவசியம் என்று கருதியதுடன், அதை சாதிக்க அன்னிய படையெடுப்புகளைக் கூட ஆதரித்தார். ஜெர்மனி அக்காலகட்டத்தில் ஈடுபட்ட அனைத்து யுத்தத்திலும், அவராக முன்வந்து இயன்ற பங்களிப்பை வழங்குவதில் முன்னோடியாகவும், அதை பாதுகாப்பதில் ஒரு கோட்பாட்டாளனாகவும் இருந்தான். மாமனித கோட்பாடு கிறிஸ்தவத்துக்கு பதிலாக, பார்ப்பணிய கருத்துமுதல்வாதத்தை அடிப்படையாக கொண்டு, பெண்கள் மேலான ஆணாதிக்கத்தை ஆணின் வலிமையாக பிரகடனம் செய்தபடி, ஒரு நிற இனவாதியாக உழைக்கும் மக்களை வெறுக்கும் ஒரு பாசிட்டாகவே நீட்சே இருந்தான். இதை அவரின் கோட்பாடுகள் தெளிவுபடவே தெளிவாக சுட்டிக் காட்டுகின்றது. இதை அவன் "வலிமையும் பேராசையுங் கொண்ட ஒருவனது தலைமை ஒரு காலத்தில் சமுதாயத்தின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்திற்கும் இன்றியமையாததாகக் கருதப்பட்டது. அதுவே ஒழுக்கமுறையென்றும் எண்ணப்பட்டது. நாள்ளடவில் இந்நிலைமாறி, அத்தகைய ஒருவனின் தலைமை சர்வாதிகாரமாகத் தோன்ற ஆரம்பித்த போது அந்த ஒழுக்கமுறை ஒழுங்கீனமாகச் சித்தரிக்கப்பட்டது. ஒரு சமுதாயத்தின் பாதுகாப்பிற்கும் முன்னேற்றத்திற்கும் உபயோகமாயிருப்பது எதுவோ அது அபாயகரமானது..."[1] என்று கூறும் பாசிட்டான நீட்சே, மூலதன அமைப்பின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்திற்கும் சர்வாதிகார பாசிசம் அவசியமானது என்பதையே இதன் ஊடாக பிரகடனம் செய்கின்றார்.



"விலங்கிலிருந்து நீ மனிதவிலங்கானது காணும், இனி நீ மனிதவிலங்கிலிருந்து மனிதனாகும் தருணம் வந்துவிட்டது"[3] என்று நீட்சே கூறியதை தூக்கி நிறுத்தும் போது, இங்கு இதன் உள்ளடக்கத்தை நீட்சேயின் பாசிச வாதங்களில் இருந்து திரித்தே மறைக்கின்றனர். மனித விலங்கில் இருந்து மனிதனாவது என்பது, மாமனிதன் என்பதை குறித்தே நீட்சே சொல்லுகின்றார். இதை அடையும் பாதை கொள்ளையும் கொலையையும் அடிப்படையாக கொண்டு சர்வாதிகாரத்தை அடிப்படையாக கொண்டு வஞ்சகம், சூது என அனைத்து மக்களையும் மிதித்து தான் அடைய முடியும் என்கிறார். இதை கட்டுரையில் ஆழமாக விரிவாக பின்னால் பார்ப்போம். மாமனிதன் என்பது மனிதனில் இருந்து விலகிச் செல்லும் ஒரு கருத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதல்வாதமாகும். அத்துடன் இந்த மனிதனாகும் மாமனித தன்மையை, சுரண்டலை அடிப்படையாக கொண்ட அனைத்து மனித பிளவின் ஏற்றத்தாழ்வின் வலிமையில் சாதிக்க முடியும் என்கிறான். இந்த கோட்பாட்டைத் தான் ஆரிய இனம் சார்ந்து, யூத இனத்தை அடக்கியொடுக்கி உலகை ஆக்கிரமித்து, கிட்லர் நிறுவமுனைந்தான். நீட்சே சாதாரண மக்களை மனிதனாக்கும் முயற்சியில், அதாவது மாமனிதனாக்கும் முயற்சியில் ஈடுபடுவதை கேவலமாக கருதியவன். அவன் அதை " 'உயர் மனிதர்களே, என்னிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டியது சந்தைச் சதுக்கத்தில் உயர் மனிதர்களைப் பற்றிய நம்பிக்கை எவருக்கும் இல்லை என்பதாகும்: சந்தைச் சதுக்கத்தில் கூடி நிற்கிற பாமரர்களிடையே நீங்கள் பேசினால் 'உயர் மனிதர்களே!' நாமெல்லாம் சமம் நம்மிடையே 'உயர் மனிதர்-தாழ்ந்த மனிதர்' இல்லை என்ற பாமரத்தனமாக அவர்கள் பதிலளிப்பார்கள்!... எனவே, உயர் மனிதர்களே, சந்தைச் சதுக்கத்தை விட்டுத் தூரவிலகுங்கள்!... மனிதன் இன்னும் தீமையானவனாக வேண்டும் என்பது தான் எனது போதனை! ஏனெனின் மகாமனிதத் தன்மைக்கு தீமை இன்றியமையாததாகும். பாமரர்களின் போதகாசிரியர்களுக்கு வேண்டுமானால் பாவம் ஒரு சுமையாகத் தோன்றலாம். ஆனால் எனக்கோ மகா பாவம் மகிழ்ச்சிக்குரியதாகவும் மன ஆறுதலளிப்பதாகவும் இருக்கிறது!"[1] என்று மக்களைப் பற்றிய தனது வர்க்க வெறுப்பை நீட்சே வெளிப்படுத்துகின்றான். சிலர் தான் உலகத்தை உருவாக்குபவர்கள், அவர்களின் உயர்ந்த வாழ்வே உன்னதமானது என்று சுரண்டும் வர்க்கம் சார்ந்து பிதற்றுகின்றான். கிட்லர் முதல் மூலதனத்தின் தந்தைகள் அனைவரும், இங்கிருந்தே தமது கொடூரங்களுக்கு தத்துவ விளக்கம் பெறுகின்றனர். சமுதாயத்தின் பிளவு நீடிக்கும் வரை மனித அடிமையாக, மூலதனத்தின் இயந்திர உறுப்பாக, அடிமை நாயாக இருப்பவன் மனிதனாக முடியாது. விலங்கு மனிதனாக பாமர அடிமை மக்களை திரித்து சித்தரிக்கும் நீட்சே, உயர் மனிதனாக சுரண்டலில் சொகுசாக வாழ்ந்து தித்திக்கும் அனைத்து மனித விலங்குகளையுமே மனிதனாக அதாவது மாமனிதனாக சித்தரிக்கின்றார். பாமர மக்களின் மனிதப் பண்பையே விலங்கு மனிதத் தன்மையாக காட்டும் நீட்சே, மனித சமுதாயத்தின் மக்கள் விரோதியாக திகழ்வதை அவரின் தத்துவ விளக்கமே நிர்வாணப்படுத்துகின்றது.

இதை அவர் மேலும் "சம உரிமைகள், துன்புறுவோரிடம் அனுதாபம் ஆகிய கொள்கைகளை ஏந்திக் கொண்டு சிலர் துன்பத்தை அறவே ஒழித்துவிட வேண்டுமென்று படாதபாடுபடுகின்றனர். மனிதன் பலவாறான துன்பத்திற்கும் அடிமைத்தனத்திற்குமிடையே தான் வளர்ந்து வந்திருக்கிறான் என்பதாகும். ஆகவே துன்பங்களுக்கு அழிவு தேடுவதும், உயர்வு தாழ்வுகளை நீக்க முனைவதும் மனித வளர்ச்சிக்குத் தடைபோடுவதாகும். பலவிதத் துன்பங்களும், கொடுங்கோன்மையுங் கூட மனித வர்க்கத்தை உயர்த்தவே பயன்பட்டன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பல்வேறு கட்டங்களிலும், பலவித நிலைமைகளிலும் அல்லலுற்று இரவு பகலாக உழைத்துப் புதிய இனங்களாகப் பரிணாமமாகிக் கொண்டு வருகிறவர்கள் நாங்கள்! என்று கூறிக் கொள்வதில் தான் சுதந்திர ஆத்மாக்கள் பெருமிதமடையக்கூடும்!"[1] என்று அப்பட்டமான ஒரு சுரண்டும் வர்க்க பாசிட்டாக நாசிசத்தை கோட்பாடாக கூறுவதையே, பின்நவீனத்துவ தலித்தியல்வாதிகள் தலையில் தூக்கி முன்நிறுத்துகின்றனர். மனிதனின் சமத்துவத்தை மறுத்து ஒதுக்கும் பார்ப்பானியம் முதல் சுரண்டல் ஆணாதிக்கம் ஈறாக, நீட்சேயின் கோட்பாட்டால் தாலாட்டுப் பெறுகின்றது. அதே நேரம் பார்ப்பானியத்திடம் இருந்தே இதை மீள எடுத்து முன்வைக்க நீட்சே தவறவில்லை.

உயர் மனிதனை உருவாக்கவும், சிலரை பாதுகாக்கவும் மக்களின் கல்வியறிவை மறுத்து நீட்சே " படிக்கக் கற்றுக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் அனுமதிக்கப்படுகிறார்கள். இது நாளடைவில் எழுதுவதை மட்டுமல்ல, சிந்திப்பதையும் அழித்து விடுகிறது."[1] என்று தனது பாசிச சுரண்டல் வர்க்கப் பண்பை வெளிப்படுத்தி நிற்கின்றான். எல்லோரும் படிப்பதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லோரும் சமூக அறிவு பெற்று எழுத, சிந்திக்க வெளிக்கிட்டால், தன்னைப் போன்ற உயர் மனிதர்களின் கதி என்னாவது என்ற கவலையுடன் கூடிய, தனிச் சொத்துரிமை நலன்களை எண்ணியே இதை பீதியுடன் வெளிப்படுத்துகின்றான். இலக்கியம் பேசும் பலர் அது சிறந்த தனித்தன்மை உள்ளவர்களிடம் மட்டும் இருப்பதாக பீற்றுவதற்கு இது கோட்பாட்டு ரீதியாக முண்டு கொடுக்கின்றது. கலை, இலக்கிய,..... ஆற்றல் எல்லா மக்களிடமும் விதிவிலக்கின்றி இருப்பதுடன், அதை வெளிப்படுத்தும் ஆற்றல் சமூக பொருளாதார வர்க்க வேறுபாட்டால் ஏற்ற இறக்கம் கொண்டமையால், இவை சிலருக்கு சாதகமாகவும் பலருக்கு பாதகமாகவும் இருப்பதால், இவை சிலரிடம் தங்கிவிடுவதால், சிலர் தம்மை மாமனிதர்களாக மக்களை இழிவாக கீழே எட்டி உதைக்கின்றனர். இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டு அதை இல்லாமல் பண்ணுவதன் மூலம், மாமனிதர்களை பாதுகாக்கவும் உருவாக்கவும் முடியும் என்பதே நீட்சேயின் தலையாய கோட்பாட்டு உள்ளடக்கமாகும். இதனால் தான் மாமனிதக் கனவு இலக்கியவாதிகள், நீட்சேக்கு காவடி எடுத்து பக்கத்தை ஒதுக்கி முன்னுரிமை கொடுத்து எழுதுகின்றனர். இன்று தமிழில் நீட்சே முன்னிறுத்த முனையும் தலித்தியல்வாதிகள், பின்நவீனத்துவவாதிகள், ஒரு பக்கத்தை மட்டும் திரித்துக் காட்டியே பார்ப்பணியத்துக்கு மறைமுகமாக கோட்பாட்டு உதவி செய்து பாதுகாப்பு கொடுக்கின்றனர். இங்கு நீட்சே பார்ப்பணிய தத்துவங்களை ஏற்றுக் கொண்டதுடன், மனுவின் திட்டத்தையே தான் கொண்டிருப்பதாகவே 'கிறிஸ்துவுக்கு எதிர்ப்பு' என்ற நூலில் நீட்சே கூறத் தவறவில்லை. இங்கு கிறிஸ்துக்கு பதில் அவர் பார்ப்பணிய மனுவின் கோட்பாடுகளையே ஜேர்மனியில் மீள முன்வைத்தான். அதை அவன் "பொய்மைகள் எந்த அளவுக்கு கேடுவிளைவித்துள்ளன என்பது கேள்வி? உண்மையில் கிறிஸ்துவத்தில் புனித முடிவுகள் முழுமையாக இல்லாதபோதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவது பற்றியே என்னுடைய மறுப்பு அமைந்துள்ளது. அதன் முடிவுகள் தவறான முடிவுகளாகவே உள்ளன. நஞ்சூட்டுதல், பழித்துக்கூறல், வாழ்க்கை மறுப்பு, உடலை வெறுத்தல், பாவத்தை அற்பமாகக் கருதல் ஆகியவற்றின் காரணமாக மனிதன் தரங்கெட்டுத் தாழ்வுறுதல் - இவற்றின் விளைவாக அதன் வழமைகள் தவறானவையாகின்றன. இணையற்றதும் உயர்ந்ததுமான மனுவின் நூலை நான் படித்தறிந்த போது என் உணர்வுகள் மாறின. இதே போன்ற உணர்வுடன் விவிலிய நூலைப் பாராட்டியுரைப்பது ஒரு பாவமென்பேன். இவ்வாறு உரைப்பதற்கு நேரிய தத்துவார்த்த பின்னணி உள்ளதேன் என்பதை நீங்கள் உடனடியாக யூகித்துணர இயலும். யூதர்களின் யூதமத குருமார்களுக்குரிய கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகியவற்றின் பிழிவாக உள்ள துர்நாற்றம் மட்டுமல்ல இதிலுள்ளவை."[2] என்று பிடகடனம் செய்வதன் மூலம் கிறிஸ்தவ எதிர்ப்பின் பின்னுள்ள நோக்கத்தை நிர்வாணப்படுத்தி, பார்ப்பணிய சித்தாந்த பாசிச வாதியாக நீட்சே அடையாளப்படுத்துகின்றார். கிறிஸ்தவ எதிர்ப்பு என்பதை அவர் இன அடையாளம் ஊடாக காண்கின்றார். ஜேர்மனிய இனம் மற்றவற்றைவிட மேலாக இருக்க வேண்டும் என்பதில் இருந்தே, கிறிஸ்தவ எதிர்ப்பை அடிப்படையாக கொள்கின்றார். கிறிஸ்தவம் யூத மதத்தின் சிலகூறுகளை கொண்டிருப்பதால் தான், அது கறைபட்டு இழிந்து போனதாக விளக்கி கிறிஸ்தவத்தை தூற்றுகின்றார். இதன் ஊடாக யூத இனம் மற்றும் மதத்துக்கு எதிர்ப்பாளனாக மாறியதுடன், அதை உட்கொண்ட கிறிஸ்தவத்தை மறுக்கின்றார். அதற்கு மாறாக பார்ப்பணியத்தை அதுவும் மனுவின் சாதிய படி முறையை ஏற்றுக் கொள்கின்றார். சாதியப் படி முறை உயர் மனிதர்களின் பாவச் செயல்களுக்கு வருந்துவதில்லை. அதை சாதியப்படி முறையில் போற்றுகின்றது. மனிதர்களின் ஈனத்தனத்தை பார்ப்பணியம் ஒருதலை சார்பாக பார்ப்பணியத்துக்கு சலுகை வழங்கி ஆதரிப்பதால், மனித விரோத குற்றங்கள் சாதிப்படி நிலையில் நியாயப்படுத்தப்படுகின்றது. பார்ப்பணியத்தின் உயர் பொருளாதார நலன்களுக்கு இசைவாக பண்பாடு கலாச்சார கூறுகளை பாதுகாத்து கூறப்படும் விதிகள் மற்றும் ஒழுக்கங்கள், சுரண்டும் பார்ப்பணிய வர்க்கம் சார்ந்து அவனை உயர் மனிதனாக மெச்சி பாதுகாக்கின்றது. இதில் இருந்தே நீட்சே கிறிஸ்தவ எதிர்ப்பை அடிப்படையாக கொண்டு யூத மதத்தை தூற்றி, பார்ப்பணியத்தை மெச்சுகின்றான். அத்துடன் மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையையும் நீட்சே வெளிப்படுத்தும் போது "லட்சிய சித்தி பெறுவதற்கு முன் அரைகுறையாய் பிரிந்து செல்ல நேருமாயின் ஆவிகள் மீண்டும் பிறந்து முழுவேகத்துடன்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தங்கள் இலக்கை நோக்கிச் செல்லக் கூடும்"[1] என்று கருத்துமுதல் வாதத்தை கிறிஸ்தவத்தை எதிர்த்தபடி மனுவிடம் தாலாட்டு பெற்று முன்வைக்கின்றார். பார்ப்பணியம் உயர் சாதி, தாழ் சாதி என்ற படிமுறையில் மாமனிதர்களையும், உயர் மனிதர்களையும் உருவாக்கிய சமுதாயப் பிளவை அடிப்படையாக கொண்டே, நீட்சே தனது கிறிஸ்தவ எதிர்ப்பை காக்குகின்றார். இதை பார்ப்பணியத்தின் ஆரிய கண்ணோட்டத்தில் சிறப்பாக பிரதி செய்தவர்கள் தான் நாசிக் கட்சி. யூத எதிர்ப்பை இன மத அடிப்படையில் கக்கிய நீட்சே, ஒருதலைப்பட்சமாக மற்றவன் மனைவியை காதலித்த பின்பு, தானாகவே வலிந்து காதலிக்க வைத்த இரண்டாவது பெண், யூத இனத்தைச் சேர்ந்தவள் என்ற ஒரே காரணத்தால், திருமணம் செய்யாது திடீரென கைவிட்ட ஒரு நாசி இன மத வெறியானான். இவன் நாசிசத்தின் கோட்பாட்டாளனாக, உழைக்கும் மக்களின் எதிர்ப்பாளனாக ஒரு பாசிட்டாக இருந்தான். அதை அவன் கூறுவதில் இருந்தே நாம் பார்ப்போம்.

"ஜனநாயகம் எனக்கு உடன்பாடல்ல. அது மிகக் கேவலமானதென்றே நான் கருதுகிறேன். மனிதனின் குணங்கள் அழுகிப் போன போது தான் அது உதயமானதாக எனக்குத் தோன்றுகிறது. ஆகவே இப்போது நடைமுறையில்... ...மனித இனத்தை மகத்தான சாகசச்செயலுக்கு ஆயத்தம் பண்ணுவார்கள் நிஜமான முன்னேற்றத்திற்கு உதவும் கல்வித் திட்டங்களைப் போடுவதற்கான பொறுப்பையும் அவர்களே ஏற்பார்கள். அவர்களது தோற்றத்தால் மூடத்தனமான ஆட்சிக் கொள்கை (ஜனநாயகம்) இறந்துபடும். சாதாரண ஜனநாயகமே மூடத்தனம் எனில் சமதர்மத்தை என்னவென்பது! அது முட்டாள்களின் கொள்கையேயாகும். இயற்கையின் நியாயப்பிரகாரம் ஒரு மனிதன்-அவன் சிறம்பம்சங்களில் ஏனையோரைக் காட்டிலும் மேம்பட்டவனாயிருப்பினும் உயர்வடையத் தடைபோடுவது முட்டாள்தனமன்றி வேறேன்னவாக இருக்கக்கூடும்? ஒரு மனிதனுக்குத் தனித்துவம் கிடையாது. அவன் கூட்டத்தின் ஒரு அங்கமாகவே மதிக்கப்படுவான் என்றால் அவனுக்கு அதைவிடக் கேவலம் வேறில்லை! சமதர்ம அமைப்பில் சிக்கிக்கொள்ளும் அவன் தன் உருவத்தில் சிறுகச்சிறுக குறைந்து குறுகிய மனிதனாகவோ, விலங்காகவோ கூட ஆகிவிடுவான்!."[1] இதனால் தான் பார்ப்பணியம், பின்நவீனத்துவம், தலித்தியம், நாசிசம், ஏகாதிபத்திய உலகமயமாதல் நீட்சேயை போற்றி, மனித விடுதலையின் அதி உயர் மாமனிதனாக்குகின்றனர். பொருள்முதல்வாதத்தை மறுத்து, கருத்துமுதல் வாதத்தை அடிப்படையாக கொண்டு சமுதாயத்தில் இருந்து விலகிச் செல்லும் இலக்கிய வாதிகள், நீட்சே முன்னிறுத்தும் இன்றைய நோக்கம் தெளிவுபடவே நிர்வாணமாகின்றது.




நீட்சே முதலாளித்துவ ஜனநாயகத்தையும், பாட்டாளி வர்க்க சமதர்மத்தையும் மறுக்கின்ற போதே, அது அடிப்படையில் உலகமயமாதலின் எல்லா கழிசடைகளையும் மாமனிதராக்கின்றது. மக்கள் இயற்கையில் சமதர்ம்மாக வாழ்ந்தவற்றை மறுக்கின்ற நீட்சே, சிலர் உயர்மனிதர்களாக வாழும் ஏற்றத் தாழ்வைக் கொண்டே சமுதாயத்தை முன்நிறுத்துகின்றார். தனிமனிதனின் தனித்துவத்தை சமதர்மம் மறுக்கின்றது என்பது, நீட்சேயின் திரிபாகும். தனிமனிதனை சமுதாயத்தின் முன் எதிரியாக, முரண்பாடக காட்டுவதன் மூலம், சமுதாயத்தை மறுத்த தனிமனித உரிமை பற்றி, நீட்சே தனது கருத்து முதல்வாத பாசிசத்தையே முன்னிறுத்துகின்றார். சமுதாயத்தில் தனிமனிதனின் பங்களிப்பு என்பது முரண்பாட்டுக்குரியவையல்ல. சமுதாயம் என்பது தனிமனிதர்களின் தொகுப்பேயாகும். ஆகவே சமுதாய நலன் என்பது, தனிமனிதனின் நலன்களுடன் பின்னிப்பிணைந்தது. சமுதாயத்தை மறுக்கின்ற மாமனித நலன்கள், அடிப்படையில் மக்களுக்கு எதிரானது. இது சமுதாயத்தில் இருந்து விலகிச் செல்லும் மாமனித நடத்தைகள், சமுதாயத்தை ஒட்டச் சுரண்டி அதில் சொகுசுத்தனத்தை அனுபவிக்கின்றது. மனிதர்கள் பரஸ்பரம் ஏற்றத்தாழ்வுகளை கடந்து அங்கீகரித்து தேவைக்கு ஏற்ப நுகர்ந்து வாழும் சமதர்ம சமுதாயத்தை வெறுக்கும் நீட்சே, ஏற்றத் தாழ்வு கொண்ட பாசிச பார்ப்பணிய சமுதாயத்தின் உயர் மனிதர்களின் நலன்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையில் கோருவதிலேயே, அவர் கோட்பாடுகள் உயர்தன்மை பெறுகின்றது.

இதிலிருந்தே உயர் பிரிவுகளின் மாமனிதர் தத்துவத்தை உருவாக்கியதுடன், கிட்லர் போன்ற பாசிச நாசிகளின் உருவாக்கத்தின் கோட்பாட்டாளராக தனித்தன்மை பெற்றார். இதனால் கிட்லர் நீட்சேயின் மார்பளவு படத்தின் அருகில் நின்று போட்டோ எடுத்தது மட்டுமின்றி, அவரின் கையெழுத்துர் பிரதியை வைத்திருந்ததுடன், பாசிசத்தின் தந்தையாகவே நீட்சே மதிக்கப்பட்டார். இதை நீட்சேயே, தனது கோட்பாட்டை ஏற்க்கும் மாமனிதர்கள் உருவாகுவார்கள் என்பதையும் கூறத் தவறவில்லை. கிட்லர் தனது நாசிச பாசிச பிரச்சார மேடைகளில், நீட்சேயின் சில பகுதிகளை கொள்கைப் பிரகடனமாக உரத்த குரலில் அடிக்கடி முன்வைத்து முழங்கவும் தயங்கவில்லை. அந்தளவுக்கு நாசிசத்தின் பாசிசத்தை இது கோட்பாட்டு உள்ளடக்கத்தில் கொண்டிருந்தது. இவன் வாழ்ந்த காலத்தில் தான் மார்க்சியம் அச்சமூகத்தில் நிறுவப்பட்டது மட்டுமின்றி, பல வர்க்கப் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்த கால கட்டமுமாகும். உழைக்கும் மக்களின் அடிப்படை போராட்டத்தில் பங்கு கொள்வதை நீட்சே எப்போதும் வெறுத்தான். ஏற்ற இறக்கம் கொண்ட சமூகமே அவசியம் என்றான். அதற்கு இனவாதத்தை நீட்சே காக்க வெட்கப்படவோ தயங்கவோ இல்லை. அதை அவன் "... போராட்டத்தில் வலிமைமிக்க இனமே வெற்றி பெற்று காரிய சித்தி"[1] அடைய சபதம் கொள்கின்றான். கிட்லர் போன்றவர்களின் இனவாத அடிப்படைக்கு நீட்சே கோட்பாட்டு ரீதியாக ஆசானாக இருப்பதில் வியர்பேதுமில்லை அல்லவா! இந்த இனவாதத்தை இனம் சார்ந்து மேலும் விளக்கும் போது "... ஒவ்வொரு இனமும் தன்னிலும் மேம்பட்டவொரு இனமாக மாறுதலடைந்திருக்கிறது" என்ற இனவாத பாசிச நாசிய ஆய்வு முறைகள் மனித இனம் என்பதை மறுத்து ஆரிய பாசிச நாசிசமாக பரிணமிக்கின்றது. இதை சாதிக்க அவன் "என் சகோதர போரும், யுத்த களமும் தீங்கானவைகளா? இவை தீங்கெனில் இந்த தீங்குகளும் நமக்குத் தேவையானவையே, அழுக்காறும், ஐயப்பாடும், இகழ்ச்சியும் குணங்களுக்கு நடுவே இருப்பது அவசியந் தான். மனிதப் பிறவி என்ற நிலையைக் கடந்த உன்னத இலக்கை அடைய எல்லா இயல்புகளையும் பயன்படுத்திக் கொண்டேயாக வேண்டும்!"[1] என்று நாசிசத்தின் பாசிசத்தை முன்மொழிகின்றார். ஒரு யுத்த வெறியனாக, மனித இனத்தை அடக்கி ஒரு மேம்பட்ட இனமாக வளர்வதற்கு, எல்லா மனித அடக்குமுறைகளையும் அடிப்படையாக கொண்டு, இழிவான எல்லாப் பண்பாடுகளையும் அடிப்படையாக கையாண்டு மாமனிதனாக வேண்டும் என்பதே நீட்சேயின் தலையாய தத்துவமாகும். இதை அவன் மேலும் "போரில் ஈடுபட்டுள்ள என் சகோதரர்களே, உங்களை நான் மனமார நேசிக்கிறேன். நான் எப்போதுமே உங்களோடு இணைந்து வந்திருக்கிறேன்" என்கிறார். அதாவது தந்தைவழி சுரண்டலுக்கான வர்க்க யுத்தத்தில் நீட்சே ஆண்மையாக, மாமனிதத் தன்மையாக, ஆண்களின் வீரத்தை போற்றுகின்றார். இங்கு பெண்களை இதற்கு எதிரிடையாக நிறுத்துவதை நாம் தொடர்ந்து கீழ் ஆராய்கிறேன். இந்த யுத்தத்தை அமைதிக்காக அல்ல தொடர்ந்தும் யுத்த தயாரிப்புக்காக செய்ய வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் நீட்சே அறிவுரை செய்கின்றார். இதையே நாசிகளின் பாசிசத்தை விரிவாக்குவதற்காக கிட்லர் அச்சொட்டாக நீட்செயின் வழியில் நடைமுறைப்படுத்தினான். கிட்லரின் நடைமுறையையே நீட்சே கோட்பாட்டு ரீதியாக வகுத்தளிப்பதைப் பார்ப்போம். "உங்கள் நெஞ்சில் நிரம்பியிருக்கிற கசப்புணர்ச்சியையும் அதிருப்தியையும் நான் அறிவேன். விரோதிகளையே உங்கள் விழிகள் தேடிக் கொண்டிருக்கின்றன. அமைதியை நீங்கள் விரும்புகிறீர்கள். ஏனெனின் அவை புதிய போர்களுக்கான அறிவிப்பல்லவா? நீண்ட கால அமைதியை விட குறுகிய அமைதியைத் தான் நீங்கள் விரும்புவீர்கள். உங்களுக்கு நான் கூறும் அறிவுரை, பணி புரியாதீர்கள் போரிடுங்கள். அமைதியை அல்ல; வெற்றியை வேண்டுங்கள். உங்கள் பணி போராகவும் அமைதி வெற்றியாகவும் இருக்கட்டும்!."[1] என்ற யுத்த பிரகடணத்தை மனித சமூகம் மீது வக்கிரத்துடன் நீட்சே வெளிப்படுத்துகின்றான் மனித அடிமைத்தனத்தை நிறுவுவதும், அதை அடக்கி ஆள்வதுமே என்றென்றும் அமைதியான வெற்றியாக இருக்கட்டும் என்கின்றார். இன்று மூலதனம் போடும் கூத்தை அப்பட்டமாக, இது நாசிய பாசிச சர்வாதிகார வழிகளில் நிறுவக் கோருகின்றது கிட்லருக்கு கோட்பாட்டு அடிப்படையில், இது மாபெரும் தத்துவவியலாகின்றது. இதனால் தான் கிட்லர் நீட்சேயை புகழ்ந்ததுடன், அவன் நாசி பாசிச கோட்பாட்டாளனாக முன்னிறுத்தவும் தவறவில்லை. யுத்தத்தையும், போர் வெறியையும், சமாதானத்தையும் எதிர்ப்பதை பெண்மையின் காரணமாக வருணிக்கக் கூட நீட்சே தயங்கவில்லை. அதை அவன் " 'எது சிறப்பானது - நல்லது?' நீங்கள் கேட்கிறீர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுக்கு நான் கூறும் விடை 'தீரமுடன் இருப்பது தான்' என்பதேயாகும், மென்மையும் அழகுமே சிறப்பானதும் நல்லதுமாகுமென்று சிறிய பெண்கள் சொல்லிக் கொள்ளட்டும். அவர்கள் உங்களை இதயமற்றவர்களாகக் கருதிக் கொள்ளட்டும்; பாதகமில்லை. நீங்கள் அவலட்சணமாகக் காட்சியளிக்கிறீர்களா? நல்லது; அந்த அவலட்சணத்தையே உங்கள் சிறப்பான தனியம்சமாகக் கருதிக் கொள்ளுங்கள். உங்கள் ஆத்மா உயர்வடையும் போது மற்றவர்களை இழிநோக்குடன் அது பார்க்கிறது. அப்போது கொடூரம் உங்கள் சிறப்பான தனி அம்சமாகிறது."[1] இந்த நீட்சேயின் கொடூரமான குரோதத்தை ஏற்றே, பின்நவீனத்துவ தலித்தியல்வாதிகள் தமிழ் வாசகர்களுக்கு முன்மொழிகின்றனர். மற்றவன் உழைப்பை உறுஞ்சி சமுதாயத்தின் பெரும் பகுதியை கொடூரமாக சுரண்டி, வறுமைக்குள் தள்ளிய கொடூரத்தை ரசிக்க கற்றுக் கொடுக்கவும், சமுதாய அவலத்தை இட்டு அலட்டிக் கொள்ளாது வாழ்வதே சிறப்பான தனியம்சமாக கருதிக் கொள்ள வேண்டும் என்ற தத்துவார்த்த அடிப்படை தான், நீட்சேயை பின்நவீனத்துவ தலித்தியல் வழியில் அறிமுகப்படுத்தப்படுகின்றார். இதை எதிர்ப்பது பெண்ணின் குணமாக கருதும் நீட்சே, எவ்வளவுக்கு கொடூரமாக மற்றவனை அடக்கி அதில் பெருமைப்படுகின்றோமோ, அந்தளவுக்கு நீ மனிதனாக மாறுகின்றாய் என்று பிரகடனம் செய்கின்றான். கொடூரத்தை எவ்வளவுக்கு மக்கள் மறுக்கின்றனரோ, அதை எதித்துச் செய்பவன் சிறப்புப் பெற்று தனித்தன்மை பெற்று மாமனிதன் ஆகின்றான். இப்படி கோட்பாடாக முன்வைத்து உபதேசிக்கும் மனித விரோதிகளை, ஏன் பின்நவீனத்துவ தலித்தியல் மற்றும் இலக்கியவாதிகள் தூக்கி முன்னிறுத்துகின்றனர் என்பதை, சுயமாக உங்களால் சிந்தித்துப் பார்க்கும் அளவுக்கு, உங்கள் சமூகக் கண்ணோட்டம் இழிவானதாக சமூகப்பற்று அற்ற கொடூரமானதாக இருப்பதாக கருதியே, இதை மீளமீள முன்கொண்டு வருவதுடன், விவாதிக்கவும், விவாதத்தை கேட்கவும் அழைக்கின்றனர். இந்த நீட்சே தனிச் சொத்துரிமையின் சலுகைகளை பெறுவதே மேன்மை என்பதை நடைமுறை அனுபவத்தில் இருந்து முன்வைக்கின்றார். இதை அவன் "கடைத் தெருவில் பழக்கடைக்காரிகளுங் கூட எனக்கென்று சிறந்த திராட்சைப் பழங்களைத் தேர்ந்தெடுத்துத் தருகிறார்கள். இந்த உவகையை அனுபவிப்பதற்கென்றே ஒருவன் அறிவாளியாகலாமே!"[1] ஆளும் வர்க்கத்தின் பரிசு பெற்று எழுதும் நாய்களின் கோட்பாட்டின் தந்தையாக, இங்கு நீட்சே புளுத்துப் போய் வெளிவருகின்றார். அரசியல்வாதிகளும், அதிகார வர்க்கமும், கலை இலக்கிய தத்துவ கோட்பாட்டாளர்களும், மக்களிடம் இருந்து நேரடியாகவே பரிசுகள், சலுகைகள், லஞ்சங்களைப் பெற்றும், அதே நேரம் உயர் தகுதியை பெற்ற மாமனிதராக மக்களின் உழைப்பை உறுஞ்சி அதில் சொகுசுத்தனத்தை தனக்குத் தானே ஏற்படுத்தியும், ஊழல் மூலமும் வாழும் தனித் தகுதிகளை அனுபவிப்பதில் உள்ள இன்பத்தை, நீட்சேயின் கோட்பாட்டு வழியில் தத்துவ விளக்கம் கொடுத்து பாதுகாக்கின்றது.

இதிலிருந்தே சமுதாயத்தை நேசிப்பதை கோழைத்தனமாக கருதிய நீட்சே யாரை எப்படி நேசித்து, எதையும் எப்படியும் சாதிக்க முனைவதே உயர்ந்த மனிதப் பண்பு என விளக்குகின்றான். அவன் அதை "மற்றவர்களிடம் எச்சரிக்கையாயிரு; நண்பனைத் தவிர யாரையும் நேசிக்காதே; உண்மையாயிரு; வில்லம்புப் பயிற்சியில் தேர்ச்சி பெறு; உன் சங்கற்பத்தை ஈடேற்று; விசுவாசம் ஒரு முனைப்பு ஆகியவற்றுக்காக உன் உதிரத்தையும் பணயம் வை-அபாயகரமான-தீங்கான முறைகளையும் அதற்காக மேற்கொள்"[1] என்கின்றான். நீட்சேயின் தத்துவம் தான், கிட்லரின் நாசிச பாசிச வடிவமாக முகிழ்ந்தெழுந்தது. சமுதாயத்தின் நலன்களை விட தனிமனித நலன்களை உயர்த்தி அதை பாதுகாக்க, எவ்வளவு கீழானதும் தீங்கானதுமான நடத்தையில் ஈடுபட்டும் சாதிப்பதில் தான் உயர்ந்த மனிதத் தன்மை வலிமையில் பிறக்கிறது என்பதே, நீட்சேயின் தத்துவ விரச உரையாகும்.

மேலும் அவன் "வாழ்க்கை ஒரு பேரின்ப ஊற்றுக் கேணி. ஆனால் கீழ்த்தர வர்க்கமும் அந்தக் கிணற்று நீரைப் பருகும் போது அது ஒரு நச்சு நீரூற்றாகிவிடுகிறது! (இதை பார்ப்பணியம் சொல்லவில்லையா?) தாக வெறி பிடித்த தங்கள் பார்வையினாலும் அழுக்கடைந்த கரங்களாலும் அவர்கள் அந்தக் கிணற்று நீரை விஷமாக்கி விடுகிறார்கள். (பார்ப்பணியம் இதை மாசடைந்துவிடுவதாகவும் தீட்டுப்பட்டு விடுவதாகவும் கூறுகின்றது) கணப்புச் சட்டியிலிருந்து எழும் ஜ்வாலையில் குளிர் காய வரும் அந்தக் கீழ்த்தர வர்க்கத்தவர்கள் தங்கள் இருதயங்களைப் போடுவதால் அந்த ஜ்வாலையைக் குரூரமாக்கி விடுகிறார்கள். கீழ்த்தர வர்க்கம் நெருப்பை அணுகுவதால் நமது ஆவியிலும் புகைச்சலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எரிச்சலும் படர்ந்துவிடுகிறது. வாழ்க்கையின் கனிகளை அவர்கள் பறிக்கையில் அவை சத்துக் குறைந்தும், அழுகல் வாடை அடிப்பதாகவும் மாறிப் போகின்றன! அவர்களது நீசப் பார்வை அந்தப் பழமரத்தையே பூச்சரித்தும், வாடி வதங்கியும் போகச் செய்துவிடுகிறது! இப்படிப் பாழாய்ப் போன வாழ்க்கையிலிருந்து திருப்பமடைய விரும்புகிறவன், அதை கீழ்த்தர வர்க்கத்தவர்களிடமிருந்து விலகிக் கொள்ள விழைகிறவனாவான். அவர்களுடன் ஊற்று நீரையும், கணப்புத் தீயையும், கனிகளையும் பகிர்ந்து கொள்வதை அவன் வெறுக்கின்றான். மனித சஞ்சார மற்ற வனாந்திரங்களை நோக்கி விரைந்தோடுகிறான். அப்படி விலகியோடியவன் தான் நான். 'இந்த கீழ்த்தர வர்க்கம் உயிர் வாழ வேண்டியது அவசியந்தானா?.... ஆளுகை புரிகிறவர்கள் பால் என் கவனம் திரும்புகையில் அவாகள் எதை ஆட்சி என்று குறிப்பிடுகிறார்களோ அது இந்தக் கீழ்த்தரமானவர்களிடம் அலைந்து ஆற்றலைக் குறித்து அவர்கள் பேசும் பேரமாகவே எனக்குத் தோன்றுகின்றது! ஒரு வினோதமான மொழி பேசும் மக்களிடையே வாழ்வதாகவே நான் பிரமையுற்று என் செவிகளைப் பொத்திக் கொள்கின்றேன். அவர்களது அலைந்து திரிதலும் ஆற்றலுக்கான பேரம் பேசுதலும் எனக்கு விசித்திரமாகத் தோன்றுகின்றது. கடந்த காலத்திலும், இப்போதும் மூக்கைப் பிடித்துக் கொண்டு நடமாடுகிறேன். ஏனெனின் இந்தக் கீழ்த்தரமானவர்களிடம் இருந்து வீசும் முடை நாற்றத்தை என்னால் சகித்துக் கொள்ள இயலவில்லை! கீழ்த்தர ஆற்றல், கீழ்த்தர ஆவேச அவசரம், கீழ்த்தர இன்பம் ஆகியவற்றின் மத்தியிலிருந்து விடுபட்டு வெளியே வர என் ஆன்மா துடிதுடிக்கிறது.... கீழே அதல பாதாளத்தில் கிடக்கின்ற கீழ்த்தர வர்க்கத்தை நாம் வலிவுடன் தாக்கி, தூசுப் படலமென அதைத் துரத்தியடிப்போம்"[1] என்கிறான் நீட்சே. அடைப்புக் குறியில் எழுதியவை எனது கருத்துகள்.



கீழ்த்தர மக்களாக குறிப்பிட்டு தனது வெறுப்பை வெளிக்காட்டும் மக்கள், சுரண்டலுக்கு அடிமைப்பட்டு உழைத்து வாழும் அடிமட்ட மக்களாவர். அவர்களின் நாற்றத்தை பற்றி குறிப்பிடும் நீட்சே; தாலியத்தினதும், பின் நவீனத்துவத்தினதும் கோட்பாட்டாளராக இருப்பது சாலச் சிறந்ததே. தாழ்த்தப்பட்ட மக்களின் நாற்றம் பற்றி பார்ப்பணியம் எதை வருணிக்கின்றதோ, அதையே அப்படியே, உழைக்கும் பாட்டாளிகளையிட்டு நீட்சே குறிப்பிடுகின்றான். தாழ்த்தப்பட்ட மக்கள் குடிக்கும் நீர், உண்ணும் உணவு, குளிருக்கு காயும் நெருப்பு என அனைத்தையும் வெறுத்து ஒதுக்கும் பார்ப்பணியம், தமிழை "நீசை மொழி" என்ற அதை ஒழித்துக் கட்ட முனைகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களின் மொழிகளை இழிவாக்க, எல்லா முயற்சியிலும் ஈடுபடுகின்றது. இதையே நீட்சே உழைக்கும் மக்களின் மொழியை "விநோத"மானது என்று கொச்சைப்படுத்தி கூறத் தயங்கவில்லை. அத்துடன் உழைக்கும் மக்களின் போராட்டங்கள் தவிர்க்க முடியாமல் ஆட்சியாளர்களின் சலுகைகளை வழங்க நிர்ப்பந்திக்கின்றது. இதைக் கண்டு சினந்து கோபம் கொள்ளும் நீட்சே, இதை வழங்குவதை மறுப்பதே மாமனிதருக்கே உரிய பண்பு என்கின்றார். அதாவது இதற்கு எதிராக சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தி கொடூரத்தை பரிசளித்து இன்பத்தை அனுபவித்து மாமனிதராக திகழ வேண்டும் என்கின்றார். உழைக்கும் மக்களிடம் இருந்து தூர விலகி தனிக்குடியிருப்புகளை அமைத்து வாழ்வதன் மூலம், அவர்களின் நாற்றத்தில் இருந்தும், நீசப் பார்வையில் இருந்தும், அவர்களின் சுவாசத்தில் இருந்தும் விலகி வாழ்வது, மாமனிதனுக்குரிய உயர் பண்பு என்கின்றான். பார்ப்பணியம் முதல் உலகமயமாதலின் தந்தைகள் அனைவரும் இப்படி வாழ்வதுடன், மக்களிடம் தமது மிதமிஞ்சிய நுகர்வின் கழிவுகளை பகிர்ந்து கொள்வதைக் கூட இழிவாக கருதி, அவற்றை அழிப்பதில் ரசித்து தமது கொடூரத்தையிட்டு இன்புறுகின்றனர். "இந்த கீழ்த்தர வர்க்கம் உயிர் வாழ வேண்டியது அவசியந்தானா?" என்று நீட்சே கேட்கும் போது, இதன் பின் வெளிப்படும் மனித விரோத கண்ணோட்டம், எவ்வளவு இழிவானது மாமனித வக்கிரத்தை தவிர வேறு எதுவுமில்லை. நாசிய பாசிசத்துக்கு தலைமை தாங்கிய கிட்லர், இதையே எந்தவிதமான மறுப்புமின்றி செய்யும் அளவுக்கு, நீட்சே கோட்பாட்டு தந்தையாக இருந்தான்.

சமுதாயத்தின் விடுதலையை அடிப்படையாக கொண்டு போராடும் போது, அது கோழைக்குரிய செயல் என்கின்றான் நீட்சே. சமுதாய நலனையொட்டி பேசும் மனிதர்களையிட்டு வெறுப்புற்ற நீட்சே "சமத்துவம் பற்றிப் போதிக்கிறவர்களெல்லாரும் இத்தகைய விஷச் சிலந்திகளே! இரகசியமாய் வஞ்சந் தீர்த்துக் கொள்கின்ற சிலந்திகள் தான் அவர்கள்! அவர்களது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறைவிடங்களை உங்களுக்குக் காட்டுவேன்.
விஷச் சிலந்திகளே! உங்கள் மறைவிடங்களை வெளிக் கொணர்ந்து உங்களை நோக்கி நான் இடிஇடியெனச் சிரிப்பேன். உங்களைக் கிழித்தெறிந்து உங்கள் பொய்களை அம்பலமாக்குவேன். 'நீதி, நேர்மை' என்ற உங்கள் வாசகங்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டிருக்கிற வஞ்சகத்தைப் பிதுக்கியெடுப்பேன். ஏனெனின் மனிதன் வஞ்சகப் பழித்தீர்ப்பிலிருந்து (அதாவது ஒடுக்கும் வர்க்கத்தை அனைத்து தளத்திலும் ஒடுக்கப்பட்ட வர்க்கம் வஞ்சகம் தீர்ப்பதை குறித்தே, நீட்சே இதைக் குறிப்பிடுகின்றார்.) தன்னை விடுவித்துக் கொண்டாக வேண்டும். உயர்ந்த இலக்கை அடைவதன் பொருட்டுக் கடக்க வேண்டிய பாவந் தான் அந்த விடுவிப்பு!
இந்த விஷச் சிலந்திகளை நாம் அழிக்கவில்லையேல் அவை நம்மை அழித்துவிடும்! நமது வஞ்சகச் சூறாவளி இந்த உலகைச் சூழ்ந்து கொள்ளட்டும். நம்மைப் போன்றிராதவர்களுக்கெதிராக வஞ்சகத்தை நாம் அவிழ்த்து விடுவோம். இனி, சமத்துவத்திற்கான சங்கற்பமே சாலச் சிறந்த குண நலனாகக் கருதப்படட்டும். என்று அந்த விஷச் சிலந்திகள் கூறிக் கொள்ளும்!
சமத்துவத்தைப் போதிக்கும் விஷச் சிலந்திகளே! நீங்கள் கோஷிக்கும் 'சமத்துவம்' என்ற வாசகத்தின் பின்னால் அனைத்தையும் நசுக்கிக் காலடியில் போட்டுக் கொள்ள வேண்டுமென்ற உங்கள் அந்தரங்கமான ஆசை ஒளிந்திருப்பதை நானறிவேன். அதிருப்தியும் கசப்புணர்ச்சியும் தோற்றுவித்த வஞ்சகமே உங்கள் சித்தாந்தம்.
அந்த விஷச் சிலந்திகளின் நீதி சமத்துவமாகும். ஆனால் என் நீதியோ, 'மனிதர்கள் சமமானவர்களல்ல' என்பதாகும். இதற்கு மாறுபாடாக நான் கருதுவேனாகில் அப்புறம் மகா மனிதனின் தோற்றத்தில் எனக்குள்ள ஆர்வமும், ஆசையும் என்னாவது?
போரும் சமத்துவமின்மையுமாகவும் எப்போதும் மனித இனம் திகழவேண்டும். நன்மை, தீமை, வளமை, வறுமை, உயர்வு, தாழ்வு ஆகிய ஆயுதங்களுடன் ஒருவருக்கொருவர் பெரும் போராட்டம் நிகழ்த்திக் கொண்டிருக்க வேண்டும்! அப்போது தான் வல்லமை பொருந்திய பகுதி மேலேமேலே உயர்ந்து தன்னைத் தானே கடந்த பரிணாம வளர்ச்சியில் ஒரு புதிய இனத் தோற்றத்தை அடையும்! இந்தப் பரிணாம வளர்ச்சியும் இன மாற்றமும் உயிர் வாழ்க்கைக்கு மிகமிக அவசியம்!"[1] என்கிறான் சமுதாய பிளவை வேரூன்றி வளர்க்க விரும்பும் நீட்சே. மனிதப் பிளவே மாமனிதருக்கான மூலம் என்கின்றார். சமுதாய பிளவில் ஒருவனை மிதித்து எழுவதே மாமனித தர்மம் என்கின்றான். மனித நிற, இனம், சாதி, வர்க்கம், பால் என அனைத்துப் பிளவும், மனித இனத்துக்கு அவசியமானது, நிபந்தனையானது, இயற்கையானது என்று நீட்சே பிரகடனம் செய்யும் போதே, மனித விரோதமும், குரோதமும் பீறிடுகின்றது. இதை மாற்றக் கோருவதை எதிர்த்து, ஈவிரக்கமின்றி அழிக்க வேண்டும் என்கிறான். நாசிசத்தின் பாசிசம் இங்கு தான் ஊற்றெடுக்கின்றது. தமிழில் நீட்சேயை அரங்கேற்றம் செய்பவர்களும், இதன் வேர்களை தமது அரசியல் உள்ளடக்கத்தில் கொண்டிருப்பதால், இவர்களின் தத்துவார்த்த குருவாகவும், தந்தையாகவும் இருப்பது இயற்கையாகிவிடுகின்றது. சமுதாய ஏற்றத் தாழ்வுகளை சமதர்மம் ஒழிக்க போராடும் போராட்டத்தை கண்டு, அதை அழிக்க வேண்டும் என நீட்சே பிரகடனம் செய்கின்றார். இதில் தவறின் அவர்கள் எம்மை அதாவது அனைத்து மாமனித சுகபோகங்களையும் அழித்துவிடுவார்கள் என்று நீட்சே அச்சத்துடன் புலம்புகின்றான். மாமனிதர்கள் சமுதாயப் பிளவில், அதன் மேலான அடக்கு முறைகளில் உருவாக்கப்படுகின்றார்கள் என்பதை பிரகடனம் செய்யும் நீட்சே, இதை தடுக்க முனையும் சமதர்மக் கோட்பாடுகளை வெறுப்பது இயல்பாகின்றது. உலகமயமாதலின் கோட்பாட்டாளனை தூக்கி நிறுத்தும் பின்நவீனத்துவ தலித்தியல் வாதிகள், சமுதாய அடிமைத்தனத்தை நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதைத் தான், நீட்சே ஊடாக பிரகடனம் செய்கின்றனர். நீட்சே மனித அடிமைத்தனத்தை நிலை நிறுத்த, அதை இயற்கையின் சின்னமாக, வலிமையின் அடிப்படையாக கூறுவதைப் பார்ப்போம்.



"... பலவீன இனம் தன்னைவிட வலிமை பொருந்திய இனத்திற்குப் பணிந்து பணிபுரிய வேண்டும் என்பதே இயற்கையின் விதியாக இருக்கிறது. பலவீனமான இனம் தன்னைக் காட்டிலும் பலவீனமான இனத்தைத் தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளுகின்றது. வலிமைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறைவுள்ள இனம் தன்னிலும் வலிமை மிக்க இனத்திற்கு அடிபணிகையில், தன்னிலும் வலிமை குன்றிய இனத்தை அடக்குவதில் இன்பம் காண்கின்றது! வல்லமை மிக்க இனம் தன்னைத் தானே பணிந்து கொள்கிறது. அதன் நோக்கம் ஆற்றலை மேலும் பெறுவதாகும். அதைத் தான் தன்னைத் தானே கடத்தல் அதாவது சுய மீறல் என்று குறிப்பிடுகிறேன். இந்தச் சுயமீறலின் விளைவாகத் தான் வலிமை மிக்க இனம் தன்னிலும் வலிமை மிக்கதோர் இனத்தைப் படைக்கிறது. இது ஓர் ஆபத்தான விளையாட்டு! இந்த ஆபத்தான விளையாட்டை வலிமை மிக்க இனம் மேற்கொள்வது தன்னைத் தானே நிலை நிறுத்திக் கொள்ள அல்ல: தன்னிலிருந்து தன்னைக் காட்டிலும் வல்லமை பொருந்திய இனத்தைத் தோற்றுவிக்கத் தான்! வலிமை மிக்க இனம் தன்னைத் தானே சர்வ பரித்தியாகம் புரிவது நிலைபெறுவதற்கான சங்கற்பத்திற்காக அல்ல; ஆகவே அதன் சுயமீறல் வல்லமைக்கான சங்கற்பமேயாகும்."[1] இனம் முதல் அனைத்து அடிமைத்தனத்தை நியாயப்படுத்தும் நாசிய பாசிசத்தை பார்ப்பணிய கோட்பாடாக்கின்றது. எல்லாவிதமான மனித அடிமைத்தனத்தையும் நியாயப்படுத்தும் இந்த விளக்கவுரை, எல்லாவிதமான அடக்குமுறைக்கும் மகுடம் சூட்டுகின்றது. வலிமை என்ற பெயரில் அடக்குமுறையை நியாயப்படுத்தும் இக் கோட்பாடுகள், மாமனிதர்களின் உருவாக்கத்தை உள்ளடக்குவதாக நீட்சே போற்றுகின்றார். ஒரு இனம் மற்றைய இனத்தை அடக்குவது வலிமையின் ஊடாக மாமனித இனத்தை தோற்றுவிக்கத் தான் என்கிறான். ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்குவது சுரண்டலையும், சூறையாடலையும் விரிவாக நடத்துவதன் மூலம், தனது சுரண்டும் வர்க்க நலன்களை பாதுகாக்கத் தான். இதை நீட்சே திட்டமிட்டு மூடி மறைத்து அதை பாதுகாக்க, வலிமையின் பின் உயர் மனிதர்களை, அதாவது விலங்கு மனிதனில் இருந்து மனிதனை உருவாக்க என்று கூறி அடக்குமுறைக்கு கம்பளம் விரிக்கின்றார். இங்கு மனிதத்தின் மனிதப் பண்புகளை மறுத்து குறுகிய நலன்களை உள்ளடக்கிய வகையில் சூறையாடும் இழிந்த மனித விரோதிகளே, இங்கு மாமனிதராக இருக்கின்றனர். இதை டார்வினை திரித்தே நீட்சே நியாயப்படுத்த தவறவில்லை.

அதை அவர் "டார்வினின் கூற்றுப் படி வாழ்க்கைப் போராட்டத்தின் அடிப்படையில் தான் உயிரினங்களின் வளர்ச்சி நிகழ்கிறதென்றால், அந்தப் போராட்டத்தில் அடையும் வெற்றிக்கு அடிப்படை, வலிமையாகும். எனவே வலிமை தான் முடிவான அறம். அதுவே நல்லது, நியாயமானதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதுமாகும்."[1] என்றார் நீட்சே. வலிமையே உண்மை, நீதி என்று போற்றி அதைக் கொண்டே மனிதனின் அடிமைத்தனத்தை நியாயப்படுத்துகின்றார். வாழ்க்கைப் போராட்டத்தில் அதாவது உயிர் வாழும் போராட்டத்தில் உயிரினங்கள் தற்காப்பிலும், உணவுத் தேடலிலுமே எப்போதும் வன்முறையை கையாளுகின்றது. இந்த போராட்டத்தில் என்றுமே மற்றவன் உழைப்பை, தான் உழையாது (போராட்டமின்றி) உறிஞ்சுவதில்லை. அத்துடன் தேவைக்கு உட்பட்டே இதை நுகர்கின்றது. ஆனால் மனிதன் அப்படியல்ல. மனித அடிமைத்தனம் மற்றவன் உழைப்பை உறிஞ்சியதில் இருந்தே, உபரியை உற்பத்தி செய்தலில் இருந்தே உருவானது. வலிமை என்பது எந்த மனிதனுக்கும் ஒரு சீராக இருப்பதில்லை. குழந்தை முதல் வயோதிபர் வரையான வாழ்வில் வலிமை தான் அதன் போக்காகவும், தனிமனித உணர்வாகவும் உயிரியல் அடிப்படை விதியாகவும் இருந்தால், பிறந்தவுடனேயே இறந்து போக வேண்டும். சமூக உணர்வு தான் குழந்தையை பராமரிப்பது முதல் வயோதிபர் நலன்களைக் கூட பேணுகின்றது. சமூகம் என்பது தொடர்ச்சியான இயங்கியல் மாற்றத்துக்குள்ளாகியபடி தொடருகின்றது. இங்கு ஒவ்வொரு தனிமனிதனும் ஆக்கத்தையும் அழிவையும், தனது வலிமை முதல் அனைத்திலும் கொண்டே உயிர்த்தொகுதி அமைந்திருக்கின்றது. இயற்கை மற்றும் செயற்கையான மனித செயற்பாடுகளில் ஏற்படும் ஒவ்வொரு நடத்தைகளும் வலிமை மட்டுமின்றி அனைத்தையும் மாற்றுகின்றது. எதுவும் நிலையானவையல்ல. நிலையாக காணப்படுவது புலனறிவுக்குட்பட முடியாத வகையில் பண்பியல் மாற்றத்தை பிரதிபலிக்கத் தவறுபவை, எப்போதும் குறித்த நிபந்தனைக்குட்பட்ட கால இடைவெளிக்குள் மட்டும் நீடிக்கின்றன. வலிமை என்பது நிபந்தனைக்குட்பட்டது. அது சூழல், பண்பாடு, காலம், பயிற்சி, உபரியின் அளவு, உழைப்பின் தன்மை என்று நீண்ட பல விடயத்துடன் தொடர்புடையது. இது நீண்ட பல ஆயிரம் வருடங்கள் சந்தித்த பல மாற்றங்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. மனிதத்தின் மூலம் வலிமை என்பதும், உயிர் வாழ்தலின் நிபந்தனை வலிமை சார்ந்தது என்றால், வலிமையற்ற எத்தனை உயிர்த்தொகுதிகள் உயிர்வாழ்தலை நிறுத்திவிடவில்லை. வலிமையான மாமிச உண்ணிகளைவிட, வலிமை குறைந்த தாவர உண்ணிகள் உலகில் அதிகமாக கூட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டமாக வாழ்வது வலிமையின் கோட்பாட்டையே தகர்க்கின்றது. வலிமையான தாவர உண்ணிகளை விட, வலிமை குறைந்த தாவர உண்ணிகள் அதிகமாகவும் அதிக அடர்த்தியாகவும் உயிர் வாழ்வது யதார்த்த இயற்கையாகும் இது வலிமைத் தத்துவத்தையே உயிரியல் விதியில் தகர்க்கின்றது. அமெரிக்க ஏகாதிபத்திய வலிமையையிட்டோ, கிட்லரின் வலிமையான பாசிச நாசிச ஆக்கிரமிப்புகளையிட்டோ, உலக மக்கள் அடங்கிப் போய்விடுவதில்லை. மாறாக எதிர்த்து போராடுவதே இயங்கியலாக இயற்கையாகின்றது. அதில் வெற்றி பெறுவதே எப்போதும் மனித சமூகப் பண்பாடாக உள்ளது. வலிமை என்பது மனிதத்தை முன்னேற்றியது, முன்னேற்றுகின்றது என்பது ஆதாரமற்ற வெற்றுச் சொற்தொடர் ஊடாக, உலக அடக்குமுறைகளை கோட்பாட்டு ரீதியாக நியாயப்படுத்தி விளக்குவதற்கு அப்பால், எதையும் சமுதாய விடுதலைக்கு தந்துவிடுவதில்லை. மனிதனின் கூட்டு வாழ்வே, மனித இனத்தை பூமியில் பாதுகாத்தது. காட்டுமிராண்டி சமூகங்கள் அதாவது மனிதக் குரங்கில் இருந்து மனிதன் உருவான வரலாற்றில் மனித சமூகக் கூட்டு இல்லை என்றால் அதாவது வலிமையால் மற்றவை அடக்கி மாமனிதனாகியிருந்தால், இன்றைய மனிதனும் இல்லை. கூட்டான மனித நடத்தைகள் சொந்த மக்கள் கூட்டத்தை பாதுகாக்கும் போராட்டத்தை நிறைவு செய்தன. மற்றறைய விலங்குத் தொகுதிகளுடன் நடத்திய போராட்டத்தில், தன்னை தற்பாதுகாத்து கொள்ளவும் தனது தேவையை பூர்த்தி செய்யவும் மனித கண்டுபிடிப்புகள் வலிமையில் கிடைக்கவில்லை. பொருட்களை ஆராய்ந்து அதை பயன்படுத்தி தனது உணவுத் தேவையை பூர்த்தி செய்யவும், தற்காப்பை பலப்படுத்தவும் பொருட்கள் மீதான அறிவும், அதை மாற்றி அமைத்து பயன்படுத்திய போதே, மனிதன் முன்னேற்றம் சாதிக்கப்பட்டது. இது வலிமையில் அல்ல. வலிமை என்பது பல ஆயிரம் செயல்களில் ஒரு அங்கம் மட்டுமே என்பதும், குறித்த சில கணங்களில் மட்டும் மாறிமாறி முதன்மையாக இருப்பது வெள்ளிடை மலையாகும்.

இதை மறுக்கின்ற நீட்சே "வாழ்க்கைப் போரில் வெற்றியுடன் மீண்டெழுந்து நிலைப்பதற்கு உதவி புரிவது, மென்மையல்ல மூர்க்கத்தனமான வலிமை தான். அமெரிக்கையோ, அடக்கமோ அல்ல; செருக்கு தலைநிமிர்ந்தம். பரிவோ, பெருந்தன்மையோ, பொதுநலப் போக்கோ அதற்குப் பயன்படாது. சமத்துவமும், பெரும்பான்மை அபிப்பிராயமும் (ஜனநாயகம்) சரிப்படாது. திண்மையான அறிவும், தீவிரப் போக்கும், திரண்ட வலிமையும், ஈவு, இரக்கம், தயை தாட்சண்யம் பாராது செயலாற்றும் தன்மையும் தான் அதற்குத் துணைபுரியக் கூடும் ஆகவே, வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்வியைக் கொடுத்து அழிவைத் தேடித் தருகிற மென்மையான நடத்தையும், மிதமான போக்கும், அடக்கமும் அமெரிக்கையும் பரிவும், பண்பும், பெருந்தன்மையும் பொது நலநோக்கும், சமத்துவமும் ஜனநாயக ஏற்பாடும் வெறுக்கத் தக்கவை விலக்கத் தக்கவை, அவை தீங்கானவை தேவையற்றவை; பலீனத்திற்கு அடிகோலுபவை"[1] என்கிறார் நீட்சே. சமூக நடத்தைகளை வெறுத்தொதுக்கும் நீட்சேயை, தனிமனித நடத்தைகளை சமூகத்தின் மேல் நிறுத்தி மாமனிதராக்கிய சமூக விரோதியை, பின்நவீனத்துவ தலித்தியல்வாதிகள் சமூக விடுதலையை பெற்றுத் தரும் தத்துவம் படைத்தார் என்கின்றனர். மனிதத் தன்மை கொண்ட இலக்கியம் படைத்தார் என்று கதை கூறுகின்றனர். மனிதர்களின் ஜனநாயகத்தை அடிப்படையாக கொண்ட பெரும்பான்மை முடிவுகளை வெறுக்கும் நீட்சே போன்றவர்கள், பாசிசத்தின் கோட்பாட்டாளராக இதன் ஊடாகவே இருக்கின்றனர். சாதி வன்முறைகளால் சிதைந்து பரிதாபமாக இறந்து போகும் தாழ்த்தப்பட்ட மக்களையிட்டோ, நாசிய வன்முறையால் இறந்துபட்ட யூத மக்களையிட்டோ, புலிகளால் வெளியேற்றப்பட்டு அனாதைகளான முஸ்லிம் மக்களையிட்டோ, தமிழன் என்ற எதோ ஒரு அடையாளம் கொண்டு தாக்கப்படும் ஒருவனையிட்டோ, கறுப்பன் என்பதால் ஒதுக்கும் மேற்கு இனவாதத்தையிட்டோ, ஆணாதிக்கத்தால் துன்பத்தை சந்திக்கும் பெண்ணையிட்டோ குறைந்தபட்சம் அனுதாபப்படவோ, பரிவு காட்டவோ, இரக்கம் கட்டவோ கூடாது என்பது நீட்சேயின் அடிப்படைக் கோட்பாடாகும். இதைக் கண்டு சிரிப்பவன், அந்த மக்களை அடக்கி கொடூரம் புரிபவன், மக்களை இழிவு செய்பவனே மாமனிதன் என்கின்றனர். அதாவது சர்வாதிகார ஆட்சியை அமைத்து கொடூரமாக சுரண்டுபவன், தனது திமிர் பிடித்த ஆணாதிக்க அதிகாரத்தை நிலை நாட்டி, சாதி ரீதியாகவும், இன மத நிற ரீதியாகவும் யாரெல்லாம் மற்றவனை அடக்கியாளும் வலிமை உள்ளவனாக இருக்கின்றனோ, அவனேயே நீட்சேயின் கோட்பாடு மாமனிதர்கள் என்று பிரகடனம் செய்கின்றது. ஈவு இரக்கமற்ற கொடூரமான பண்பு புகழ்ச்சிக்குரிய மனிதப் பண்பு என்கிறார். இதுவே இயற்கையென்றும், பரிணாமம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் நீட்சே கூறத் தவறவில்லை. "பொருதுவது வெற்றி பெறுவதும், நிலைத்து நின்று அனைத்தையும் ஆட்கொள்வதும் தான் தர்மம்"[1] என்றான் நீட்சே. சமுதாயத்தினை அடக்கி அடிமைப்படுத்தி அதை நிலைநிறுத்தும் கோட்பாடே தர்மம் என்கின்றார். பார்ப்பானியம் மற்றறைய சாதிகள் மேல் நிலைத்து நின்று ஆட்கொண்டுள்ள அடக்குமுறையைத் தான் தர்மம் என்கின்றார். தமிழில் நீட்சேக்கு காவடி எடுத்து அறிமுகம் செய்பவன் பின்னுள்ள அற்பத்தனங்கள், ஆள்பவனையும் பார்ப்பனச் சித்தாந்தத்தையும் கோட்பாட்டு ரீதியாக பாதுகாப்பதே, அவர்களின் உள்ளர்ந்த நோக்கமாகும். இதை விடுதலையின் பெயரால், அறிவுத் தேடலின் பெயரால் எல்லாவிதமான கேள்விகள் மற்றும் சொல்லடுக்குக்கு பின்னால் சாதிக்க நினைப்பது ஆளும் வர்க்கங்களின் வலிமையான அடக்குமுறை சர்வாதிகார ஆட்சியைத் தான். இதையே அ. மார்க்ஸ் "ஏன் நமக்கு நீட்சே"[4] என்ற கட்டுரையில் "...தத்துவத்தின் பணி என்பது இருக்கும் அறிவு நிலையைக் கேள்வி கேட்பது, பிரச்சனைப்படுத்துவது என்பது தான். பதில்கள் முக்கியமில்லை"[4] என்று தனது நோக்கத்தை வெளிப்படுத்துகின்றார். கேள்வி கேட்டுவிடுவதால் என்ன நடந்து விடும். மாற்றத்தை யார் செய்வது? அதற்கு பாமர மக்கள் தான் லாயக்கோ? இருக்கும் அறிவு செயல் இன்றி மாற்றம் நிகழ்வதில்லை. பதில் இன்றி மாறிவிடுவதில்லை. இது எல்லா விடயத்திலும் யதார்த்தமான பொது உண்மையாகும் ஆனால் இதை மறப்பவர்கள் உண்மையில் இருக்கும் அறிவையும், செயலையும் பாதுகாக்க செயலை நிராகரித்து பதிலை மறுக்கின்றனர். ஆனால் இவர்கள் நடைமுறையில் சொந்தத் தேவை மற்றும் வர்க்க நலன் வாழ்வில் கேள்விக்கு பதில் செயலையும், பதிலையும் கொண்டு வாழ்வதே இங்கு முரண் நிலையாகும். இவை இரண்டையும் வாழ்வில் செய்யாதவன் பைத்தியக்காரன் மட்டும் தான்.

நீட்சே தனது சொந்த வாழ்வில் தனது மாமனிதக் கொள்கை வழியில், ஜேர்மனியில் காட்டுமிராண்டி ஆட்சியை நடத்திய பிஸ்மார்கின் விஸ்தரிப்புவாதத்தை அடிப்படையாக கொண்டு நடத்திய பல பலாத்கார யுத்தத்தில், தானகவே முன்வந்து பங்களித்தான். அதை அவன் "தான் பார்த்துக் கொண்டிருக்கிற போதே- தன் கண்களுக்கு எதிரிலேயே எத்தகைய அற்புதமானதொரு சாதனையைத் தன் வலிமையால் அனாயாசமாகச் செய்து காட்டிவிட்டான், இந்த பிஸ்மார்க்!"[1] என்றதுடன் "குழப்பத்தையும் கோளாற்றையும் நிவர்த்திக்க இதனைக் காட்டிலும் எளிதான மார்க்கம் எதுவும் இருக்க முடியாது"[1] என்றான். வர்க்கப் போராட்டத்தில் தனது அதிகார திமிர் கொண்ட சுரண்டும் வக்கிரத்தை இப்படித் தான் நீட்சேயால் ஏற்றுக் கொண்டு வருணிக்க முடிந்தது. எந்தவிதமான கூச்சமும் இன்றி ஆளும் வர்க்கத்தின் முண்டு கோல்களாக பாட்டாளி வர்க்கத்தை எதிர்த்து நின்ற நீட்சேயை, தமிழில் அறிமுகம் செய்யும் சொறி நாய்களின் நோக்கமும் கனவும், பாட்டாளி வர்க்கத்தை கோட்பாட்டிலும் நடைமுறையிலும் இல்லாது ஒழிக்க, நீட்சேயை முன்னிறுத்துவது அவசியமாகின்றது. ஜேர்மானிய ஆக்கிரமிப்பை அவன் "வாழ்க்கைக்கான ஏகாக்கிர சித்தம் அழிந்துவிடாமல் நிலைப்பதற்காகப் புரியும் போராட்டத்திற்கானது மட்டுமல்ல; அந்த ஏகச்சித்தம் மாபெரும் யுத்தத்தின் பொருட்டும், மகத்தான வலிமையின் பொருட்டும், உன்னத சக்தியின் பொருட்டுமே தேவைப்படுகிறது"[1] என்றான். வலிமையின் பொருட்டு எதையும் அழிக்கவும், ஆதிக்கத்தை நிலைநாட்டவும் நீட்சே கோட்பாட்டின் பின்னால் தமிழில் மறைமுகமாக களம் இறங்குகின்றனர். பார்ப்பணியம் இந்து சாம்ராச்சிய கனவு வலிமையில் முஸ்லிம் மக்களையும், பார்ப்பனிய சாதி வலிமையில் தாழ் சாதிகளையும், இந்தி மற்றும் சமஸ்கிருத ஆட்சி அதிகார மொழி வலிமையில் தமிழ் மற்றும் மொழிகளையும் வலிமையின் பின்னால், உன்னத சக்தியின் பொருட்டும் அடக்கி அடிமைப்படுத்தி அழிக்க நீட்சேயை துணைக்கு அழைத்து வருகின்றனர்.

வர்க்க சமரசத்தை, அமைதியான அடங்கிப் போகின்ற, அடக்குமுறையை ஏற்றுக் கொள்கின்ற வகையில் கோட்பாட்டு விளக்கத்தையே நீட்சே முன்வைக்கின்றார். "நாம் இயல்பாகவே நம்முடைய அவஸ்தைகளைச் சார்ந்த அவற்றிற்கே முக்கியத்துவமளிப்பதால் நம்மைச் சார்ந்து நிற்கும் அவஸ்தை நமக்கு நேர் நிலையாக அமைகிறது. நம்மை விட்டு விலகி நிற்கின்ற-நம்மால் கவனிக்கப்படாத நிறைவேறிய விருப்பங்களால் தோற்றுவிக்கப்படுகின்ற மகிழ்வு நமக்கு எதிர்மறையாக நிற்கின்றது. எல்லாம் வல்ல ஏக சித்தத்தின் கிரியையால் இவையிரண்டும் இணைந்து ஆத்ம திருப்தியான இன்பமாக பரிணமிக்கிறது."[1] என்கிறார். பார்ப்பணிய உபநிமிடத்தை ஏற்றுக் கொள்ளும் நீட்சே, பார்ப்பணிய பாணியில் முன்மொழிகின்றார். இன்பமும் துன்பமும், கிடைப்பதும் கிடையாமையும், நிறைவேறியதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறைவேறாததும் என்று நீடிக்கின்ற உணர்வுகள் எகசித்தத்தால் இன்பமாக பரிணமிக்கின்றது என்கின்றார். வறுமையை அனுபவிக்கும் மனிதன் எப்படி எதை சித்தமாக கொண்டு இன்பமாக இருக்க முடியும். இன்பம், துன்பம் வர்க்க சமுதாயத்தின் கொடையல்லவா! இன்பமாக இருப்பவன் துன்பப்பட்டவனை உதைத்தபடி தான் அதைச் சாதிக்கின்றான். ஆத்ம் திருப்தியான இன்பம் இருப்பதாக கூறும் நீட்சே, துன்பம் எதன் ஆத்ம சித்தமாக இருக்கின்றது என்பதை பேசுவதே அநாகரிகமாகப்படுகின்றது. கீழ் நிலை மக்கள் அனுபவிக்கும் துன்பத்தை பற்றி பேசுவதை விட, அவர்கள் உயிர் வாழ்வது அவசியமா என்பதே நீட்சேயின் தலையாய கோட்பாடாகும். அத்துடன் வலிமையற்ற பிரிவுகள் உயிர் வாழத் தான் வேண்டுமா? என்று கேட்டு அவர்களை சமூக விரோதிகள் என்கின்றார். இதுபோன்று நோயாளி குறித்து நீட்சே "நோயாளி என்பவன் சமுதாயத்தின் ஒரு புல்லுருவி" என்று கிட்லருக்கே கோட்பாட்டு தளம் அமைத்து கொடுத்த ஒரு கொடுங்கோலளாவான். 60 லட்சம் யூதர்களின் படுகொலை முதல் சமுதாயத்தை அங்கவீனமாக்கி கிட்லர் கொன்று குவித்தது தற்செயலாக அல்ல. நீட்சே போன்ற தத்துவவியலாளர்களின் கோட்பாட்டின் துணையில் என்றால் மிகையாகாது.

நீட்சேயின் முக்கிய துணையாகவும், ஆலோசகராகவும் இருந்த சகோதரி எலிஸபெத் நாசிக் கட்சியின் முன்னணி நபராக இருந்தார். இவள் நாசிக் கட்சியின் முக்கிய உறுப்பினரான பெர்னார்டு பார்ஸ்டரையே திருமணம் செய்து, நேரடி யூத எதிர்ப்பிலும் வன்முறைகளிலும் பங்கேற்றவள். நீட்சே காதலித்த இரண்டாவது பெண் லோவு யூத இனத்தைச் சேர்ந்தவள் என்பதால் திருமணம் செய்வதை கைவிட்டு, நாசிகளுக்கு சார்பாக நடைமுறையில் வாழ்ந்தார். பின்னால் பெண் இனத்தையே தூற்றுவதில் இன்புற்றதுடன் தனது வக்கிரத்தை வெளிப்படுத்தியவன்.

பின்நவீனத்துவ, தலித்தியலை முன்னிறுத்தும் நீட்சே, பெண்களை கேவலமான ஆணாதிக்க வலிமையின் வழிகளில் தூற்றி அடக்கி ஆளவும், கோரவும் பின்நிற்கவில்லை. "பெண்களுக்கு உரிமை அளிப்பதானது பெண்மைக்கே உலை வைப்பதாகும். பெண்களின் பொறுப்பு தன் கணவன்மார்களை மகிழ்விப்பதும் அவர்களுக்குப் பிள்ளை பெற்றுக் கொடுப்பதுதான்."[1] என்கிறான் ஆணாதிக்க நீட்சே. இந்த நயவஞ்சகமான வலிமையான ஆணாதிக்கவாதியான மாமனிதன் நீட்சே, பெண்களிடம் செல்லும் போது "பெண்களிடம் போகிறீர்களா? உங்கள் சாட்டையை மறந்து விடாதீர்கள்!"[1] என்கிறான். அதாவது பெண்களை அடிக்கத் தவறாதீர்கள் என பார்ப்பான் மனுவின் அதே உபதேசத்தையே முன்வைக்கின்றார். மனுவின் பார்ப்பனிய ஒழுக்கம் சார்ந்த சமுதாயம் பற்றிய நூலை, இந்த பாசிச நாசி குறிப்பிடும் போது "உயர்குடிமக்கள், தத்துவியலாளர்கள், வீரர்கள் ஆகியோர் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பளித்து வழிகாட்டுபவலராக உள்ளனர். உயரிய நலன்கள் அதில் நிறைந்துள்ளன, வாழ்வுக்கு இணக்கம் தெரிவிக்கும் ஒரு முழுமையுள்ளது என்ற உணர்வு நிரம்பியது. இதற்காக மட்டுமல்லாமல் வாழ்வின் நலன்களுக்குரிய வெற்றியுணர்வு நிரம்பியது, நூல் முழுமைக்கும் சுடரொளிர்கின்றது."[2] என்று மனுவின் மனு சாத்திரத்தை நீட்சே மெச்சுகின்றார். மனுவின் சமுதாய விளக்கவுரைகள் பார்ப்பனியம் சார்ந்த உயர் குடிகளின் நலன்களை உள்ளடக்கியதால், நீட்சே அவரின் பக்தர் ஆகின்றார். இதை நீட்சேயைக் கொண்டு வரும் தமிழ் பின்நவீனத்துவ தலித்தியல்வாதிகளின் நோக்கம் பார்ப்பனியத்தை கீழிருந்து நிறுவுவது என்பதே, இதன் அடிப்படையான உள்ளடக்கமாகும். நீட்சே மனுவின் நூல் பற்றி குறிப்பிடும் போது "மக்களைப் பெறுதல், மகளிர், திருமணம் ஆகியவற்றைப் பற்றிய கிறிஸ்தவத்தில் ஆழம் காண முடியாத ஆபாசப் புகைமூட்டமாக கூறப்பட்டிருப்பவை இந்த நூலில் வாழ்க்கை விருப்போடும், கனிவோடும், நம்பிக்கையுடனும் கூறப்பட்டுள்ளது. மணமாகாத ஆண், பெண் கலவியைத் தவிர்ப்பதற்கு, அவனவன் தனக்கு மனைவியைப் பெற்றிருப்பனாக, பெண்டிர் யாவரும் தத்தமக்குரிய கணவரைப் பெற்றிருப்பாராக... எரிக்கப்படுவதை விட திருமணம் செய்து கொள்வது மேலானது என்றுரைக்கும் இழிந்ததொரு புத்தகத்தை குழந்தைகளும், பெண்களும் படிப்பதற்குரிய வாய்ப்பினை நாம் அளிக்கலாமா? மாந்தரின் தோற்றமே கிறிஸ்தவ மயமாக்கப்பட்டுள்ள போது - அதாவது களங்கமில்லாத கர்ப்பம் தரிப்பது பற்றிய கோட்பாட்டின் காரணமாக களங்கமுற்றுள்ள போது கிறிஸ்தவனாக இருப்பதென்பது ஏற்புடையதுதானா? பெண்ணிடத்தில்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மென்மையும், கருணையுமுள்ளதாகக் கூறப்பட்டுள்ளவை, வேறெந்த நூலிலும் கூறப்பட்டிருப்பதாக எனக்குத் தெரியவில்லை. வெண்தாடிக் கிழவர்களும் துறவிகளும் பெண்ணிடம் வீரத்தைக் காட்டும் முறை தெரிந்தவர்; இவ்வகையில் வேறெவரும் இவர்களை மிஞ்சமுடியாது. மனு ஓரிடத்தில், 'பெண்ணின் வாய், கன்னியின் மார்பு, குழந்தையின் பிரார்த்தனை, யாகத்தின் புகை ஆகியவை எப்போதும் தூய்மையானவை' என்று சொல்லுகிறார். இன்னொரு இடத்தில் 'கதிரவனின் கிரணம், பசுவின் நிழல், காற்று, நீர், தீ, கன்னியின் மூச்சு ஆகியவற்றை விடத் தூய்மையானது வேறேதுவும் இல்லை' கடைசியாக அவரால் கூறமுடிந்ததொரு புனிதமான பொய் 'உடலில் தொப்புளுக்கு மேலுள்ள திறந்த பகுதிகள் தூய்மையானவை. தொப்புளுக்குக் கீழுள்ளவை யாவும் தூயவை அல்ல. கன்னியொருத்தியின் உடல் மட்டும் தான் முழுதுமாக தூய்மையானது' "[2] நீட்சே மனுவை போற்றிப் புகழ்ந்து, ஆணாதிக்கத்தை அங்கீகரித்து கிறிஸ்தவத்தை வெறுத்த விதம் இப்படித்தான். கிறிஸ்தவ எதிர்ப்பு என்பது உயர் மனிதர்களை படைக்கும் ஆற்றல் அற்றது என்ற அடிப்படையில், மனுவின் மனுதர்மம் பார்ப்பனிய உயர் சமூகத்தை படைப்பதில் இருந்தே ஏற்றுக் கொள்கின்றார். மனுவை நீட்சேயும் ஒப்பிட்டு ஆராயும் போது, நீட்சே 19ம் நூற்றாண்டின் இறுதியில், பார்ப்பனிய மயமாக்கலை ஜேர்மனிய ஆரிய சமூகம் சார்ந்து கோருகின்ற அந்தக் காலகட்டம் என்பது, ஏகாதிபத்திய மயமாதலை பாசிச மயமாக்குவதை அடிப்படையாகக் கொண்டே இது எழுகின்றது. மனு பெண்கள் பற்றி கூறிய ஆணாதிக்க அடக்குமுறைக் கோட்பாடுகளை விரிவாக எனது நூலான "ஆணாதிக்கமும் பெண்ணியமும்" என்ற நூலில் கண்க. பெண்கள் பற்றி மனுவின் ஆணாதிக்க அடக்குமுறையை பார்ப்பனிய பண்பாடாக உருவாக்கிய இருண்ட காலத்தை, 19ம் நூற்றாண்டில் போற்றி மெச்சி நீட்சே முன்மொழிவது என்பது, ஆணாதிக்கத்தின் வீழ்ச்சியை மீளவும் நிறுவும் முயற்சியின் விளைவே, நீட்சேயின் விளக்கவுரைகள். இன்று பின்நவீனத்துவத்தின் பின்னும், தலித்தியத்தின் பின்பாகவும் நீட்சே நுழைக்கும் நோக்கம், இந்திய சமுதாயத்தின் ஆணாதிக்கமும், சாதியமும், சுரண்டலும் தகர்த்து வரும் வர்க்கப் போராட்ட சமுதாய போக்கை, தடுத்து நிறுத்தும் ஒரு முயற்சியாகவே இது உள்ளது.



பார்ப்பனிய மயமான நீட்சே பெண்கள் பற்றி ஆணாதிக்க வழியில் கூறுவதைப் பார்ப்போம் "பெண்ணுக்கு ஆண் என்பவள் ஒரு வழிவகை தான். குழந்தை தான் அவளுக்கு எப்போதும் நோக்கம். ஆனால் ஆணுக்குப் பெண் என்பவள் என்ன? உண்மையான மனிதன் இரண்டு வித விஷயங்களை விரும்புகிறான்: ஆபத்தும் பொழுது போக்கும் தான் அவை. அதனால் மிகவும் ஆபத்தான விளையாட்டுக் கருவியாக பெண்ணை அவன் விரும்புகிறான். ஆண் போருக்காகப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதைத் தவிர மற்றவை எல்லாம் முட்டாள்த் தனமான பிழைகள். அதி தித்திப்பான பழங்களை போர்வீரன் விரும்புவதில்லை. அதனால் தான் அவன் பெண்ணை விரும்புகிறான். ஏனெனின் அதி தித்திப்பான பெண் கூட கசப்பாகத் தான் இருக்கிறாள்."[1] என்கிறான் நீட்சே. ஆணாதிக்கம் இப்படித் தான் பெண்ணை வருணித்து, இழிவுபடுத்துகின்றது. ஆண்களின் வலிமையான அதிகாரத்தில் பெண்ணின் கடமையை செய்வதே அவளுக்கு பணியாக மீளவும் கூறிய நீட்சேயின் விளக்கத்தையே, நாசிகள் தமது பாசிசத்தை உச்சத்தில் கொண்டிருந்த காலத்தில் நிலைநாட்டினர். பெண்களின் சுதந்திரங்கள் பல மறுக்கப்பெற்று பிள்ளை பெறவும், வளர்க்கவும், கணவனின் தேவைகளை பூர்த்தி செய்யும் படியும் கோரப்பட்டனர்.

பெண்களை நீட்சே சபிக்கும் போது "ஒரு விளையாட்டுக் கருவியாகவே பெண் இருக்கட்டும்! இனி வரப்போகும் உலகத்தின் நற்குணங்களால் ஒளியூட்டப்பெற்று அழகோடும், தூய்மையோடும் அதியற்புதமாகப் பிரகாசிக்கும் அபூர்வமான ஒரு வைரமணி போலவே அவள் ஒரு விளையாட்டுக் கருவியாக இருக்கட்டும். நட்சத்திரத்தின் ஒளி வீச்சு ஒன்று உங்கள் காதலில் மின்னட்டும்! 'அதிமனிதனை நான் பெற்றெடுப்பேன்' உங்கள் நம்பிக்கை சொல்லட்டும்."[1] மனுவின் அதே பிதற்றல்களையே, நீட்சே அதிமனிதனின் பெயரால் பெண்களுக்கு உபதேசிக்கின்றார். பெண் அடிமையாக இருக்க பெண் அடங்கியிருக்க "உங்கள் காதலில் வீரம் இருக்கட்டும்! உங்களை பயத்தால் தூண்டியெழுப்புகிறவன் யாரோ அவனை உங்கள் காதலாலேயே தாக்குங்கள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்கிறார். எந்த ஆணைக் கண்டு பெண் பயந்து நடுங்குகின்றளோ, அவனை வீரத்துடன் காதலிப்பது நல்லது என்கின்றான் நீட்சே. பயந்து அடங்கி வாழ்ந்தபடி காதலிப்பதே வீரத்தின் பண்பு என்கின்றான். ஆணாதிக்கத்துக்கு அடங்கி சலாமிட்டபடி காதலித்து பணிவிடை புரிய, பாசிச ஆணாதிக்க நீட்சே வலிமையின் வீரமாக இதைக் காட்டி, பெண்கள் ஆணுக்கு அடங்கி வாழப் பணிக்கிறான். பெண் அடங்கி வாழ்வதே சிறப்பு என்று கூறும் போது ''பெண் கீழ்ப்படியத் தான் வேண்டும். அதன் மூலம்தன் மேற்பரப்புக்கு ஓர் ஆழத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.'' கீழ்படிவின் கரைகாணவேண்டும் என்கிறார். அடங்கி வாழ்வதில் வலிமையின் வீரத்தை அடிப்படையாக கொண்டு மாமனிதனாக வேண்டும் என்கிறார். அடங்கி வாழ மறுத்தால் அவள் "அடக்கத்தை இழக்கிற பெண் ருசியை இழக்கிறாள்" என்றதன் மூலம், பெண்ணின் சுதந்திரம் அவளின் இன்பத்தையே சிதைப்பதாகும் என்கிறார். இதைவிட ஆணாதிக்கத்தை திணித்து சுதந்திரத்தை இந்தளவு அப்பட்டமாக யாரும் மறுக்க மாட்டார்கள். இதை மீறும் பெண்ணை நீட்சே எப்படி தூற்றுகிறான் எனப் பார்ப்போம் "பெண்ணொருத்தியிடம் பாண்டித்திய நோக்கங்கள் இருக்கின்றன என்றால் பொதுவாக அவளுடைய பெண் தன்மையில் (கருப்பையில்) கோளாறு இருக்கிறது என்று அர்த்தம்!"[1] என்று ஆணாதிக்க நீட்சே பெண்ணையிட்டு எச்சரிக்கின்றார். இலங்கை இந்திய பின்நவீனத்துவ தலித்தியல் வாதிகள் இதை ஏற்பதால் தான் நீட்சேயை முன்னிறுத்துகின்றனர். ஆணாதிக்க வாதியான நீட்சே பெண்களை எப்படி கருதுகின்றார் என்பதையும் சொல்லத் தயங்கவில்லை. அதை அவர் "வழியைத் தவற விட்டுவிட்டுத் தங்களை நோக்கிப் பறந்து வந்த பறவைகளாகவே பெண்களை ஆண்கள் கருதுகிறார்கள்'' என்று கூறுவதன் மூலம், பெண்ணின் சுய ஆற்றல் மறுக்கப்படுகின்றது. ஆணின் தயவில் வாழும் அளவுக்கு, அவள் வழி தவறியவள் என்கின்றார். அதாவது பெண், ஆண் சார்ந்து வாழ்வதே இயற்கையின் விதி என்கிறார். இதை மேலும் அவர் "பெண்களைப் பொறுத்த வகையில் அவர்களுக்கு ஒரேயொரு இச்சைதான் இருக்கிறது. தனக்கு ஏற்றவனாக அவள் யாரை விரும்புகிறாளோ, அவனை அடைவது தான்'' என்று நீட்சே பெண்களை இழிவு செய்து கொச்சைப்படுத்துகின்றான். பெண்ணின் இயல்பாக மேலும் "காதிலிப்பதிலும் சரி, பழி வாங்குவதிலும் சரி, ஆடவனைவிடப் பெண் தான் அதிகம் காட்டுமிராண்டித்தனமாக இருக்கிறாள்"[1] என்கிறான். ஆணின் பழிவாங்கும் நயவஞ்சகமான, சதித்தனமான, கோழைத்தனமான பண்புகளையும் நோக்கங்களையும் மூடி மறைக்க, பெண்ணை தூற்றுவது நீட்சேக்கு மாமனித கோட்பாட்டு நிபந்தனையாகின்றது. பெண்ணை காதலிப்பதாக காட்டி அவளின் தற்காப்பை உடைத்து, பாலியலை நுகர்ந்து எறிகின்ற போது, பெண் வெகுண்டெளுவதையே நீட்சே கண்டு சினந்து பெண்ணை இழிவுபடுத்துகின்றான். பெண் வஞ்சகமற்ற நேர்மையான பரஸ்பரக் காதலை பொதுவாக எதிர்பார்க்கின்ற போது, ஆணாதிக்கம் இதற்கு எதிர்மறையாக இருப்பது யதார்த்தமாக உள்ளது. இங்கு பெண் இதைக் கண்டு எதிர்த்து போராடுவதை, பாசிச நாசி நீட்சேயால் சகிக்க முடியவில்லை. அதனால் தூற்றுவதும், இழிவுபடுத்துவதும் அவரின் கோட்பாடாகின்றது. இதில் இருந்தே பெண்ணை நீட்சே வருணிக்கும் வடிவம் ''நிலா வெளிச்சத்தில் பெண்ணைவிட ஆணைத் தான் நான் அதிகம் நம்புவேன்"[1] என்பதன் மூலம் ஆணின் விபச்சாரத்தை மூடிமறைந்து, பெண் சோரம் போகின்றவள் என்பதையே, சொல்லாமல் சொல்லுகின்றார். இதில் இருந்தே பெண்ணின் கடமையை "போரட்டத்துக்குத் தகுதியான ஆண், தாய்மைக்குத் தகுதியான பெண். நடனமாடுவதற்குத் தகுதியாக இருவரும்!" என்றதன் ஊடாக ஆணின் கடமை உலகை அடக்கியாள்வதும், பெண்ணின் கடமை அடக்கியாளும் குழந்தைகளை பெத்துப் போடுவதுமே என்கிறார். இதை நீட்சே "பெண்ணுக்கு குழந்தைகள் தேவைப்படுகின்றன." என்று ஆணாதிக்க உலகத்தை பாதுகாத்து பாசிசத்தை கட்டமைக்க, அவரின் கோட்பாடு பெண் அடிமைத்தனத்தை மீளவும் உபதேசிக்கின்றார். பெண்ணை மனுவின் வார்த்தைகளில் கொச்சைப்படுத்தவும் தயங்கவில்லை. "ஆணைவிட கயமைத்தனமும் தந்திரமும் வாய்ந்தவள்"[1] என்று ஆண்களின் பண்புகளை பெண்களின் பண்பாக சித்தரிப்பதும், திரிப்பதிலும் சாதனை படைக்கின்றார். பெண் ஆணுக்கு அடங்கிப் போகவேண்டும் என்பதை "ஆண்களைக் கண்டு பயப்படுதலைக் கற்கத் தவறும் பெண் தன் பெண்மையின் அதி உன்னதமான இயல்புணர்வுகளைப் பலியிடுகிறாள்.'[1] என்று கூறி ஆணாதிக்க உலகத்தை பாதுகாக்க சபதம் ஏற்கின்றார். பெண்ணின் இயல்பும், இயற்கையும் அடங்கிப் போவது தான் என்பதையே, நீட்சே ஒப்புவிக்கின்றார். அதை அவர் ''பெண்களின் சமஉரிமைப் போராட்டம் என்பது நிச்சயமாக ஒரு வியாதியின் அறிகுறியே! ... பெண்ணிடம் எவ்வளவுக் கெவ்வளவு பெண்மை அதிகம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக அவள் உரிமைகளை எதிர்த்துப் போராடுவாள். இயற்கையின் நியதி அதுதான்."[1]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வளவு மோசமான ஒரு ஆணாதிக்கவாதியை நாம் சந்திக்கின்றோம் பெண் தனது விடுதலைக்கு போராடுவதை மறுக்கும் நீட்சே, அதை பெண் எதிர்த்துப் போராடுவதை மெச்சுகின்றார். ஆண்கள் பெண்விடுதலைப் போராட்டத்தையும் விடுதலையையும் தடுக்க முடியாது என்பதால், பெண்களை அதை எதிர்த்து போராடுவதன் மூலம் முட்டுக்கட்டை போட்டுவிட முடியும் என்று, நயவஞ்சகத்துடன் கூடிய கயமையுடன் நீட்சே முன்னிறுத்துகின்றார். நீட்சே தமிழில் முன்னிறுத்தும் பின்நவீனத்துவ தலித்தியல்வாதிகள் இதற்கு ஊடாக சாதிக்க முனைவதும் இதைத் தான். நீட்சே பெண்ணின் சமவுரிமை போராட்டத்தை வெறுப்பது போல், சமதர்ம அமைப்பையும் வெறுக்கத் தயங்கவில்லை. அதை அவன் "சமத்துவத்தைப் பற்றி போதிப்பவர்களே! சர்வாதிகாரக் கொடுங்கோன்மைப் பித்தின் ஆண்மையற்ற தன்மை தான் அவ்வாறு உங்களிடம் சமதர்மம் என்ற பெயரில் கூச்சலிடுகிறது" என்று தனது உயர் வர்க்க மாமனித சுரண்டும் நிலையை போற்றுகின்றான். மக்களின் விடுதலை பற்றி பாட்டாளி வர்க்கத்தின் போராட்டத்தை ஆண்மையற்ற தன்மையாக அடையாளம் காட்டி, அதை பெண்மையின் அங்கமாக சித்தரிப்பது, ஆணாதிக்க சுரண்டல் அமைப்பின் பார்ப்பணிய பாசிமூலமாகும். இது தான் நீட்சேயின் கோட்பாடாகும்.

1.சிந்தையாளர் நியெட்ஸே
2.டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு தொகுதி -6
3.அம்மா இதழ் -13
4.சனதருமபோதினி

# அகதியின் உருவாக்கம் உலகமயமாதலின் விளைவாகும்

அண்மையில் பிரஞ்சுப் பத்திரிகையான லிபரேசனுக்கு (LIBRATION - 15.12.2000), சிறந்த சிறுகதை எழுத்தளார் என்று ஒளிவட்டம் கொடுக்கப்பட்ட கலாமோகன் கொடுத்த கருத்துகளில், வலதுசாரி அரசியல் புளுத்துப் போய் வெளிப்பட்டது. இக்கருத்துகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக, பிரஞ்சு ஏகாதிபத்திய நோக்கத்தை திருப்தி செய்து, அதன் நலன்களை பாதுகாக்க முனைந்து நிற்பதை இனம் காட்டி அம்பலம் செய்வது அவசியமாகும். "பிரான்சில் புகலிடம் பெற்ற தமிழ் அகதிகளில் 90 சதவீதமானவர்கள், கள்ள (பொய்யான) அகதிகள் ஆவர். ஏனென்றால் இவர்கள் பிரஞ்சு பிரஜா உரிமை பெற காத்துக் கிடப்பவர்கள்" என்று சிறந்த சிறுகதை எழுத்தாளர் என புகழப்படும் கலாமோகன், தன்னைத் தானே நிர்வாணப்படுத்த தயங்கவில்லை. இந்தக் கூற்று சர்ச்சைக்குள்ளாகியதை அடுத்து, கலாமோகன் 23.12.2000 வெளியிட்ட துண்டுபிரசுரத்தில், லிபரேசன் பத்திரிகை தனது கருத்தை திரித்து, அகதிகளுக்கு எதிரான வகையில் பயன்படுத்திவிட்டதாகவும், அதை நிவர்த்தி செய்ய அவர்களிடமே இடம் கேட்டிருப்பதாகவும் கூறி, தனது சொந்த வலதுசாரி அரசியலுக்கும், பாலியல் வக்கிர இலக்கியத்துக்கும் கவசமிடமுனைகின்றார்.



அகதி என்பதன் விளக்கம் என்ன? ஏகாதிபத்தியங்கள் தனது வர்க்க நோக்கில் மட்டுமே, அகதி என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கின்றன. அரசினால் நேரடியாக தனிப்பட பாதிகப்பட்ட அரசியல் காரணங்களை உள்ளடக்கியே, அரசியல் புகலிடம் பற்றிய விளக்கத்தை கொண்டு மேற்கு நாடுகள் செய்ற்படுகின்றன. இதில் கம்யூனிஸ்ட்டுகளுக்கு அகதி அந்தஸ்து கொடுப்பதில்லை என்பதில் உறுதியாகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளனர். பொதுவாக வேறுபட்ட அணுகுமுறையை அரசினதும் சமூகத்தினதும் இனவாத நிறவாத கண்ணோட்ட அடிப்படையில், தமக்குள்ளும் முரண்பட்டே கொண்டிருக்கின்றன. அரசியல் காரணம் அல்லாத அனைவரையும் பொருளாதார அகதியாகவே கணிக்கின்றன. ஏகாதிபத்தியம் தனது உலகமயமாதல் நோக்கத்தை விரிவாக்கும் அடிப்படையில், ஜனநாயகத்தை பேணுவதாக காட்ட அகதி பற்றிய விளக்கவுரைகளை கூட மீறிய வகையில், கலாமோகன் "பொய்யான அகதிகள்" என்று கூறுவது வலதுசாரி அரசியல் கடைந்தெடுத்த பொறுக்கித்தனமாகும். ஏகாதிபத்தியம் பொய்யான அகதி என்பதற்கு பதில், பொருளாதார அகதிகள் என்றே குறிப்பிடுகின்றது. புலம்பெயர் தமிழர்களை ஆராயின் அரசியல் மற்றும் பொருளாதார அகதிகளை உள்ளடக்கியதே. சமூக ஆய்வை நாம் செய்யின், நேரடியாக அரசு மற்றும் இயக்கங்களால் பாதிகப்பட்ட அல்லது பாதிப்பை உணர்ந்தவர்கள் மட்டுமே அரசியல் அகதியாவர். மற்ற அனைவரும் பொருளாதார அகதியாகவே இருக்கின்றனர்.

அரசியல் அகதியும் சரி, பொருளாதார அகதியும் சரி ஏகாதிபத்திய நாட்டில் வாழ்வதற்கான போராட்டத்தில், பொய்யான அடிப்படைகளை கொண்டே பொதுவான அரசியல் அகதி அந்தஸ்து கோருவது என்பது, அகதியின் சொந்த வெளிப்பாடு அல்ல. மேற்கின் கடும் போக்கான இனவாதத்தையும் நிறவாதத்தையும் முறியடித்து தங்கி வாழ, இவை நிபந்தனையாகின்றன. உலகம் முழுக்க உலகமயமாதல் ஒழுங்கில் புகுந்து செல்லும் இவ் நாடுகளின் மூலதனமும் அதன் சொந்தக்காரர்களும் சுதந்திரமாக, ஜனநாயகமாக இயங்கும் போது, ஏன் உழைப்பவன் மட்டும் வேலியிட்டு தடுக்கப்பட வேண்டும். உலகம் முழுக்க எங்கும் சென்று வாழும் உரிமை மனிதனுக்கு உண்டு. அதை தடுக்கும் உரிமை மூலதனத்துக்கு கிடையாது.



ஆனால் வாழ்வில் மனிதனை சுரண்டிக் குவிக்கும் மூலதனமும், அதை வைத்திருப்பவனும் சுதந்திரமாக உலகெங்கும் இயங்க, அதன் அடிமைகள் அனைத்து வழியாலும் குறித்த எல்லைக்குள் அடிமையாக இருக்க நிர்பந்திக்கப்படுகின்றனர். இந்த வகையில் இதை அத்து மீறுபவன், உலகமயமாதலின் கோட்டை கொத்தளங்களின் மேல் உள்ள முள்ளாக மாறிவிடுகின்றான். ஏகாதிபத்திய நாட்டின் அடி வயிற்றிலேயே புகுந்து விடுவதால், வயிற்றிலேயே இது கருக்கட்ட தொடங்குகின்றது. இங்கு ஏகாதிபத்திய இன மற்றும் நிறவாத நோக்கத்தை முறியடிக்க, பொய்கள் மற்றும் இங்கு வாழ்வதற்கான போராட்டத்தில் மனித சமூகத்துக்கு எதிராக அல்லாத அனைத்துவிதமான வடிவங்களும் வழிவகைகளும் அவசியமான நிபந்தனையாகின்றது. எம் நாடுகளை ஈவிரக்கமின்றி சுரண்டி சூறையாடி, எமது நாட்டின் சுய பொருளாதார வடிவத்தை தகர்த்து அழிக்கின்ற போதும், எமது விடுதலைக்கான போராட்டங்களை அழித்து ஒழிக்க வழிகாட்டும் போது, பொருளாதார அகதிகள் பிழைப்பு தேடி நாடு பல கடந்து செல்வது ஒரு ஜனநாயக உரிமையாகின்றது. பிழைப்பு என்பது அதன் நிபந்தனையாகின்றது. சுரண்டலும், சூறையாடலும் தவிர்க்க முடியாத உள் நாட்டு யுத்தங்களை, எந்த வழியிலாவது மண்ணுக்குள் கொண்டு வந்துவிடுகின்றது. அரசியல் அகதிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றனர். அரசியல் மற்றும் பொருளாதார அகதிகளை உற்பத்தி செய்பவர்கள், இந்த ஏகாதிபத்தியத்தின் உலகமயமாதலாக இன்று உள்ளது. இந்த அகதிகளை பொய்யான அகதி என்று சொல்பவர்கள், வலதுசாரி கைக்கூலிகள் மட்டுமே.

எமது சமூகத்தின் அகதிகள் பற்றிய விமர்சனம், அகதியின் பொய்யான வாக்கு மூலங்கள் மீதும், மற்றைய நடவடிக்கைகள் மீதும் கட்டமைக்க முனைவது வலதுசாரித்தனத்தின் காட்டிக் கொடுப்பாகும். அரசியல் அகதியும் கூட பொய்களையும் கூற வேண்டிய நிலை ஏன் ஏற்படுகின்றது? இங்கு பொய் என்பது போராட்டத்துக்கானதும், வாழ்வதற்குமான ஒருவழிப்பாதைதான். பொய்கள், ஏகாதிபத்திய அமைப்பின் ஜனநாயகமற்ற இனநிறவாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வன்முறை மீது கட்டமைக்கப்படுவது நிபந்தனையாகவும், உரிமையாகவும் இருக்கின்றது.



எமது அகதிகள் மீதான விமர்சனம் அரசியல் சார்ந்ததாகவே இருக்கமுடியும். அது காட்டிக் கொடுக்கும் கைக்கூலித்தனத்தின் மேல் அல்ல. இங்கு அரசியல் சார்ந்தே அரசியல், பொருளாதார அகதிகளை வகைப்படுத்த வேண்டும். அண்ணளவாக 99 சதவீதமான பொருளாதார அகதியும், ஒரு சதவீதமான அரசியல் அகதியும் ஏன் புலம் பெயர் நாட்டுக்கு வந்தனர். அவர்களின் வர்க்க குணாம்சம் எப்படி உள்ளது என்று ஆராய வேண்டும். இதற்கு இலங்கையின் குறிப்பான எல்லா நிலைமைகளையும், உலகமயமாதலின் எல்லா தலையீட்டையும் பகுத்தாய்வு செய்யப்பட வேண்டும். அகதியின் நோக்கம், அரசியல் பொருளாதார அகதிக்கு இடையில் வேறுபாடுகள் பொதுவில் எப்படி தகர்த்துள்ளது என்று விமர்சிக்க வேண்டும். அவர்களின் வர்க்க நோக்கம் எப்படி, எதைக் கோருவதாக உள்ளது என்று விமர்சிக்கவேண்டும். பொதுவான யுத்த காரணத்தைச் சொல்லி தமது அகதி நிலையை நியாயப்படுத்தும், எல்லா வகையான பூர்சுவா நியாய வாதங்களையும் தகர்க்க வேண்டும். பூர்சுவாவின் மனப்பாங்கை அனைத்து தளத்திலும் பகுத்தாய்வு செய்து விமர்சிக்க வேண்டும்.

லிபரேசன் பத்திரிகை கலாமோகனின் கருத்துகளை உண்மையில் திரித்ததா எனின், நிச்சயமாக இல்லை. லிபரேசன் பத்திரிகை அகதிகள் சார்பான ஒரு நிலைப்பாட்டையே கடைப்பிடிக்கின்றது. தொடர்ச்சியாக அகதிகள் உரிமை தொடர்பாக பலபக்க செய்திகளையும், சிறப்பு விசேட இணைப்புகளையும் கூட லிபரேசன் வெளியிட்டே உள்ளது. லிபரேசன் பத்திரிகை மீதான விமர்சனம், அரசியல் ரீதியாக மார்க்கிய அரசியல் வழியில் செய்யப்பட வேண்டியவை. அகதிகளை ஒட்டியோ, நாசிகளுக்கு எதிராக அதன் போராட்டத்தையோ பொதுவாக குற்றம் சுமத்தமுடியாது. ஆனால் இந்த பத்திரிகை இந்த சமூக எல்லைக்குள் தீர்க்கும் முறை பற்றிய, சீர்திருத்தவாத முதலாளித்துவமே அரசியலே இங்கு விமர்சனத்துக்குரியதாக உள்ளது. அகதியின் தோற்றம் அதன் சமூக பொருளாதார காரணங்களை ஆய்வு செய்து, அதை வர்க்க போராட்டம் மூலம் தீர்க்க, வழிகாட்ட தவறுவது அதன் அரசியலாக உள்ளது. பிரஞ்சு வலதுசாரிகள் சார்பான இனநிறவாதிகளை அம்பலம் செய்து, பிரான்சின் பிரபலமான 54 கலைஞர்களின் இன நிற எதிர்ப்பு கேலிப்படங்களை, 17.2.1997 இல் சிறப்பு இனைப்பாக வெளியிட்டது. இது போன்று தொடர்ச்சியாக வாழும் உரிமை மறுக்கப்பட்டவர்களின் (விசா அற்றவர்களின்) போராட்டங்களை CGT போன்ற முன்னணி தொழில் சங்கங்கள் இணைந்து தொடர்ச்சியாக முன்னெடுத்து நடத்தும் போராட்டத்துக்கு, முன்னுரிமை கொடுத்து பல தொடர்ச்சியான சிறப்புச் செய்திகளை வெளியிட்டு வந்தது, வருகின்றது. இது போன்று அண்மையில் IBM கம்யூட்டர் உரிமையாளர் நாசிகளுடன் இரண்டாம் உலக யுத்தத்தில் நெருக்கமான தொடர்பு இருந்தை, பல பக்க தலைப்பு கட்டுரையில் ஆதாரத்தடன் 13.2.2001 இல் வெளியிட்டுள்ளது. இது போன்று பலவற்றை இப்பத்திரிகை வெளிக் கொண்டுவருகின்றது. ஆனால் கலாமோகனை கண்டித்து வெளியிட்ட சுகன், ஷோபா சக்தி துண்டுபிரசுரத்தில் "LIBERATION பத்திரிகை ஒன்றும் லப்பா சிப்பா பத்திரிகை கிடையாது. பிரெஞ்சு வெகுஜனக் கருத்தாடலை உருவாக்குவதில் பிரதான பாத்திரத்தை வகிப்பது, ஏற்கனவே எங்களை பொருளாதார

நாசிகளுடன் IBM முதலாளி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாசிகளுக்கு எதிராக லிபரேசன் வெளியிட்டவை

அகதிகள் என்றும், பயங்கரவாதிகள் என்றும் வெகுஜன ஊடகங்கள் எழுதிக் கொண்டிருக்கின்றன'' என்று எழுதுகின்றனர். அகதிகளை பயங்கரவாதியாக எங்கே எப்போது லிபரேசன் சித்தரித்துள்ளது. பொருளாதார அகதி, அரசியல் அகதி என்பதை அதன் அரசியல் எல்லை தான் வகுக்கின்றது. மறு தளத்தில் இதில் உண்மை உண்டு. பொருளாதார அகதி மறைமுகமான ஒரு அரசியல் அகதி என்பதை, மார்க்சிய பொருளாதார சமூக ஆய்வு மட்டுமே செய்கின்றன. லிபரேசன் போன்ற முதலாளித்துவ பத்திரிகைகளும், மற்றைய கோட்பாட்டாளர்களும் செய்வதில்லை. இதை நீங்களும் உங்கள் கோட்பாடுகளும் கூட செய்யப் போவதில்லை. இந்த சமூக அமைப்பில் அரசியல், பொருளாதார அகதிகள் என்ற இரண்டு பிரிவுகள் உள்ளதை மறுத்து, பொதுவான வகைப்படுத்தல் அரசிலற்ற சூனியத்தில் உருவாகுபவை தான். இலங்கையில் யுத்தப் பாதிப்பில் இருக்கும் அனைவரையும், நேரடியான அரசியல் பாதிப்பு கொண்ட ஒருவரையும் எது வேறுபடுத்துகின்றது. ஏது நாட்டை விட்டு ஓடவைக்கின்றது அல்லது எது தலைமறைவாக்கின்றது? புலம்பெயர் நாட்டில் அரசியல் செயற்பாட்டாளருக்கும், பொது மக்களுக்கும் உள்ள பாதிப்புகளை எது வேறுபடுத்துகின்றது? இங்கு அரசியலும், நேரடி அரசியலற்ற இயல்பான அரசியல் பொருளாதாரமுமே என்பது வெள்ளிடைமலை.

கலாமோகன் தனது கருத்தை லிபரேசன் திரித்து விட்டதாக கூறுவது என்பது அப்பட்டமான கதையளப்பாகும். இதை எதிர்த்து அகதிகள் சார்பாக வழக்கு போட முடியுமா? என்று சவால் விடுகின்றோம். இதற்கு ஏற்படும் செலவில் பங்களிக்கவும், உதவி செய்யவும் என்று தயாராகவே உள்ளோம் முடியுமா? இதை விட்டுவிட்டு திரித்து விட்டார்கள், மறுத்து எழுத அவர்களிடமே இடம் அரைப் பக்கம் கேட்டுள்ளேன் என்ற கதைகள், எல்லாம் மோசடித்தனமான தற்காப்பாகும்.

அடுத்து தான் ஒரு உண்மையான அகதியெனவும், பிரஞ்சு பிரஜா உரிமை பெறாதவர்கள் தான் உண்மையான அகதியென சொன்னதன் மூலம், புத்திஜீவித்தனத்தின் வரட்டுத்தனத்தை வலதுசாரித்தனத்தில் இருந்து வெளிப்படுத்தியுள்ளார். பிரஜா உரிமை பெற்றவர்கள் உண்மை அகதியல்ல, பெறாதவர்கள் அகதிகள் என்ற எடுகோள் அறிவுக்கும், அரசியலுக்கும் கிட்டக் கூட நெருங்க முடியாத சூனியத்தை வெளிப்படுத்துகின்றது. இவர்களின் இலக்கியங்களின் உள்ளடக்கங்களை, இதிலிருந்தே புரிந்து கொள்வதே சிறப்பானது. தான் அகதியாக காரணம் தினபதி பத்திரிகையில் (இங்கு பத்திரிகையாளன் என்று வலிந்து கூறப்படுகின்றது) வேலை செய்த போது நடந்த இனக்கலவரமும், அதை பார்த்து பயந்ததன் விளைவால் அகதியாக வந்தாராம். அதுவும் பிரஞ்சு நாட்டை தெரிவு செய்ய, பிரஞ்சு இலக்கியவாதி யாரோ ஒருவரின் நாவல் துணையாக நின்றதாக கூறி, தனது இலக்கிய மேன்மையை வலிந்து காட்டி மெச்சிக் கொண்டார்.

வலதுசாரி பத்திரிகையான தினபதியில் வேலை செய்த இந்த பத்திரிகையாளன், இனக் கலவரத்தால் நாட்டை விட்டு ஓடோடி வந்தாராம். இனக்கலவரம் நடந்து கொண்டிருந்த நிலையில் எப்படி அகதியாக இருந்தபடி, ரிக்கற் எடுத்து இனக்கலவரம் நடந்து கொண்டிருந்த பல வீதிகள் தாண்டி விமானம் வரை சென்று, இங்கு அரசியல் அகதியாக வரமுடிந்தது என்பதை லிபரேசன் கேட்கவில்லை. அத்துடன் பொதுவான இனக் கலவரத்துக்கு, அகதி அந்தஸ்து இங்கு கொடுக்கப்படுவதில்லை என்றும் சுட்டிக்காட்டவில்லை தான். 1983 கலவரம் தமிழ் மக்களை அகதியாக்கி, தமிழ் பிரதேசத்தை நோக்கி மக்களை கப்பல் கப்பலாக குடிபெயர வைத்த போது, இவர் பாதுகாப்பு அற்ற பிரதேசத்தில் இருந்தபடி பிரான்ஸ் செல்லும் வர்க்க கண்ணோட்டம், கடைந்தெடுத்த பொருளாதார பூர்சுவத்தனமாகும். இந்த அகதிகளின் துயரமும், போராட்டத்தை மேலே தள்ளிச் சென்ற வரலாற்றில், பூர்சுவா வலதுசாரிகள் நாட்டை விட்டே தப்பியோடி "பொய்யான" அரசியல் புகலிடத்தை மண்டியிட்டே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எடுத்துக் கொண்டனர். இவரின் அரசியல் புகலிடம் கூட பொதுவான இனக்கலவரம் மீதாக இருப்பதால், பிரஞ்சு அரசியல் அகதி உரிமை மீதான இவரின் கூற்றுப்படி "பொய்யான" அடிப்படை மீதே பெறப்பட்டதாகும். பொதுவான நிகழ்ச்சிக்கு அரசியல் புகலிடம் என்பது கிடையாது. அப்படி இனக் கலவரத்துக்கு இருக்க முடியும் எனின், தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் அது பொருந்தும். பிறகு ஏன் பொய்யான காரணம் என்று சொல்லி பிதற்ற வேண்டிக் கிடக்கின்றது. இறுதியாக இவர், தான் நாட்டுக்கு திரும்பிச் செல்ல முடியாது என்கிறார். காரணம் "யுத்தத்தால் எனது நாடு அழிந்துவிட்டது, நான் மீண்டும் அங்கு போக விரும்பவில்லை" எவ்வளவு கேவலமாக வலதுசாரி பூர்சுவ வாதங்கள். தன்னைத் தான் ஒரு பொருளாதார அகதி என்பதை, முடிவைக்க முடியாமல் தன்னையறியாமலே வெளிப்படுத்திவிடுகின்றார். பொருளாதாரம் அழிந்ததால் நான் செல்லவிரும்பவில்லை. உன்னிடம் இரண்டு கைகள் உழைக்க இருக்கின்றது என்பதை அடிக்கடி மறப்பவர்கள், வலதுசாரிகள் மட்டுமேயாவர். "புகலிடத்தில் வாழ்வதென்பது மரண தண்டனைக்கு ஒப்பானது" என்று கூறும் இவர், எம் நாடு சென்று உழைத்து வாழ்வது மரணத்தைவிட மேலானது அல்லவா. என்ன தான் கூறினாலும் ஒரு பூர்சுவா கனவு கொண்ட பொருளாதார அகதி இதை மட்டும் செய்யப்போவதில்லை. தனது வலதுசாரி அரசியலின் கண்ணோட்டத்தில் விளக்கங்கள் சொல்லி நியாயப்படுத்தியே, பொருளாதார பிழைப்புவாதம், இலக்கிய அரசியலாகின்றது.



# மூலதனப் பைத்தியம்

எனது மூன்று வயது மகன் "எனது பைத்தியம் எங்கே?" என தனது பொம்மை மாட்டைக் குறித்து கேட்குமளவுக்கு "மாட்டுப் பைத்தியம்" நோய் ஐரோப்பாவையும், உலகையும் உலுக்கி எடுக்கின்றது. உண்மையில் "மாட்டுப் பைத்தியம்" என்பது உண்மைக்கு மாறானது, மாறாக மூலதனத்துக்கு பைத்தியம் என்பதே சரியான அரசியல் உள்ளடக்கமாகும்.

"மாட்டுப் பைத்தியம்" என்பது இயற்கையை அதன் மரபில் இருந்து அழிப்பதில் தொடங்கியது. இது மக்களையே பீதிக்குள்ளாக்கியுள்ளது. ஏன் இந்த இயற்கை அழிக்கப்படுகிறது என ஆராயின், இது மூலதனக் குவிப்புக்கான பைத்தியமே இதன் அடிப்படையாக உள்ளது. மாட்டுக்கு தனது சொந்த இறைச்சி உட்பட வழங்கப்பட்ட தாவரவியல் அல்லாத உணவுகளே இந்த பைத்தியத்துக்கு மூலமாக உள்ளது. மூலதனப் பைத்தியம், குழந்தையை பெற்றெடுக்கும் பெண்களின் தொப்புள் கொடியைக் கூட மிருகங்களுக்கு உணவாக்கிய சம்பவங்கள் ஐரோப்பாவில் அண்மையில் அம்பலமாகியுள்ளது. மாட்டை குறுகிய காலத்தில் கொழுக்க வைப்பதன் மூலம், மூலதன பைத்தியங்களின் பைகளை கொழுக்க வைப்பதை அடிப்படையாக கொண்டே, இயற்கைக்கு விரோதமான உணவை கட்டாயப்படுத்தி திணிப்பதில், மனித இனத்துக்கும் இயற்கைக்கும் எதிரான தலையாய குற்றவாளியாக இந்த ஜனநாயக அமைப்பு காணப்படுகின்றது. இவை இன்று மாட்டுடன் மட்டும் மூடிமறைக்கப்பட்ட நிலையில் இது கோழி, ஆடு, பன்றி, குதிரை, மீன் என்று அனைத்து வளர்ப்பு உயிரினத்தின் மீதும் விரிந்தளவில், இந்தக் குற்றம் இழைக்கப்பட்டு தொடர்ந்து மூடிமறைக்கப்படுகின்றது. மாட்டு இறைச்சி மீது விதிக்கப்பட்ட தடை, பால் மற்றும் மாடு சார்ந்த எந்த உற்பத்தி மீதும் செய்வதை திட்டமிட்டே மறைத்து, மக்களின் அறியாமையில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றது. தொடர்ந்தும் மூலதனப் பைத்தியத்துக்கு பக்க வாத்தியம் வாசித்து அதை பாதுகாப்பதில், இந்த ஜனநாயக அமைப்பு மூலதன பைத்தியத்தின் சர்வாதிகாரமாக மக்களுக்கு மேல் திணிக்கின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கு விரைவான, அதிகரித்த உற்பத்தி மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதில் இருந்து உருவாகவில்லை. மாறாக மூலதனத்தின் குவிப்பு இதன் மையமான நோக்கமாகும். தாவரங்களின் மரபு அணுக்கள் அழிக்கப்பட்டு உருவாக்கப்படும் உணவுகள், பக்கவிளைவுகளுடன் மனிதனை நோக்கி பூதாகரமான அபாயத்தை உள்ளடக்கி, மூலதனச் சந்தையில் குவிக்கப்படுகின்றது. மறுதளத்தில் இறைச்சியின் உபரி உற்பத்தி அழிக்கப்பட்டும், அதை மீள அதற்கே உணவாக்கியும், மக்களை பட்டினியில் தள்ளியபடியே தான், ஜனநாயக சுதந்திரம் பூத்துக் குலுங்குகின்றது. மூலதனப் பைத்தியத்தின் கொழுத்துப் போகும் சுரண்டலை மூலதனமாக கொண்டே, இந்த மனித விரோதம் அரங்கேறுகின்றது. இன்று இந்த இறைச்சி உற்பத்தியில் தொடர்ச்சியாக பல்வேறு மனிதவிரோத, இயற்கை விரோத குற்றங்கள் இழைக்கப்பட்டு, தொடர்ச்சியாக மூலதனப் பைத்தியத்தை காப்பாற்ற மூடிமறைக்கப்படுகின்றது. கோழி வளர்ப்பு முதல் வளர்ப்பு உயிர் இனத் தொகுதியின் உயிர் வாழும் தற்காப்பு அழிக்கப்பட்டுள்ள நிலையில், மிக விரைவாக அதிக நிறை கொண்ட மூலதனத்துக்கான இறைச்சியை இழப்பின்றி தயாரிக்க, ஒவ்வொரு நாளும் தற்காப்பு கொண்ட அதி உயர் நோய் எதிர்ப்பு (அன்ரிபைற்றிக்) மருந்து உணவுடன் சேர்த்து வழங்கப்படுவது அம்பலமாகியுள்ளது. இந்த நோய்த் தடுப்பு மருந்தும் கூட, மனிதருக்கு கொடுக்கப்படும் அதே நோய்த்தடுப்பு மருந்து என்பது, இந்த ஜனநாயக அமைப்பின் நிர்வாணத்தை வெட்டவெளிச்சமாகியுள்ளது. இதன் மூலம் மனிதனுக்கு பயன்படுத்தும் நோய்த் தடுப்பு என்பதை கேள்விக்குள்ளாக்கி, மனித இனத்தை மூலதன ஜனநாயகத்தின் அடிமையாக்கி பலியிடுகின்றனர். நோய்த் தடுப்பின்றி உலகில் வருடம் தோறும் கோடி கோடியாக மக்களை கொன்று போடும் இந்த ஜனநாயக அமைப்பில், மூலதன பைத்தியத்தின் மூலதனத்தை பாதுகாக்க மனிதனுக்கு பயன்படுத்தும் நோய்த்தடுப்பை இயற்கைக்கு விரோதமாக பயன்படுத்தி, மனித விரோத வக்கிரங்களில் ஈடுபடுவதே ஜனநாயகத்தின் பொதுப் பண்பாகும். இது தவிர கொழுக்க வைக்கும் மருந்து ஐரோப்பாவில் மக்களின் போராட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள நிலையில், அவை போதைக்கு ஒத்த வகையில் சர்வதேச மாபிய கும்பலால் கடத்தப்பட்டு ஊடுருவுகின்றது. இதை சட்டவிரோதமாக வழங்கும் மூலதனப் பைத்தியங்களை கண்டு பிடிக்கும் அதிகாரிகள் சுட்டுக் கொல்லப்பட்ட தொடர்ச்சியான நிகழ்வுகள், ஐரோப்பிய ஜனநாயகத்தில் பூத்துக் குலுங்குகின்றது. கொழுக்க வைக்கும் மருந்துக்கு எதிராக போராட்டமற்ற மக்களின் மலட்டுத்தனத்தால், அமெரிக்காவில் மூலதனப் பைத்தியம் சார்ந்து சட்டபூர்வமாக அங்கீகரித்து, மிருகங்கள், வரைமுறையற்ற வகையில் வீங்க வைத்து கொழுக்க வைக்கப்படுகின்றது. கொழுக்க வைக்கும் மருந்தை உண்டு உருவாக்கிய இறைச்சியை உண்ணும் மனிதன், இறைச்சியின் ஊடாக அதே மருந்து மனித உடலில் இனைவதால், இயற்கைக்கு புறம்பாக கொழுத்து மனித ஆற்றலை இழந்து சீரழிவது அம்பலமாகியுள்ளது. உலகில் எங்குமில்லாத அளவுக்கு அமெரிக்காவில் அதிகரித்துச் செல்லும் கொழுத்த மனிதர்களின் வரைமுறையற்ற வீக்கம், அவர்களின் வாழ்வை அவலமாக்கின்றது. மூலதனப் பைத்தியம் இதை இட்டு அலட்டிக் கொள்வதில்லை. ஜனநாயக அமைப்பு இதை முண்டு கொடுத்து, இதை எதிர்ப்பதை ஜனநாயக விரோதமாகவும், பைத்தியமாகவும் சித்தரிக்கின்றது. எதிர்ப்பது மக்களின் சர்வாதிகாரம் என்றும், மூலதனச் சுதந்திரத்துக்கு எதிரானதாகவும் சித்தரிக்கின்றது. அதே நேரம் மூலதனப் பைத்தியம் மெலிவதற்கான மருந்தைக் கண்டு பிடித்துவிட தலைகீழாக நிற்கின்றது. இதன் மூலம் ஜனநாயக அமைப்பின் மூலதனப் பைத்தியங்களின் சுதந்திரத்தை பாதுகாக்க, அறிவை மக்களுக்கு எதிராக பயன்படுத்துகின்றது.



உண்ணும் உணவில் கூட இயற்கையான சுதந்திரத்தை மூலதனத்தின் பைத்தியதால் மனிதன் இழந்து போனான். இயந்திரமாகிய மனிதன் தனது சொந்த உழைப்புச் சுதந்திரத்தை இழந்து, மூலதனத்தின் விரிவாக்கத்தை உற்பத்தி செய்யும் உறுப்பாக மாறியது மட்டுமின்றி, இயந்திரத்தின் விளைவுகளையும் திண்டு தீர்க்கும், பண்ணை வளர்ப்பு சுதந்திர அடிமைப் பிராணியாகியுள்ளான். இந்த ஜனநாயகத்தை குழிதோண்டி புதைக்கும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரமின்றி, இந்த மூலதனப் பைத்தியங்களின் மக்கள் விரோத சுதந்திரத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்